
# சத்திய சாகர
# சத்சங்கம்



ஆசிரியர் :
ப.தனபாலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Collection of Suthumalai P.Sabaratnam
Ret.Cooporative Inspector
Donated by
Snr.Prof.N.Shanmugalingan Family

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்திய சாகர
# சத்சங்கம்

ஆசிரியர் :

ப. தனகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரம்

| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | ➢ | சத்தியசாகர சத்சங்கம் |
| ஆசிரியர் | ➢ | பஞ்சலிங்கம் தனகுமார் |
| மொழி | ➢ | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | ➢ | 2006 |
| பதிப்பு விபரம் | ➢ | முதல் பதிப்பு |
| நூலின் அளவு | ➢ | 1/8 |
| அச்சு எழுத்து அளவு | ➢ | 11 |
| மொத்த பக்கங்கள் | ➢ | 80 |
| அட்டை ஓவியம் | ➢ | எஸ். ஸ்ரீகமலச்சந்திரன் |
| அச்சிட்டோர் | ➢ | நியூ கீன் அச்சகம்<br>73, முனை வீதி,<br>மட்டக்களப்பு. **Tel : 065 - 2222204** |
| வெளியிட்டோர் | ➢ | கிருஷ்ணா புத்தகசாலை<br>திருமலை வீதி,<br>மட்டக்களப்பு. |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| பகுதி - i | ப. எண் |
|---|---|
| **கேட்போம் சத்சங்கம் கேட்போம்**<br>ஏன் இந்தப் படைப்பு<br>கடவுள் துணை (துதி)<br>01) சத்சங்கம் என்றால் என்ன?<br>02) இச்சத்சங்கம் எங்கே, யாரிடத்தின் கிடைக்கும்?<br>03) இச்சத்சங்கம் எதற்கு அவசியம்?<br>04) யார் யாருக்கு இந்தச் சங்கம் உதவும்?<br>05) சத்சங்கம் எப்படி இருக்கும் ?<br>06) சத்சங்கம் இன்றைய சத்சங்கம்<br>07) இங்கே ஒரு கருத்தைக் கூறுகிறேன், படியுங்கள்? | 11 |
| **பகுதி - ii** | |
| **எனது சத்சங்க அனுபவங்கள்**<br>01) கிட்டியது செய்தி<br>02) குருவை ஏற்றுக் கொண்டேன்<br>03) ஆத்ம ஞானத்தைப் பெற்றுக் கொண்டேன்<br>04) முதற் சத்சங்கத்தை நிகழ்த்தினேன். | 22 |
| **பகுதி - iii** | |
| **அனுபவத்தின் விளக்கம்**<br>**பொதுச் சத்சங்கம்**<br>1. சத்சங்கத்தில் எப்படி இருக்கலாம்<br>2. இவ்வுலகில் எப்படி இருக்கலாம்<br>3. மனதை எப்படி வைத்திருக்கலாம்<br>4. எங்கே இறைவனைத் தேடலாம்<br>5. இந்த வாழ்க்கை ஏன் இப்படி இருக்கிறது<br>6. இந்த நிமிடம் தான் நமது நிமிடம்<br>7. நாமபேதங்கள் நமக்கும் இறைவனுக்கும் இல்லை<br>8. நமக்குள் நாம் ஒளிந்திருக்கிறோம்<br>9. பொறுமையாக இருக்க ஒரு பாடம்<br>10. ஆசைகளிலும் தேவைகளிலும் சுயநலம் வேண்டாம்<br>11. குற்றங்களைச் சுமப்பது குற்றம்<br>12. மனோலயம் என்பது ஆலயமாகும் | 38 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி - iv

ப. எண்

**ஞானிகள் வார்த்தைகளில் உள்ள உண்மைகள்** 70

01) ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர்

1. ஆத்மஞானம் 2. கடவுள் 3. மாயை

02) சுவாமி விவேகானந்தர்

பாதை காட்டும் மதம்

03) ஸ்ரீ சாரதா தேவியார்

இறைவனும் அருளும்

04) திருமூல நாயனார்

குருபற்றிய தெளிவு

05) கௌதம புத்தர் (சித்தாத்தர்)

கால சக்ர நியதி

06) இயேசு கிறிஸ்து நாதர்

1) உடலே ஆலயம் உள்ளமே மோட்சம்

2) குற்றமே புரியாதவர்கள் யார்?

3) இறைவன் வேண்டுவது

4) கடவுளைக் காணும் ஆர்வம்

07) முகமது நபி

1) மன்னிப்போம்

2) கடமை எப்போது முடிகிறது

08) ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா

1) நம்மை நாம் தெரிந்து கொள்வோம்

2) கடவுள் அனுபவம்

**நன்றி மறத்தல் நன்றல்ல**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

''தாயிற் சிறந்த கோயிலுமில்லை
தந்தை சொல்மிக்க மந்திரமில்லை''

தாயார் :- திருமதி. மங்கையற்கரசி பஞ்சலிங்கம்
தந்தையார் :- திருவாளர். சுப்பிரமணியம் பஞ்சலிங்கம்

தாயின் மடியில் தவழ்ந்த நாட்கள் ஞாபகமில்லை எனக்கு, தந்தை முதன்முறையாக என்னைக் கையில் ஏந்திய காட்சியையும் காணவில்லை. நான் எனினும் அறிவு தெரிந்த நாட்களில் 10 வயது முதல் ஆத்மீகம் எனது வாழ்வை நிர்ணயிக்கத் தொடங்கியது.

சீராட்டி, நோய்காத்து அறிவூட்டி ''இரண்டு கைகளும் தட்டினாற் சத்தம் வரும் '' என்ற உண்மையின் அடிப்படையில் நீர் அடித்து நீர்விலகாது என்று பாசங்கொண்டு வளர்த்தவர் தாயார். கடவுள் வணக்கத்தில் பழிச் சொற்கள் இருக்கக் கூடாது என்று அறிவுரை ஊட்டினார். இன்றும் என் படைப்பை ஆர்வமுடன் படித்து மகிழக் காத்திருக்கின்றார்.

தந்தை கூறுவார் ''உன்னதமானதை நோக்கிச் செல்'' என்று. அதனை ஆங்கிலத்தில் **" Aim at Excellence"** என்று எமது மண்டபத் தாங்கும் குறுக்கு வளையில் எழுதியும் வைத்திருப்பார். இன்றும் பக்தனுக்குத் தரும் மரியாதையுடன் என்னைப் பார்க்கும் பண்பாளர். இவர்களுக்காக என் படைப்பைச் சமர்ப்பிக்கின்றேன்.

**மாறாத அன்புக்கு வடிவமாகும்**
**மாதாவும் துணையாகி பெற்றமக்கள்**
**ஏறாத புகழேணிப் படிகலேற**
**எழுமறிவுக் கதியாக்கும் பிதாவுமென்ன**
**ஆறாகும் நிலையாக்க ஆன்மீகத்து**
**அருளாளும் நூலாக்கி அவர்கள் - பாதம்**
**பேறாகச் சமர்ப்பித்து அவர்களீந்த**
**பிள்ளையென நாளாந்தம் பெருமைகொள்வேன்**

என்னும் தவமாமாவின் கவிதையையும் சமர்ப்பணத்திற்கு இணைவாக்குகின்றேன்.

***பஞ்சலிங்கம் தனகுமார்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை . . . . .

இந்தப்படைப்பை இறைவணக்கத்துடன் ஆரம்பித்தேன். என்னைப் படைத்தவன் என்னை அரவணைத்து, அருள்பாலித்து, ஒரு பாதையைக் காட்டி அதில் வரும் தடைகளைக் கடந்தேகத்துணையாய் வந்தான் என்றும் கூறினேன். அவனுக்குத் தெரியும் எவருக்கு எந்தவழி உகந்தவழி என்று ஆகையினால் எனக்குக் காட்டிய வழி எப்படி இருக்கும் என்றும் மிகவும் குறுகியே கூறினேன்.

என்னை நான் மெச்சமுடியாது எல்லாம் அவன் செயல் அவன் என்னைப்படைக்கத் தூண்டியிருப்பதே எங்கோ எவரோ அவன் தித்திக்கத் தித்திக்கச் செய்யும் சத்சங்கத்தை என்பாணியில் கேட்கத் தவித்துக் கொண்டிருப்பதை என்னால் உணரமுடிகிறது.

பொதுவானது என்று சத்சங்கங்களைப் படைத்திருக்கிறேன். அதற்கும் மிகவும் ஆழமான காரணம் இருக்கிறது. எந்த எந்தப் பாதையில் நாம் செலுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதும், அந்தப்பகலவன் வெளிச்சத்தில் அவரவர்க்குத் தெரியவரும் ஆகையால் இதில் உள்ள எல்லாம் போய்ச் சேரவேண்டிய உறவுகளுக்கும் மற்றவர்களுக்கும் சரியான நேரத்தில் அவன் சேர்ப்பிப்பான் என்பதில் உறுதியாய் நம்பிக்கை வைத்து இப்படைப்பைக் குறுகிய கால எல்லைக்குள்ளேயே முடித்துள்ளேன்.

எனக்குத் தேவைப்பட்டது எல்லாம் இதில் இருப்பது போல் என்னைச் சார்ந்தவர்களுக்கும் இருக்கும் என்பதும் எனது மனமுவர்ந்த கருத்து. 'போதும் எனும் மனமே பொன்செய்யும் மருந்து' ''ஈசனே ஆனாலும் ஆசை அறுமின் '' ஆத்மக்கடல் ஆழம் காண முடியாதது. இந்த இறுதி உரையிலே நான் கேட்ட, படித்த, சில ஞானிகளின் மொழியில் (வார்த்தைகளில்) உள்ள உண்மைகளையும் நமது மனதில் நாற்று மேடை அமைத்து, நாற்றுநட்டு, அதைப்பராமரித்து பலன் பெறுவதற்காக வித்துக்களாகத் தருவதில் பரவசம் அடைகிறேன்.

பல்லாயிரம் கோடி வணங்களைக் கூறிக் கொண்டு ''நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் '' என மீண்டும் கூறி இச்சத்சங்க - சத்திய சாகரத்தை உங்களுக்கு உரிமையாக்குகிறேன்.

***வணக்கம் ஓம் நமோநாராயணா***

**பஞ்சலிங்கம் தனகுமார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி . . . .

மனிதனுள் மறைந்திருக்கும் தெய்வீகத்தை வெளிப்படுத்த உதவும் ஒரு கருவியே சமயம், என்று சுவாமி விவேகானந்தர் சமயத்துக்கு மிக அழகான வியாக்கியானம் கொடுத்துள்ளார்.

மனித வாழ்வின் மேலான குறிக்கோள் இறைவனை அடைவது என்பதே அனைத்து சமயங்களினதும் மேலான முடிவாகும். 'அரிது அரிது மானிடராதல் அரிது" என்பது முதுமொழி. இறைவனை அடைவதற்காகவே பெறுதற்கரிய பேறாகிய மனிதப்பிறவி நமக்குக் கிடைத்துள்ளது. இந்த மனிதப்பிறவியை சிறந்த முறையில் பயன்படுத்திக்கொள்பவனே பாக்கியவான். அவனே பிறந்த பிறவியின் பயனைப்பெற்றவனாவான்.

எது உயர்ந்தது, எது தாழ்ந்தது, எது நல்லது, எது தீயது என்று பகுத்தறிந்து உயர்ந்ததை வாழ்வின் பாதையாக்கிக் கொள்பவனே விவேகி எனப்படுவான். நீரையும் பாலையும் கலந்து வைத்தால் அன்னப்பட்சி நீரை விடுத்து பாலை மட்டும் பருகுமாம். அதுபோல நல்லதும் தீயதும் கலந்த இந்த உலகில் மனிதன் நல்லதை எடுத்துக் கொண்டு தீயதை விட்டுவிட வேண்டும். இத்தகைய உயர்மனநிலையைப் பெறுவதற்கு சத்சங்கம் போன்ற சமய நிகழ்வுகள் பெரிதும் உதவுகின்றன என்று ஸ்ரீராமகிருஷ்ணர் கூறியுள்ளார்.

நூல் ஆசிரியர் இந்நூலில் தனது சமய வாழ்வில் ஏற்பட்ட ஏற்ற இறக்கங்களையெல்லாம் மிக விபரமாக, தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்கள். தான் சந்தித்த பெரியார்களின் சத்சங்க விபரங்களை யெல்லாம் மிகத் துல்லியமாக விளக்கியுள்ளார்கள். இந்நூல் சமய சாதகர்கட்கு ஆர்வத்தைத் தூண்டக்கூடிய நூலாக அமைந்துள்ளது. நூல் ஆசிரியருக்கு எமது வாழ்த்துக்கள்.

இறைபணியில்

சுவாமி அஜராத்மானந்தா

03.01.2006

(சுவாமி அஜராத்மானந்தா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை . . . . .

ஜீவராசிகளில் மிக உயர்வாகக் கொள்ளப்படுபவன் மனிதன். அம்மனித உள்ளங்கள் அனைத்திலும் இறையுணர்வுகள் பொதிந்தே உள்ளன. காலதேச வர்த்தமானங்களுக்கேற்பவும் பிறப்பமைப்பிற்கேற்பவும் அவ்விறையுணர்வுகள் சிலரிடம் வெளிப்படுகின்றன. அவர்களுட் சிலரே அப்பூர்வ எண்ணங்களைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளுகின்றனர். இங்கு இந்நூலில் '**சத்திய சாகர சத்சங்கம்**" என்னும் தலைப்பில் நூலாசிரியர் பஞ்சலிங்கம் தனகுமார் அவர்கள் தனது இறையுணர்வுகளை, ஆன்மீக எண்ணங்களை வெளிப்படுத்தியுள்ளார். ஆன்மீக எண்ணங்களுக்குச் சட்டங்கள், வரைபுகள் இல்லை. ஆமை போல் ஐந்தடக்கி தவளை போல் வால் அறுந்து வாழவேண்டும் என்று கூறுவதும் ஆன்மீக எண்ணங்களே.

அனுபவங்கள் தனது ஈடேற்றத்திற்கு மட்டுமல்ல அனுபவங்கள் நுகர்வோரின் ஈடேற்றத்திற்கும் உதவுபவையாகும். இவ்வகையில் நூலாசிரியர் **பஞ்சலிங்கம் தனகுமார்** அவர்கள் இந்நூலை நுகர்வோர் அனைவருக்கும் பகிர்ந்தளித்துள்ளார். கூறுவதைக் கூறும் வகையில் கூறப்படும்போதே கூறப்படும் பொருள் சிறப்பாக அமையும். இதற்கேற்ப நூலாசிரியர் தனது கருத்துக்களைச் சிறுசிறுகதைகள் மூலமாகவும், அவதார புருஷர்களின் மேற்கோள்கள் மூலமாகவும் எடுத்துக் கூறுவது சிறப்புக்குரியதாகும். எண்ணங்களுக்கு எழுத்துருக்கொடுத்து வடிவமைப்பது இலகுவான ஒருகாரியமல்ல. இக்கடினமான பணியை இந்நூலாசிரியர் வெற்றிகரமாக முடித்திருப்பது போற்றத்தக்கதோர் பணியாகும்.

சராசரி மனிதன் ஒருவன் எப்படி வாழ்ந்தான் என்பதை விட, எப்படி வாழ வேண்டும் என்பதே முக்கியமாகும். இதற்கு இந்நூலில் இடம்பெறும் சத்திய சாகர சத்சங்க உரைகள் பயனுறு வகையில் உதவும் என்பதில் ஐயமில்லை. நுனிக்கரும்பு எப்பொழுதும் சுவைப்பதில்லை. அதன் கீழ்ப்பகுதி அடிக்கரும்புதான் தித்திக்கும் என்பது போல் ஆன்மீகக் கருத்துக்களையும் மேலோட்டமாக நோக்காமல் அதில் ஆழ்ந்து, அமிழ்ந்து செல்வதே சாலப்பொருந்தும். சத்தியசாகர சத்சங்க உரைகள் ஆன்மீகத்தின் புலப்பாடே.

**க. விஜயரெத்தினம்**
ஏறாவூர் - 05.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்புரை . . . . .

"அரிது அரிது மானிடராதல் அரிது" என்பது ஔவை வாக்கு இதன் மூலம் பிறவிகளிலெல்லாம் உயர்ந்தது மானிடப்பிறவியே என்பது உணர்த்தப்படுகின்றது. இப்பிறவி அறிவுக்குரிய பிறவி; ஆண்டவனைப்பற்றி அறியக்கூடிய பிறவி. இப்பிறவியின் நோக்கமே ஆண்டவனை அடைதலாகும்.

மனிதன் இறைவனை இலகுவில் அடையமுடியாது. அது ஒரு நெடும்பயணம் பல பிறவிகளினூடாகத் தொடரவேண்டிய நீண்ட பயணம் இதை ஆன்மீகப் பயணம் எனலாம். இது ஆன்மாவின் பயணம் இப்பயணம் இறுதியாக இறைவனை அடைவதன் மூலம் நிறைவுறுகின்றது. ஆன்மாவிற்கும் இறைவனுக்குமிடையிலே- பாதையாகப் பயண் வழிகாட்டலாக அமைவது வழிபாடாகும்.

வழிபாடு இல்லத்தில் ஆரம்பமாகி இறைவனை நாடுகின்றது இல்லத்தில் வளரும் குழந்தை "அன்னையும் பிதாவும் முன்னறி தெவய்வம் " என்னும் ஔவைப் பிராட்டியாரின் பொன்மொழிக்கமைய பெற்றோரை வழிபடுகின்றது. அக்குழந்தை பிள்ளையாகக் கல்வி கற்கும் போது ஆசிரியரை வழிபடுகின்றான். கற்றலின் பேறாகத் தொழில் வாய்ப்பைப் பெறும்போது, தொழில் நிலையத் தலைவரை வழிபடுகின்றான் அதன்பின்தான் வாழும் சமூக வழிகாட்டிகளையும், சமயப் பெரியார்களையும் வழிபடுகின்றான். இத்தகைய வழிபாடுகள் மனிதனைப் பதப்படுத்தி, பக்குவப்படுத்தி ஞானத்தை ஊட்டி இறைவழிபாட்டுக்கு இட்டுச் செல்கின்றது.

இத்தகைய வழிபாடுகளில் ஈடுபடுகின்ற எல்லாருமே இறைவழி பாட்டுக்குரியவர்களாக மாறிவிடுவதில்லை. ஒருசிலர் மட்டுமே இந்த உன்னத நிலைக்கு உரியவர்களாக உயர்ந்து நிற்கின்றனர். இவர்கள் பூர்வ புண்ணியத்தின் பயனாகக் கருவிலே திருவுடையர் என்னுங் கருத்துக்குப் பொருத்தமாகின்றனர். இதற்குப் பெற்றவர் அணைவும் பிறந்த மண்ணுங்கூட காரணமென்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்திய சாகர சத்சங்கத்தின் ஆசிரியர் திரு.பஞ்சலிங்கம் தனகுமார் இவ்வாறான பேறுகளைப் பெற்றவர். இவர் பிறந்த மண் சித்தாண்டி.

**தேனாடாம் மட்டுநகர் வடக்கிலிந்தத்**
**திசையெல்லாம் புகழாடத் திகழும்பூமி**
**வானாடும் பனிஇமயத் தவத்தின் மேலோன்**
**வளர்சித்தின் சிகண்டிமுனிம் பெயரில்வள்ளிக்**
**கோணாடும் படைவீடாய்க் கோயில் கொண்ட**
**குதுகலத்துச் சித்தாண்டிக் குலையாப்பண்டை**
**ஆனாடும் உழவர்நிலம் அழகின்கோல**
**அணியாளுங் கலைமேடை அருமையம்மா !**

இங்கு சித்தர்களும், ஞானிகளும், செய்தவத்து யோகிகளும் சேர்ந்து மகிழ்ந்து திருவருள் பாலித்த வரலாறுகள் உண்டு. இந்த புண்ணிய பூமியிலே பிறந்த நூலாசிரியர் தனகுமார் அவர்கள், இளமையிலே ஆத்மஞானம் பெற்றவராக மாறிய தொன்றும் அதிசயமல்ல.

வாலிபத் தூண்டல்களுக்கு பண்பட்ட மனம் உள்ளாக்கப் படுமானால் வாழ்க்கை துலங்களில்லாமல் போய்விடும் பண்பட்ட மனத்திற்கு வாலிபத் தூண்டல்கள் உள்ளாக்கப்படுமானால் வாழ்க்கை ஒளிமயமாகிவிடும். இறைவழிபாடு என்னும் வாய்க்காலூடாகப் பாய்ந்து செல்லும் பக்தியெனும் புதுப்புனல் சத்திய சாகர சத்சங்கத்தில் கொண்டு சேர்த்துவிடும். இதற்கு ஆத்ம சாதகர்களின் அனுபூதிமான்களின் அருளுரைகளும், அனுபவ உணர்வுகளும் எம்மைப் பக்குவப்படுத்திவிடும். இதற்கேற்ப நூலாசிரியர் தனகுமார் அவர்கள், கீதை தந்த கண்ணனின் ஆசை கொண்ட அரவணைப்பில் கண்ட பேசும் இன்ப சுகத்தை நம் அனைவருக்கும் பரிமாற முனைகின்றார்.

நூலாசிரியர் அவர்கள் தமது சிந்தனைத் தெளிவைச் சொற்களாக்கி, சத்சங்கச் செயல்வடிவம் தந்துள்ளார். உரிய இடத்திலே, உவக்கும் நிலையிலே - பொருத்தமான சிறுகதைகள் மூலமும் அவதார மகான்களின் மேற்கோள்கள் மூலமும் தனது கருத்துக்களை எடுத்தாள்வது சிறப்புக்கும் பாராட்டுக்குமுரியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்திய சாகர சத்சங்கம் நான்கு பகுதிகளாக வகுக்கப்பட்டுள்ளது. சத்சங்கம் பற்றிய விளக்கம், நூலாசிரியரின் சத்சங்க அனுபவங்கள் அவற்றின் விளக்கம் உலகைத் திருத்திய உத்தமர்கள், ஞானிகள், மேதைகளின் தத்துவ உண்மைகள் என சத்சங்கம் விரிவுபடுகின்றது.

நீங்காத் தாகங் கொண்ட மான் நீரைத் தேடிக் கண்டது போல, ஆத்ம தாகங் கொண்ட நூலாசிரியர் தனகுமார் அவர்கள், அறிதுயில் கண்ணனின் அருளபயங்கண்டார்; ஆனந்த மனங் கொண்டார். அன்பின் உயர்நிலை அனுபவத்தை நமக்கு அள்ளித்தர முனைந்தார். அதுவே சத்திய சாகர சத்சங்கமாகியது. இதயத்துணர்வின் எழுநிலை வடிவமே இது. இதில் காணப்படும் உரைகளனைத்தும் ஆன்மிக வெளிப்பாடே அவற்றுள் ஆழ்ந்து அமிழ்ந்து அனுபவிப்போமானால், வழிபாட்டில் தெளிவடையலாம்.

**ஓய்வுபெற்ற அதிபர்**
**பொன். தவநாயகம்**
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை . . . . .

நான் மட்டக்களப்பில் வாழ்நத காலத்தில் என்சிந்தனை, சொல், செயலுக்கு நம்பிக்கையூட்டிய இடம் ஒன்று இருந்தது. அந்த இடம் மட்டுநகர் திமிலைத்தீவில் கிருஷ்ணன் ஆலயமாக இருக்கிறது. இன்று நான் அந்த ஆலயத்திற்கு அருகிலும், இல்லை. தொலைவிலும் இல்லை வெகுதூரத்தில் கடல்தாண்டி இருக்கின்றேன்.

எனது இறைவனாக இஸ்ட தெய்வமாக, குருவாக மற்றும் பல வடிவிலே இருந்து இன்று இந்த சத்திய சாகர சத்சங்கத்தை உருப்பெற வைத்துக் கொண்டிருக்கிறார். அவனருள் விளையாட்டினை, தெய்வீக லீலைகளை அனுபவித்துக் கொண்டிருக்கும். பல்லாயிரம் ஏன் கோடிக் கணக்கிலான அவன் பக்தர்களின் பட்டியல் மிக நீளமானது.

கடந்த வருடம் (2005) பங்குனி மாதம் அந்தத் திமிலைத்தீவு கண்ணனிடம் சென்றிருந்தேன். அந்த ஆலயத்தின் பூசகர் வார்த்தை மூலம் ஒருநாள் கணக்குக் கொடுத்திருந்தார். அந்தநாள் கணக்கின்படி அன்றிலிருந்து ஒன்பது மாதங்களில் எனக்குப் பிள்ளைப் பாக்கியம் கிட்டிவிடும் என்று கூறப்பட்டது.

அந்த வாக்கு இறுதி நிமிடம் வரை தங்கியிருந்து இன்று நிறைவேறியிருக்கிறது. எனினும் இடைக்காலத்தில் (மூன்று மாதம் வரை) மனதில் பல எண்ண அலைகள் தோன்றின. ஆனால் அந்த வாக்கு எனது இஸ்ட தெய்வமான ''அவன்'' வார்த்தை என்பது எனக்கு மட்டும் (உள்ளுணர்வாகத்) தெரியும். என்பதனாலும் , பலர் சம்பந்தப்பட்ட குடும்ப விடயம் என்பதனாலும் உண்டான நெருடல் மனதை உருக்கியது.

இப்படிப்பட்ட அவன் செய்யும் உதவிகளுக்கு வசமாகிவிட்ட அவர்கள் "அவன் சோதிப்பான் ஆனால் கைவிட மாட்டான்" என்கின்றார்கள். எனது நம்பிக்கை ஒருபுறம் இருக்க, வெகு அண்மையில் இல்லாதது தொலைவில் இருந்தாலும் மனமானது உபவாசம் செய்து கொண்டிருந்தால் அவன் செயல்களுக்குத் தினம் தினம் நன்றி கூறிக்கொண்டே இருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தத்தை அள்ளித் தரும் எனது தெய்வத்தை மறவாது நன்றியுள்ளவனாக இருக்கின்றேன் என்பதை விட, பகவான் பரமஹம்சர் கூறுவதுபோல் ''காய்ந்த ஒரு சருகுபோல்'' இந்தப் பூவுலகில் வாழ்ந்து கொண்டிருந்தால் அவன் சுலபமாக எம்மை எங்கு எப்படி வேண்டுமோ அப்படிக் கொண்டு சென்றுவிடுவான். இப்படி ஆக்கப்பட்ட மனமொன்றைத் தந்துவிட்ட எனது தெய்வத்திற்கு முதல் நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

என்னை நான் சரி பார்த்துக் கொள்ளச் சத்சங்கம் செய்யவேண்டும் அதை எழுதிவைத்து அவ்வப்போது அசைபோட்டுக் கொண்டால் அவன் கருணையில் இன்புற்று மனதை இச்சை கொள்ளச் செய்யலாம் என எண்ணிய எனது மனதைப் போற்றி அதற்கு நன்றியைச் செலுத்துகின்றேன்.

எவன் தன்னை நேசிக்கத் தெரிந்திருக்கின்றானோ அவன் அடுத்தவர்களையும் நேசிக்கத் தெரிந்திருக்கின்றான்'' என்ற கருத்தில் உண்மை இருக்கின்றது என்பதற்கு இந்தப் படைப்பை எல்லோருக்கும் பயன்படும்படி, பொதுவான சத்சங்கங்களாக அமைத்து இருக்கின்றேன். இவை அனைவரையும் கவரத்தக்கவிதமாக, அனுதினமும் படித்துப் பலன் பெறத்தக்கதாக அழகான நூலாக இரவு பகலாக உழைத்த மூவரைக் காண்கின்றேன்.

**தவமாமா** :- திரு. பொன் தவநாயகம் அவர்கள் (கவிஞர் ஓய்வுபெற்ற அதிபர்) கணீர் என்று மணியோசை கேட்கும் அப்படித்தான் மாமாவின் குரலும் ஒலிக்கும். உறவுகள் அனைத்தையும் அன்புடனும் முறையுடனும் அழைத்துப் பக்குவமாகப் பேசும் பண்பாளர். எனக்காக ஏற்றிருக்கும் நூலாக்கப் பொறுப்புக்களுக்காக அவருக்கு ஆழமான நன்றியுடையவனாக இருக்கின்றேன்.

**விஜய்மாமா** :- திரு.க.விஜயரெத்தினம் அவர்கள் (கல்வித் திறனாளர், ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்) தகை சான்ற நெஞ்சும் இனிமை தழுவும் சுபாவமுடைய என் தாய்மாமன், நூலாக்கத்திற்கான ஆலோசனைகளுக்கும், அமைப்புத் திருத்தங்களுக்கும் உதவியவர் அவருக்கு எனது இதயங்கலந்த நன்றியைக் கூறுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீகமல் :- திரு. எஸ்.ஸ்ரீகமலச்சந்திரன் அவர்கள் (சித்திர சேவைக்கால ஆலோசகர், உயர் விருதின் ஓவியர்) எனது நூலுக்கு அட்டைப்படம் எப்படி அமையவேண்டுமென்று எண்ணினேனோ, அந்த எண்ணம் வண்ணமாக, இதயங் கவரும் கண்ணனின் குழலினிமைக் கோலமாக அப்படியே அமைந்திருப்பதைக் காண்கின்றேன். இந்த ஓவியக் கலைஞருக்கு எனது உளங் கனிந்த நன்றிகள்.

இவர்களுடன் சேர்ந்து மேலும் பலர் இந்நூலாக்கத்திற்கு உதவியிருக்கலாம். அவர்களையெல்லாம் என்னால் அறிய முடியா திருந்தாலும் அவர்கள் அனைவருக்கும், விசேடமாக இந்நூலைப் பக்கத்திற் பக்கம் அழகாகவும் அச்சுப் பதிவாக, சத்திய சாகர சத்சங்கத்தை உயர் கட்டமைப்பாக்கி உதவிய மட்டக்களப்பு நியூ கீன் அச்சகத்து உரிமையாளருக்கும் உடன் பணிசெய்த அச்சக அலுவலகர்களுக்கும் உணர்வாளும் எனது உளமார்ந்த நன்றிகள்.

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் அன்னைபோல நானும் இந்நூலைப் படிக்கப் போகின்றேன்; நீங்களும் படிக்கப் போகின்றீர்கள். எனக்கு நான் அன்பு செலுத்தி நன்றி கூறியதுபோல உங்கள் அனைவருக்கும் நன்றியைக் கூறிக்கொள்கின்றேன்.

*என்றும் அன்புடன்*
**பஞ்சலிங்கம் தனகுமார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்திய சாகர சத்சங்கம்

## பகுதி – I

### கேட்போம் சத்சங்கம் கேட்போம்

**ஏன் இந்தப்படைப்பு :-**

இப்படைப்பு எனது சத்சங்கத்தில் இருந்து பிறந்தது. இது எனது சிந்தனைக்கு முதலில் தோன்றியது.

இப்படைப்பு எனது உள மகிழ்வுக்காகவும், என்னைச் சார்ந்தவர்களின் ஆத்ம சிந்தனைக்காகவும் அதே வேளையில் மற்றும் எல்லோருக்காகவும் ஆகும்.

எல்லாவற்றிற்கும் மேலாக "**நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்** என்று கூறும் திருமூலர் நாயனாரின் மந்திர வரிகளில் மிகவும் காதல் கொண்டதினாலும் உருவாக்கம் அடைந்துள்ளது. இச் சத்திய சாகர சத்சங்கத்துளிகள்.

**கடவுள் துணை :-**

எல்லாம் இன்பமயம் என்று கூறின் - முனியோகனே
என்றாளும் இன்பம் மிளிரக் கருதிடுவாய் - வினாயகனே

கருணை கொண்டனை என்பால் பல மடங்காய் - எனினும்
கருத்தினைக் கலையாது பேணிக் காப்பாய் - கிருஷ்ண நாராயணனே

மேல் நோக்கி நிற்கும் நின் வேல் போல் - இப்படைப்பிற்கு
மேன்மையாய்த் துளிரும் ஊக்கம் கொடுப்பாய்-வேள்வி முருகப்பெருமானே

பண்டிதர் பலர் படைப்பிற்குக் கொடைக்காவலாய் - அவர் அவர்
பக்திப் பணி மெச்சி மெய்யுணர்வூட்டும் பதிபாதியாயமும் பராசத்தியே

பிழையற என் படைப்பினை சிறியோன் யானும் - கூடவே
பிறப்புறவுகளும் பிறரும் படித்துப் பலன்பெற - சத் மொழி தந்துதவுவீர்

சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**01) சத்சங்கம் என்றால் என்ன?**

காலம் காலமாகக் கொடுத்து வரப்பட்ட ஆத்ம சாதக சாதனையாளர்களின் உரைகளும் உரைப்பேறுகளும் சத்சங்கம் என்று கருதப்படும்.

இதைக் கேட்டு அனுபவிக்கும் அன்பர்களின் சேர்க்கையும் சத் அல்லது சத்சங்கம் ஆகும்.

நாம் படைத்தவனை, படைப்பாளியை அதாவது உயிரை அறியும் அறிவை முதலில் நாம் பெறவேண்டும். அந்தப்படியிலே முதற்படியாக மனிதனைப் பக்குவப்படுத்தி ஞான உபதேசத்தைப் பெற்று குரு ஒருவர் நம் ஞானக்கண்ணைத் திறப்பதற்கு முன் புறக்கண்ணாக உதவும் புலன் பக்குவ உரைகளே சத்சங்கம் என்பேன்.

**02) இந்த சத்சங்கம் எங்கே யாரிடத்தில் கிடைக்கும்**

ஒரு குருவினிடத்தில் அன்றைய முற்காலத்தில் இருந்து இக்காலம் வரை ஆத்ம அனுபூதியை நாடவும், நாம் வாழும் உலகத்தைப் புரியவும், நம்மை நாம் அறியவும், அதற்கு அப்பால் உணரவும் இந்தச் சத்சங்கம் உரையாகக் கிடைக்கும்.

இந்த உரைக்காகக் குருவானவர்கள் வசிக்கின்ற இடத்திற்கு வனமானாலும் குகையானாலும், சோலையானாலும் அல்லது நம் எண்ணத்தில் தவிப்பு ஏற்படும் போது அவ்விடமே சத்சங்கம், சாலையாக மாறிவிடும் அற்புதத்தினைக் காணலாம்.

இங்கே ஒரு உள்ளான கருத்தைக் கவனிக்க வேண்டி இருக்கிறது அது என்னவென்றால் ஏணிப்படியிலே ஏறி மேலே செல்பவர் மேலே சென்றடைய வேண்டிய இடத்தை கீழிருந்து மேலே பார்ப்பதைப் போல இருக்கும். செல்வது எங்கோ அடைவதும் அங்கே.

நமது மனம் அடையவேண்டிய உன்னத நிலைக்கு மிகவும் அண்மையில் வந்து விட்டால் நாம் இருந்த இடத்திலேயே நமது உள்ளான தெய்வீக சக்தியே சத்சங்க ஸ்தானமாக மாறிவிடும் தேடிச்சென்றுதான் குருவிடம் சத்சங்கம் பெறுகின்ற நிலை என்பது ஒரு நிலை குருவே நம்மை தேடிவருவார் அல்லது ஒருவர் எமக்காக எப்படியோ அனுப்பி வைக்கப்படுகின்றார் என்பது இன்னொன்று மற்றும் பல வழிகளிற் கூட சத்சங்கம் கிடைக்கும். அது யார் யார் என்ன மனோநிலையில் இருக்கிறார்களோ அதற்கேற்ப சத்சங்கம் கிடைக்கப்படும் இடம், காலம் சூழல் என்பன அமையும் விதம் கூட வேறுபடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அற்புதத்தை ஒரு சாதாரண கண்ணோட்டத்துடன் பார்த்து படித்து முடிவுகட்டி முக்கியமான, காரியமான, காரணமான, அவசியமான செயற்பாடுகளைக் கடைக்கொள்ளாது, நம்மில் சிலர் முன்னோக்கிச் செல்லாதும் சிந்தனையை வளர்க்காதும் விட்டுவிடக்கூடும் என்பதற்காக, இங்கு நான் இந்தக் கருத்துக்களை விளக்காது பின்பு கூற விடுத்து மேலே செல்கின்றேன் உள்ளே சென்று பார்ப்போம் வாருங்களேன்.

**03) இச் சத்சங்கம் எதற்கு அவசியம்**

எப்போதுமே அன்றையக் காலத்தில் என்று தொடங்கிப் பின் இன்றையக் காலம் என்று ஒரு துல்லியமாகக் கூறுவார்கள்.

நாம் நேரடியாக இன்றைய ஒரு கிராமத்திற்குச் செல்வோம் ஒரு விடுமுறைக்காக ஒரு வீட்டில் தங்கிய ஒருவாலிபன் அந்த வீட்டின் மாடியிலிருந்து கீழே நடப்பவைகளைப் பார்க்கிறான்.

அந்த வீட்டின் பெரியவர் வருகிறார். அவர் வீட்டின் பின் தோட்டத்தில் நடந்து சென்று ஒரு மரத்தில் (வேப்பை மரம்) இருந்து ஒரு குச்சியை முறித்து எடுத்து அதனைக் கைக்களவாக முறிக்கிறார். பின் அதைப்பக்குவமாகத் தனது வாயில் வைத்துப் பல்துலக்கிய படி தோட்டத்தில் வலம் வருகிறார். பின் நீராட ஒரு திறந்த வெளிக் கிணற்றடிக்குச் செல்கிறார். நீராடிய பின் உடைமாற்றிக் கொண்டு வீட்டுக்குள் வருகிறார் பூஜை அறைக்காக ஏற்கனவே அவர் தோட்டத்தில் இருந்து பறிக்கப்பட்ட நல்ல மணம் வீசும் மலர்களை அவர் மகன் பக்குவமாகக் கூடையில் வைத்திருந்த இடத்திலிருந்து எடுத்துப் பூசை அறைக்குள் சென்று பூஜை முடித்து வெளியில் வருகிறார். அவர் வந்து மண்டபத்தில்உட்காருகிறார். சமையல் அறையில் இருந்து அவர் மனைவியார் நறுமணம் ஆவிவடிவில் மேலெழும் வகையில் பாற்கோப்பி கொண்டு வந்து கொடுக்கப் புன்னகையுடன் பெற்றுக் கொண்டு பருகினார்.

இந்த நிகழ்ச்சிகளை எல்லாம் அவர் வீட்டின் மாடியில் நிற்கும் வாலிபன் பார்க்கிறான். அவர் அழகாக ஆடை மாற்றிக் கொண்டு வீட்டின் வாசல் வழியாக வெளயே செல்கிறார். பாதைக்கு வருகிறார். ஏற்கனவே நடமாட்டம் தொடங்கிவிட்ட ஒரு சாலை பலரும் பல பணிகளையிட்டு இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். சூரியனின் காலைக்கதிர்கள் எங்கும் பரவத் தொடங்கிவிட்டது. அவர் வீட்டை விட்டு வெளியேறி எதிர்ப்புறம் இருக்கும் பஸ்த்தரிப்பில் வந்து நிற்கிறார். அந்தப் பத்து நிமிடம் விபரிக்க விபரிக்க விரியும் அளவுக்கு நெகிழ்வாக இருக்கிறது. பஸ் வந்து அதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பெரியவர் ஏறிச் செல்லும் வரை அவரைப் பலர் கடந்து செல்கின்றனர். அத்தனை பேருமே அவரைப்பல்விதமாக மனம் குளிரவும் நெகிழவும் ''வணக்கம் ஐயா '' என்பதும் ''சவுக்கியமா ஐயா ' என்பதும் இரு சக்கர வாகனங்களில் சென்ற பலர் அவர் அண்மையில் சென்று நின்று பேசிச் செல்வதையும் மாடியில் நின்று பார்த்து வியந்தான் அவ் வாலிபன்.

நாம் மீண்டும் நமது தலைப்பிற்கு வருவோம் சத்சங்கத்தின் அவசியத்தை விளக்க ஒரு கிராமத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சியைக் கூறினேன்.

இந்த உலகத்தில் நாம் இருக்கின்றோமே! நாம் எப்படி இதில் இருக்கின்றோம்? என ஒரு கணம் முன் கொண்டு வந்து பாருங்கள். அதைக் கண்களை மூடிக்கொண்டு ஒரு முழு நாளின் நிகழ்வுகளை நினைவிற்குக் கொண்டு வந்து படம் போட்டுப்பாருங்கள்.

இனிக்கிறதா? கசக்கிறதா? அல்லது இனிப்பும் கசப்பும் கலந்திருக்கிறதா? அப்படியும் இல்லாது ஒரு மந்தமாருதமாக இருக்கிறதா? என்பதை அனுபவித்துப் பாருங்கள்.

இப்படி நாம் பார்க்கின்றோம் இதில் சத்சங்கம் எங்கே வருகிறது என்ற கேள்வி கூடவே வருகிறது அல்லவா !

ஆமாம் ! நான் மேலே கூறிய கிராமத்தில் ஒருவரின் செயற்பாடு எப்படி இருந்தது? அவருக்குச் சார்ந்தவர்கள் எப்படிச் செயற்பட்டார்கள் என்ன என்ன செய்தார்கள்? எனப் பாருங்கள் பின் அவரை அறிமுகத்தாற் சுற்றி இருந்தவர்கள் எப்படி நடந்து கொண்டனர் ? என்பதையும் அப்பால் இதைப் பார்த்துக் கொண்டிருப்பவர்கள் நீங்கள் என்று வைத்துக் கொண்டு உங்கள் உணர்வை அவ்வப்போது அந்த அந்த நிமிடத்தில் நிறுத்திப் பாருங்கள் உள் மனத்தோடு உறவாடிப் பாருங்கள்.

நம்மில் பலர் மனம் என்பதைச் சரியாக அறிந்து கொள்ளவில்லை தற்போது மனம் என்பதை விபரிக்காமல் ஒரு விடயத்தைக் கூற விரும்புகிறேன்.

நாம் எல்லோரும் சிறு குழந்தையாக இருக்கையில் நம்மைச் சுற்றிப் பல நிகழ்வுகள் நிகழ்ந்தன. என்பதை அறிவதில்லை. பெரும்பாலான மனங்களின் பக்குவம், சஞ்சலம், மறதி, கற்பனை நிலைக்காத தன்மை, என்ற பற்பல நிலைகள் சிதறியோ அல்லது குவிந்து கூர்மையாகவோ எமது வாழ்க்கைச் சக்கரத்தில் செயற்படுவதைப் பார்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி எல்லாம் இருக்கும் நமது மனமானது சத்சங்கங்களைக் காதினாற் கேட்கக் கேட்க என்ன நிகழ்கிறதோ அது நம்மை நாம் நமக்குள்ளேயே படம் பிடித்துக் காட்டி நமது ஒவ்வொரு நாளின் ஒவ்வொரு நிமிடமும் படம் போல் படிந்துவிடும். இதனால் மனோ லயம் ஏற்படும். இதன் மூலமாக நம்மை நாம் உள்ளபடி உணரலாம் உலகை உணரலாம். நமது எந்த எந்தக் காரியங்கள் விட்டுவிடப்பட வேண்டியவையோ அவை நீங்கிச் சேரவேண்டியவை சேர்ந்து ஒரு நிறைகுடமாகத் தளம்பாமல் நிம்மதி, நிதானம், ஞானம் ஒளிவிட என்றென்றும் உயிருடனேயே வாழ வழி வகுக்கும் நிவாரணியே சத்சங்கம்.

இத்தருணத்தில் ஒரு விடயத்தைக் கூறுகிறேன் ஒரு மனோ லயம் தேவையானதால் குரு ஸ்தோத்திரத்தில் ஸ்ரீ கிருஷ்ணர் சத்சங்கம் ஒன்றைப் பார்த்தனுக்குச் செய்கிறார். அதன் சாரம் தான் பகவத்கீதை. இந்தச் சத்சங்கம் தான் அருச்சுணன் என்ற பார்த்தனுக்கு பகவானின் சுயரூபத்தையும் அதேநேரத்தில் அவனையும் அறியக் காட்டியது.

இதை நாம் படித்துக் கொண்டே எவ்வளவு நன்மை பெறுகிறோம். அதே போல் நாம் நமது நிலையையும் உயர்த்திப் பார்த்து மகிழ்வான ஒரு ஜீவாத்மாவாக மாற வேண்டிய அவசியம் யார் யாருக்கெல்லாம் தோன்றுகிறதோ அத்தனை பேருக்கும் சத்சங்கம் கிட்ட வேண்டும் என்பது தான் என் அவா.

அவசியம் என்று எதையெல்லாம் நினைக்கும் மனம், ஒரு தருணமாவது சத்பொருளை எந்த ஒரு நபர் நாடினாலும் வயது, ஜாதி, மத, பேதமை இன்றிச் சத்சங்கத்தில் அடையும் சமரசம் பரவசம் என்பவை ஜீவன் முத்தியினால் ஒரு சிறிய ஜீவராசியைக் கூட மாற்றிவிடும். இது உண்மை (அகலிகை - ஒரு சிறுதவளை - இராமச்சந்திரன் பாதம் - இராமச்சந்திரன் அம்பு)

உள்ளங்கை நெல்லிக்கனிபோலவும் பாலினுள் நெய் போலவும் நமக்குள் இருப்பது இந்தச்சத்சங்கம் நமக்கு நாமே நீதிபதி என்பதை பற்பல சத்சங்க அனுபவங்கள் கூறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 04) யார் யாருக்கு இந்தச் சத்சங்கம் உதவும்

கொஞ்சம் கொஞ்சமாக ஒரு சிறுதொகைப் பணத்தைச் சேர்த்து ஒரு சிறிய வீட்டைக் கட்டி விடுகின்றோம். பின்பு அதில் குடியேறியும் விடுகின்றோம். அதில் நாமும் நம்முடன் உள்ள குடும்பத்தாரும் உல்லாசமாகவும் சந்தோஷமாகவும் வாழ்கின்றோம். பலரும் நம்மிடம் வருவார்கள் நம்மோடு இருந்து சந்தோசித்துச் செல்வார்கள்.

இப்படித்தான் இந்தச்சத்சங்கமும் நமக்கும் பலருக்கும் ஒரு நிம்மதியையும் சந்தோசத்தையும் கொடுத்து உதவுவதனைப்போலவே சுகமான சிந்தனைகளைப் பெற விரும்பும் எல்லா மானிடருக்கும் சத்சங்கம் உதவும் பாலர் முதல் முதியோர் வரை எல்லோருக்கும் நன்றாகவே உதவும் பேதம் இன்றி எல்லோருக்கும் முற்று முழுதாக ஒரு நிழல் தரும் மரமானது சத்சங்க உரைகள் ஆகும்.

இந்த உலகப் படைப்பின் பொதியலில் ஒரு முக்கிய பகுதி மானிடப் பகுதி என்றால் இந்தப் பொதியலில் மீதிப் பகுதியைப் பாருங்கள் அவற்றை அடக்கி நம்மையும் அடக்கிக் கொண்டிருப்பது ஒரு மகா பொதியல் அல்லவா அதில் இருந்து கிடைப்பது எல்லாம் எவ்வளவு என்ற உண்மையை எவர் தான் விரும்பாதவர் உயிர் உள்ள அத்தனை பேருக்கும் உதவிபுரியும் இந்தச் சத்சங்கம்.

உதவியின் உண்மை வடிவத்தைப் பாருங்கள் இங்கு நான் நோக்குவது சத்சங்கம் என்கிற ஒரு செவிப் புலன் விருத்தியை ஏற்படுத்தும் உரையையே. உதவி செய்பவர் ஒருவர் பெறுபவர் இன்னொருவர் என்று நாம் பார்க்கிறோம். பெற்றவர் திருப்தியும், சந்தோசமும், சாந்தியும் அடைகிறார். இது அவருக்குரியது. கொடுத்தவர் என்ன செய்வார்?அவரும் கொடுத்தேன் என்ற திருப்தியும் சந்தோசமும் சாந்தியும் அடைவர். என்பதும் உண்மை என்றாலும் அதில் இன்னுமொரு உண்மையும் அடங்குகிறது பாருங்கள். கொடுத்து விட்டோம் என்பதுடன் பெற்ற சுகத்துடன் பெற்றுக் கொண்டவர் அடையும் சுகத்தையும் சேர்த்து அனுபவிக்க முடிகிறது என்பது தான் இரட்டிப்பான உண்மை.

இங்கு தான் நாம் இன்னோர் கருத்தையும் சிந்தித்துப்பார்க்க வேண்டும். காதினால் கேட்டு இன்புறும் போது பெறும் இன்பம் நமது முழு உடலையும் பூரிக்க வைக்கும் உரை என்றால் அதை அனுபவிக்க வேண்டிய எல்லோரும் பெரும் பாக்கியவான்களேயாவர்.ஒரு சின்னத் தாவரம் சீர்பெற்று வளரவேண்டுமானால் அதனுடன் பேசிப்பாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்சொல் கூறிப்பாருங்கள் உங்கள் சுவாசமே அதன் உணவு அதேபோல் அதன் சுவாசமும் நமக்கு உயிர் நாடி ஆகிறதல்லவா இப்படித்தான் சத்சங்கமும் உலகத்துக்கே உதவும் மருந்து ஆகும்.

**05) சத்சங்கம் எப்படி இருக்கும் :-**

சத்சங்கம் பல விதமாக இருக்கும் . அதன் சூழலே மிகவும் அனுபவிக்கத்தக்கதாக இருக்கும். சத்தம் ஓங்கினால் ஒலி, சத்தம் நீங்கினால் அமைதி 'சத்சங்கம்' கேட்டு 'ஓம்' என அனுபம் பெறலாம் .

**06) அன்றைய சத்சங்கம் இன்றைய சத்சங்கம்**

அன்று அதாவது புராதன மன்னர்களின் காலத்தில் சத்சங்கங்கள் மிகவும் சக்திவாய்ந்த அவதார புருஷர்களின் மானிடப் பிறவிகளின் போது ஜீவராசிகள் கடை ஏறும் பொருட்டு சத்சங்களைச் செய்தார்கள். அவர்களின் அவதார காரணங்களை முனிவர்கள், தவசிகள் தமது தவ வலிமையினைக் கொண்டு முன் கூட்டியே தீர்க்க தரிசனமாகக் கூறி இருந்தார்கள். அந்த வார்த்தையே சத்சங்க வார்த்தை என்பேன் நான்.

சத் என்பது உண்மை அல்லது உண்மைப் பொருள் என்று கூறினார்கள். சங்கம் என்பதை விளக்கினால் சங்கமமாகுதல் ஒரு பெருந் தொகையான மானிடர் கூட்டம் உண்மைப் பொருளில் ஒன்றித்துக் கூடுவது என்பது பொருந்தும்.

'சத் அசத்தை சாரா ' - சத் அசத்தாம் உயிர் ' என்று விரிவான ஒரு பாடல் இருக்கிறது. உயிருக்கு - உயிர் என்பது எல்லாம் தன்னுள் அடங்குவதையும் வேறு வேறாய் பிரிவடைந்தும் இருக்கும். அசத் எனப்படும் அழியக் கூடிய பொருள்கள் அனைத்திலும் உள்ளும் புறமுமாக சத் இருக்கிறது. இதுதான் சத் என்பது எப்போதும் இருக்கும் அழியாத மகா சக்தியின் மாறாத தன்மையே அதற்குச் சத் (உண்மை) பொருள் என்று பெயரிட்டு அழைத்தார்கள்.

இந்தப் பொருளை அறிய, அனுபவிக்க அதுவாக மாறக் கூடிய எமது இந்த மானிடப் பிறவியை மிகவும் உயர்வாக விளக்கிக் கூறுவதைப் புரிய வைப்பது சத் சங்க உரைகளே !
'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்பார் ஒரு தவசி .

ஏன் அப்படி என்பதற்குப் பல காரணங்கள் இல்லை ஒரு முக்கிய காரணம் இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரானது சத் பொருளை அடைந்து அனுபவித்து, அதுவாகவே மாறுவது என்பது சத் புருஷர்களான அன்றைய அவதாரங்கள் கூடத் தமது அவதாரத்தின் காரணத்தை இன்னொருவரால் அறிவித்துத் தெரிந்து கொண்டபின் தான், தெரிந்து கொண்டதாகப் பண்டைய சரித்திரங்கள் கூறுகின்றன.

ராம அவதாரத்தில் முனிவர்கள் பலர் அறிந்த உண்மையைச் ஸ்ரீமத் நாராயணன் தமது பத்து அவதாரங்களின் ஒன்றான ராம அவதாரத்தைக் காதுகளினால் கேட்டார்.

கிருஷ்ணனை கண்ணனின் அவதாரங்கள் முனிவர்கள் புகழாக அல்லது சத்சங்கமாக எடுத்தியம்பும் போது கிருஷ்ண பிரான் தமது தண்டித்து ஆட்கொள்ளும் ஒரு குணமான கோபம் என்று கூறும் சீற்றத்தை வெளிப்படுத்தி அவதியில் துவண்டார் என்றும் எழுதினார்கள் இதற்கு ஆதாரம் நரசிம்ம அவதாரம். (சீற்றம்)

இயேசு பிரான் அவதாரம் ஒரு மகா குரு அவதாரம் அவர் மக்களுக்கு ஞான ஸ்நானம் (அறிவு நீர் குளிப்பு) கொடுக்க வருகிறார் என்று யோவான் என்னும் ஒரு மகா தவசி அன்று மன்னர் மக்களிடையே கூறினார். அவர் என்ன என்ன செய்வார். என்பதனையும் அவர்களின் பாடுகளின் தன்மையையும் கூடக் கூறினார்.

அன்றும் சத்சங்கம் பெரும் மருந்தாக இருந்து பல விடையங்களைச் சத் உரையாக மக்களிடையே எடுத்துரைத்திருப்பதை வேத ஆகமாகிய விபிலியம் அறியத்தருகிறது.

ஆதி அந்தம் இல்லாத உண்மைப் பொருளை அடைய அனுபவிக்க உணர முடியும் என்பதை மென்மையாகவும், தன்மையாகவும் அவர் அவர் தன்மைக்கேற்ப விளக்கி உதவும் மகா மருந்தே சத்சங்கம். இன்று நம்மிடம் இருக்கும் பல விதமான விடைகளை நாம் நம் கையில் வைத்துக் கொண்டிருக்கின்றோம். அவற்றைத் திரும்பத் திரும்பப் படிக்கின்றோம்.

குர்ஆன், பகவத்கீதை, பைபிள், வேதாகமம், திருக்குறள், வேதங்கள் என்ற பல வடிவமான சத்சங்கப் படைப்புக்கள் எல்லாம் உட்பொருளாகக் கொண்டிருப்பது உயிர்த்தத்துவங்கள், உண்மைப் பொருளின் தன்மைகள், என்றும் உள்ள ஆத்ம ஞான உரைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றும் அவற்றைப்படித்தும், கேட்டும் நமது வாழ்க்கையை உயர்வாக அற்புதமாக அமைத்துக் கொண்டிருக்கின்றோம்.

இப்பிறவி (மானிட)யிலே தான் உண்மையான அல்லது முழுமையான அன்பை, உலகத்தை அனுபவித்த வண்ணமே உண்மைப் பொருளிடத்திலும் நம்மைச் செயற்படுத்த முடியும் என்பதைச் சத்சங்களினாலே அறியப் பெற்றும் உள்ளோம்.

இந்த அளவிற்கு எமக்கு அன்றைய சத்சங்கங்களே ஆரம்ப அடியாக அமையும் போது இன்றும் எமக்குச் சத்சங்க உரைகள் வாழையடி வாழையாக, பரம்பரை பரம்பரையாக வந்த எத்தனை குரு, சீட தொடர்பிலும், திருத்தொண்டர்கள் அடியார்கள், பக்தர்கள் என்ற வரிசையினை இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கும், உண்மைப் பொருளை உணர்ந்து அனுபவித்த ஞானிகளின் சத்சங்க அல்லது சத் உரைகளே இசைவடைந்து பல வடிவங்களில் அதாவது எழுத்து அல்லது ஒலி, ஒளி நாடாக்களின் வடிவங்களில் இன்றும் கிடைக்கின்றன.

ஒரு முக்கியமான விடயம் என்னவென்றால் நமது சத்சங்கிகள் எல்லாம் இன்றும் உயிர்ப்புடன் எமக்கு வழங்கும் உரைகள் நேரடியாகக் கிடைக்கப்பெறும் போது அது பயபக்தியை எண்ணற்ற ஜீவராசிகளின் படைப்பின் காரண காரியங்களை அறியவும் நம்மை நாம் அறியவும் அது போலவே உண்மைப் பொருளின் ஒரு துளிச்சக்தியையாவது அனுபவித்து மகிழவும் உதவுவதே சத்சங்கம்.

ஒன்று என்று இருந்தால் அதற்கு அருகிலே ஒரு பூச்சியத்தைச் சேர்க்க முடியும். அது (10) பத்து ஆகிவிடும். அதற்கு மறு பூச்சியத்தைச் சேர்த்தால் அது (100) நூறு ஆகிவிடும். அந்த ஒன்று (1) ஒன்று இல்லாத பூச்சியங்களைப் பார்த்தால் எந்த ஒரு (0), (00) உபயோகமும் இல்லை இதனை ஒத்துப்பார்ப்பதைப் போற தான் (சத்) (அசத்) மானிட ஜீவனும் அதை இயக்கும் அல்லது ஆதாரம் கொடுக்கும் மெய்ப்பொருளும் ‘ஜீவன் முத்தர்கள் ” என்ற முக்தியை அடையப் பெரும்பாடு படவேண்டி இருப்பது ஏன் என்றால், நாம் ‘நூறு நாள் ஓதி ஒரு நாள் விடக் கெடும்’ என்ற வழக்கு சாலை வழியில் ஆதாரம் இல்லாது வழுக்கிக் கொண்டு கீழ் நோக்கி வெகுதூரம் சென்றிருக்கிறோம்.

இதற்குப் பல காலப்பயிற்சி பெற்றுக்கடைத்தேற வேண்டியுள்ளது. இதனை எமக்கு தெளிவுப்படுத்துவதாக இருப்பது. இன்றைய சத்சங்க உரைகள் என்று அமைவது எமக்கு மிகவும் அவசியமாக இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலியுகம் தொடங்கி நடைபெற்றுக் கொண்டிருப்பதாகக் கூறுகிறார்கள் அதன்யுக காலம் துவாரக யுகத்தில் கிருஷ்ண அவதாரம் கொடுத்த ஆதாரத்தின் பலனினால் ஏற்பட்ட கால எல்லையை விடக் குறைவானது என்றும் இனி வரும் தேவயுகத்தில் தேவர்கள் நடமாடுவர். என்பது தீர்க்கதரிசனம் அத்தோடு (Unicone) என்று கூறப்படும 'கல்கி' அவதாரமும் நிகழும் என்கிறார்கள் தீர்க்கதரிசிகள்.

எனக்கும் இன்னும் பலருக்கும் இந்தக் கலியுகத்தில் உலகம் இப்போது இருக்கும் நிலையைப் பார்க்கக் கூடியதாக இருக்கிறதென்றாலும் எமது காலம் முடிந்தபின் அல்லது இருக்கும் போதே 'கல்கி' அவதாரத்தை அறிந்து அதன் உபதேசத்தைச் சத்சங்கமாகக் கேட்க முடியுமா என்று இதுவரை விளக்கமாகத் தெரியவில்லை. என்னால் தீர்க்கதரிசனம் கூறமுடியவில்லை. என்றாலும் ஒரு குருவின் தயவைப் பெற்று அவரின் சீடர்களின் சத்சங்கங்களைக் கேட்டு அதன் பலனால் ஆத்ம ஞான மந்திரங்களைப் பெற்றுப் பின்னர் அதன் அனுபவத்தின் பலனால் பல சத்சங்களையும் நிகழ்த்தி இருக்கிறேன் இதன் அனுபவத்தைப் பின்னர் தொகுத்து எழுதுகிறேன்.

**07) இங்கே ஒரு கருத்தை கூறுகிறேன் படியுங்கள்**

எல்லாப் பாடமும் தொடங்குவது பாலர் பாடசாலையில் எல்லா நாற்றுகளும் பெரும் பயிர்களாகப் பலன் தருவதற்கு முன் மேடை அமைத்து விதை பதித்துப் பாதுகாப்பு வேலிகளும் இடுவார்கள். அதைத் தொடர்ந்து இயற்கையாகவோ அல்லது தாங்களாகவோ நேரம் காலம் அளவு என்ற நிர்மாணத்தில் நீர் பசளை என்பன உணவாகக் கொடுத்துப் பலனைப் பெருமளவில் பெறுவதற்காகக் கண்காணிப்பார்கள்.

இப்படித்தான் சத்சங்கமும் நமக்கும் பலருக்கும் இருக்கும். இந்த முதற் படியில் ஏறிவிட்டால் தேவபயம், பக்தி ஏற்படும். ஞானம் மிளிரும் மனம் அறியப்படும். இது நமது பிறப்பின் பலன் ஜீவன் முக்தி பெற்றால் பல காலமாக நோவிலும், கவலையிலும், துன்புறும் இவ்வுடல் பாவக் கடல் நீந்திப்பக்திக்கடலில் சமரசம் கண்டு பரமாத்ம சாகரத்தில் நீக்க மறக்கலந்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமூலர் நாயனார் கருத்தொன்றையும் படியுங்கள்.

நான் பெற்ற இன்பம்
பெறுக இவ்வையகம்

வான்பற்றி நின்ற
மறைப்பொருள் சொல்லிடின்

ஊன் பற்றி நின்ற
உணர்வுறு மந்திரம்

தான்பற்றப் பற்றத்
தலைப்படும் தானே !

உடம்புக்கு வெளியே பரவி நிற்கும் பொருளே உடம்பிற்கு உள்ளேயும் ஊடுருவி மையமான மறைபொருளாக நிற்கிறது. இந்தப் பொருளைக் கண்டு அனுபவிப்பதற்கு உரியவழி, இந்த உடம்பின் உணர்வைக் கொண்டு மந்திரம் என்கிற ஞான வழியான மகா மந்திரத்தை அதாவது ஓங்காரம் என்கிற ஓம் என்கிற ஒலியை உடலினுள் மட்டுமன்றி வெளியிலேயும் இரண்டற்றப்பாவனையிற் தியானிக்க வேண்டும் என்கிறார். அங்கே அவர் பற்றப்பற்ற என்பதற்குக் காரணம் அவர் பெற்ற இன்பம் பயிற்சியின் மூலம் என்பதற்காகத்தான்.

நாமும் அவர் பெற்ற இன்பம் பெற முடியும். அதற்கு ஞான மந்திரமான ஓம் என்கிற அந்த இன்ப சாகரத்தை அனுபவிக்க வேண்டும். சத்சங்கம் பெற்றால் மனோலயம் எற்படும். அதனாற் பலபயன்கிட்டும். இதன்பயனால் ஓங்காரத்தின் உணர்விலே திளைக்கலாம். சுய தரிசனத்தைப்பெற உதவுவது சத்சங்க உரைகளே என்பதால் எனது அனுபவத்தைத் திருமூலநாயனார். ஒரு மகா ஞானி ஒரு சிறந்த ஜீவன் முக்த்தர். என்பதை மகிழ்ந்து ஆதரிக்க நான் எனது படைப்புக்களையும் எனது அனுபவங்களில் இருந்து இந்த மகா சக்தியின் பல்மடங்கில் மூழ்கித்திளைத்த முனிவர், பக்தர், ஞானியர், துணை கொண்டு எனது சத்சங்க அனுபவம் மற்றும் அதைச் சார்ந்த அனுபவங்களை அடுத்து அடுத்து பகுதிகளாக எல்லோருடனும் பகிர்ந்து கொள்கிறேன்.

வணக்கம்

***பகுதி ஒன்று முற்றும்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி - II

## எனது சத்சங்க அனுபவங்கள்

**1) கிட்டியது செய்தி :-**

அனுபவங்கள் என்று சொன்னால் பலர் அனுபவித்துக் கேட்பார்கள் ஆதரவும் தருவார்கள் எனினும் கேலியும், கிண்டலும் , நகைப்பும் சிற்சிலரிடம் தலைவிரித்து ஆடும். இதை எத்தனை காலத்துக்குத் தான் தள்ளியே போட்டுக்கொண்டு போவேன்.

எனது பட்டணத்திலே/ மாநகரத்திலே ஒரு பிரதான வீதியும் உட்பகுதியிலே ஒரு வாவியும் செல்கிறது. இவை இரண்டுக்கும் இடையே உள்ள நிலப்பரப்பிற் பல வீடுகளும் வீதிகளும் இருந்தாலும், ஒரு வீதி மட்டும் பிரதான வீதியில் தொடங்கி வாவியின் முனை வீதி வரை நீண்டு நீண்டு சென்றது.

அதன் வாவி முனையில் நான் என் பெற்றோருடன் வசித்து வந்தேன். பிரதான வீதி முனையில் ஒரு பக்தரின் குடும்பம் வசித்து வந்தது.

அந்தப் பகுதியில் வசித்த பலருக்கும் என்னைத் தெரியும் எனினும் இந்தப் பக்தரின் குடும்பத்தில் இருந்து பல தெய்வ சம்பந்தமான விடயங்கள் ஏக மனதாக எங்கள் குடும்பம் ஏற்றிருந்தது.

ஒருமுறை அந்தப்பக்தரின் மூத்த பெண்ணின் குடும்பம் தலைப் பட்டணத்தில் இருந்து விடுமுறைக்காக இங்கு வந்திருந்தது அவர்களைச் சந்திக்க எனது பெற்றோர் சென்றிருந்தனர்.

மறுநாள் எனக்கு ஒரு செய்தி கிடைத்தது 'அந்த பக்தரின் மூத்த பெண் என்னைச் சந்திக்க வேண்டுமாம் எங்கோ ஒரு இடத்திற்கு ஒரு குரு வருகிறாராம் அதையிட்டு என்னுடன் பேசவேண்டுமாம் ' இதுதான் செய்தி.

நானும் அவரைச் சென்று சந்தித்தேன் அவர் கூறிய இடத்திற்குக் குரு அல்ல அவரின் சீடர் தான் வந்துள்ளார். அவர் சத்சங்கம் நிகழ்த்துவார். அங்கு சென்று சத்சங்கத்தில் என்னைக் கலந்து கொள்ளுமாறு வேண்டிக் கொண்டார்.

இந்து மதம் ஒரு பரந்த கடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று ஆச்சரியம் என்று கூறுவதற்கு எனக்குத் தோன்றவில்லை. அப்படிப்பட்ட செய்தி கிட்டியிருக்கிறது அதன் உன்னதமான ஆட்சிமையை எவர் எவர் அனுபவிக்க முடிகிறதோ அதை வார்த்தைகளினால் சொல்வதனாற் தித்திக்கும் தேன் சுவையேதரும்.

ஒரு ஜீவன் அல்லது ஒரு மானிட ஆத்மா தயார் நிலைக்கு வந்தவுடன் இஷ்ட தெய்வம் அல்லது கடவுள் என்கிற பரம்பொருள், ஆத்ம குருவை அந்தப் பக்தனுக்கு அண்மையாக அனுப்பி வைப்பார் எனப்பல ஆத்மீகப் புத்தகங்களிற் படித்திருக்கின்றேன்.

கேளுங்கள் தரப்படும், தட்டுங்கள் திறக்கப்படும், தேடுங்கள் கிடைக்கும் என்று இயேசுநாதர் கூறியதாகப் படித்திருக்கிறேன்.

'அவன் அருளாலே அவன் தாள் வணங்கு ' என்றும் பல பக்தர், அடியார், தொண்டர், தவசியர் இயம்பியதைப் புனிதமான நூல்களிற் படித்திருக்கின்றேன்.

தடுத்தாட்கொண்ட செய்திகள், ஞானப்பால் கொடுத்த செய்திகள், அசரீரிகளினால் வழிகாட்டிய செய்திகளும் கேள்விப்பட்டும் படித்தும் நெகிழ்ந்திருக்கிறேன்.

இப்படி விடயங்களை அறிந்திருந்த எனக்கு ஒரு சத்குருவிடம் சீடனாகி மற்ற ஞானிகளுடனும் சேர்ந்திருந்து சத்சங்கம் கேட்டு விளக்கம் பெற்று நான் யார் என்கிற வினாவிற்குப் பதில் தெளிவாகிவிட்ட இந்த ஜீவாத்மாவிற்கும் ஒரு பிறவிப்பலன் கிட்டியதை இன்பத்துடன் உங்களுடனும் உரையாடிக்கொள்வதில் மெய்மையாகவே இன்புறுகிறேன்.

பல வடிவங்களில் இஷ்ட தெய்வத்தை அழுது அழுது வேண்டினேன். ஆனாலும் குருவாக வாரும் நாராயணா" என்று குமுறிக் கூப்பிட்ட என் குரலுக்கு வந்த செய்தியின் மகிமையைப் பார்த்தீர்களா? இன்பம், வீடுபேறு என்று ஒரு நிலை மாறாத இடம் இருக்கிறது. இதற்கு நிகர் ஏதுமில்லை என்பதை ஆத்ம ஞானம் பெற்ற பின்புதான் பல விடயங்கள் எந்த வடிவத்தில் வந்தாலும் அவை எல்லாம் ஒரு மகா விசாலமான ஒரு இயற்கையிலிருந்து பிறக்கிறது என்றும் பின்பு மீண்டும் அதே இடத்திற்குச் சென்று சங்கமமாகிறது என்றும் அதன் இடைக்காலம் விதம் விதம் ஆன விளையாட்டில் நாம் எல்லோருமே பங்காளிகள் என்பதையும் புரிந்து கொண்டிருக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படித்தான் எனது இறை இன்பம், தரிசனம், வழிநடத்தல் எல்லாம் இன்றுவரை திகழ்கிறது. இனி என்ன சொல்ல வருகிறேன் என்பதைப் பொறுமையுடன் படியுங்கள்.

## எனது சத்சங்க அனுபவங்கள்

**2) குருவை எற்றுக் கொண்டேன் :-**

ஒரு நல்ல செய்தி வந்து கிட்டியது என்கிற ஆனந்தத்தைப் பகிர்ந்து கொண்டேன். இனி . . .

எனது வீட்டில் இருந்து ஒரு பத்து நிமிட நடை தூரத்தில், ஒரு விலாசத்திற்கு சத்குருவின் சீடர் சூரிய நாராயணந்தஜீ (சூரியநாராயணன்) அவர்கள் ஒரு மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டிருந்தார். அவர் இந்தியாவில் இருந்து வருகை தந்திருந்தார்.

அந்த விலாசத்தில் பலர் கூடியிருந்தார்கள். சிலர் அவரை முன்னமே சந்தித்திருந்தார்கள். அவர்கள் நன்றாக அவருடன் பேசிவிட்டு விடை பெற்றுக் கொண்டிருந்தார்கள். இருட்டிவிட்டது. அவர் சத்சங்கம் கொடுத்து முடித்திருந்தார்.

அந்த இடத்திற்குப் புதிதானவன் நான் எனது முதல் சமூகமளிப்பு எல்லாம் என் முன் நடக்கின்றன. ஆனால் இயற்கையாக மனம் குமுறும் போது நமக்கு அழுகைதான் வரும் அப்படித்தான் என் மனமும் அச்சூழலி இருந்தது.

எப்படியாவது சத்குருவின் சீடருடன் சென்றுவிட வேண்டும் என எண்ணிக் கொண்டிருந்தேன் எனது நேரமும் வந்துவிட்டது. எனத் தீவிரமாகச் சிந்தனையில் இருந்தேன்.

சுவாமிஜீயைக் காணவும், அவர் சத்சங்க உரையைக் கேட்கவும் வந்திருந்த அனைவருமே சென்று விட்டனர்.

அந்த வீட்டு வெளி மண்டபத்தின் ஒரு புறத்தில் நான் உட்கார்ந்து கொண்டிருந்தேன். என்னை அந்த வீட்டுக் குடும்பத்தினர் பார்த்தார்கள். விசாரித்து விட்டு என்னுடன் மிகவும் தன்மையாகப் பேசினார்கள். ''சுவாமிஜீயைக் காணவேண்டுமா? அவருடன் பேச வேண்டுமா?'' எனக் கேட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஆம்'' என்று பதில் அளித்தேன். அவர் நாளை காலை முதல் மதியம் வரை இங்கு இருப்பார். அவரைத் தனிமையிற் சந்திக்க விரும்பும் அனைவரையும் அப்போது அவர் சந்தித்து விட்டு இன்னும் ஓர் இடத்துக்குச் சத்சங்கத்தில் கலந்து கொள்ளச் செல்ல இருக்கிறார். அங்கு நாங்களும் பஸ்ஸில் செல்ல இருக்கிறோம். நீங்களும் அவரை வந்து சந்தித்து விட்டு எங்களுடன் வரவிரும்பினால் வரலாம் என்றார்கள்.

எனக்கு எதுவும் பேசத்தோன்றவில்லை. ஆதங்கத்தை வெளியிற் காட்டிக் கொள்ளவில்லை. நாளை காலையில் சுவாமிஜீயை வந்து சந்தித்து விட்டுப்பின் உங்களுடன் வருகிறேன் எனக் கூறினேன். அவரை முதல் நபராகச் சந்திக்க நேரத்தையும் கேட்டுக் கொண்டேன். அவர்கள் சம்மதித்தார்கள் விடைபெற்றுக்கொண்டேன்.

கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லை என மனம் கூறியது. மனம் விரும்பினாலும் உடல் விரும்பினாலும் உரிய நேரம் வரவில்லை.

'நல்ல குருநாதர் நம்மை வருத்துவது கொல்லவல்ல, பொல்லா வினை அறுக்கவே' என்று அதே அடிமனதில் இருந்து செய்தி வந்தது.

சிறு நடையாக வீடு சென்றடைந்தேன் தூக்கம் கொண்டேனா இல்லையா என்பது இன்று ஞாபகமாக இல்லை. மறுநாள் காலை குளித்து இறைவனை (இஸ்ட தெய்வம் கிருஷ்ணனை) வணங்கிக் கொண்டு சுவாமிஜீயைக் காணும் ஆவலுடன் சென்றேன்.

சுவாமிஜீ அந்த வீட்டில், ஒரு அறையிலே தியானம் பண்ணிவிட்டு தன்னைச் சந்திக்க வரும் அனைத்து (அஸ்பிரிங்) asprings (ஆர்வம் கொண்டவர்கள் - இறைவிடயத்தில்) ஆர்வம் கொண்டவர்களையும் (பிரேமி) களையும் (ஆத்ம ஞானத்தைப் பெற்றுப் பயிற்சியில் இருக்கின்றவர்கள்) சந்திக்கக் காத்திருந்தார்.

அந்த முகவரியில் வசித்து வரும் ஞானம் பெற்ற குடும்பத்தில் இருக்கும், அம்மையார் என்னை வரவேற்று அழைத்து சுவாமிஜீ அமைதியாக இருந்த அறைக்கு வழிகாட்டினார்.

மிகவும் உருக்கத்துடனும், பக்தி கொண்டும் உள்ளே சென்றேன் 'வாங்கோ உட்காருங்கோ' உங்க பேர் என்ன? '' என்றார் சுவாமிஜீ 'என்ன கேட்கவேண்டுமோ கேளுங்கள் '' என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நிமிடம் மௌனமாக இருந்த நான் ஓவென்று அழுதேன். சுவாமி என்னையும் அழைத்துச் சென்று விடுங்கள் என ஒரு மூன்று நிமிடம் புலம்பி அழுதிருப்பேன்.

அவர் என்னைக்கொஞ்ச நேரம் என்றாலும் அழவிட்டார். பின் அமைதியாக இருக்கும்படி கூறினார். நான் சிறிது நேரத்தில் அமைதியடைந்தேன். அவரைப் பார்த்தபடியே இருந்தேன் போலியாக நாம் செயற்படுகிறோமோ, அவர் என்ன நினைக்கிறாரோ என மனம் கூறியது. செய்தி ஒன்று வந்தது. இன்று நீ விரும்பியபடி குருவைச் சந்தித்திருக்கிறாய் ஏன் பல ஆராய்ச்சி என அதே அடிமனம் பேசியது.

புன்னகை என்றும் கூறமுடியாது தயக்கம் என்றும் கூறமுடியாதிருந்தது. அவரின் மௌனம் சிறிது நேரத்திலேயே என்னைப் பேசவிட்டு எனது முழு விபரமும் பெற்றுக்கொண்டார். அவர் என்னிடம் இரண்டே இரண்டு கேள்விகள் தான் கேட்டார்.

''சொல்லுங்கள் '' நீங்கள் கிருஷண பக்தர் என்று கூறினீர்கள் உங்களை நீங்கள் குருவிடம் அர்ப்பணித்துப்பணி செய்ய என்னுடன் வர விரும்பிக் கேட்கிறீர்கள்

**கேள்வி I** : நீங்கள் எப்படிக் கிருஷ்ணனை வேண்டி வணங்குவீர்கள் என்று கேட்டார்

எனது பதில் நான் சென்று தரிசிக்கும் திமிலதீவுக் கண்ணன் என்று வழங்கப்படும் ஒரு கோவிலில் நான் அப்போது செய்துவரும் வணக்கத்தை கூறினேன்.

'சுவாமி எனக்கு இங்கு இருக்கும் எல்லோரையும் விட அதிக பக்தி வேண்டும் என வேண்டிக் கும்பிடுவேன்' என்றேன்.

'சரி நீங்கள் கிருஷ்ணன் கோவிலுக்குச் சென்று வணங்கி அங்கே இறைவனை நோக்கி இங்கு இருக்கும் எல்லோரையும் விட அதிக பக்தி வேண்டும் என்று கேட்டீர்கள். நல்லது, நீங்கள் இறைவனைத் (கிருஷ்ணனை) தரிசிக்கச் சென்றீர்கள். அங்கு மற்றவர்களும் வந்திருந்தார்கள். அவர்களில் அதிகம் பக்தி உடையவரை இறைவனுக்குத் தெரியும். ஆனால் அன்று வந்திருந்த அனைவரிலும் அதிக பக்தி கொண்டிருந்த பக்தரின் பக்தியின் அளவு ஒரு ஆட்காட்டி விரலின் நுனியில் இருந்து 1/4" அல்லது 1/2" இருக்கும் அப்படியானால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைவிட அதிகமான அளவு என்னும் போது ஒரு 3/4" அளவு பக்தி கிடைக்கும் இப்படி நீங்கள் வேண்டியபடியே கிடைத்து விட்டால் போதுமா?' என்று கேட்டார்.

எனக்குப்பதில் வரவில்லை. வெட்கம், பயம், சோகம், பக்குவம் அற்றவன் என்கிற குற்ற உணர்வுகள் தோன்றின.
''சரி நீங்கள் இறைவனை நோக்கித்தியானம் பண்ணுவதாகவும் கூறினீர்கள். மிகவும் 'நல்லது' ''நீங்கள்'

**கேள்வி II : 'எப்படித் தியானம் பண்ணுவீர்கள்'** என்று கேட்டார். எனது கண்களை மூடிக்கொண்டு மனதைக் கிருஷ்ணனின் உருவத்தில் நிறுத்தி, மூச்சைக் கூடியமட்டும் அடக்கி, கூடியவரை அசையாது உட்கார்ந்திருப்பேன். இதைப்பல காலமாக முயற்சி பண்ணிச் செய்கிறேன்." என்றேன்.

அவர் மெல்லிதாக புன்னகைத்தார். ஒரு அழகான பதிலை மிகவும் அமைதியுடனும் மெல்லிய தொனியில் கூறினார்.

''நாம் மனிதர்கள் நாம் சுவாசிக்கின்றோம். இது மிகவும் முக்கியமானதாக இருக்கிறது. அதை அடக்கிக் கொண்டு விட்டால் என்ன நடக்கும்' என்றார்.

நான், நாணி, வெட்கித்து, சோர்வுற்று இறைவனை நான் தேடினேன், பக்தியும் கொண்டிருந்தேன் நினைத்த காரியம் சித்தி, பேச்சில் உண்மை, வாழ்க்கையில் ஒருபடி உயர்வாக வாழ்கிறேன். என எண்ணிப் பெருமித்திருந்த எனக்கு, சுவாமிஜீ கேட்ட இரண்டே இரண்டு கேள்விகளிலும் அவற்றிக்கு எனது பதில்களுக்கும் அவரின் பதில்களுக்கும் மத்தியில் எனது நெஞ்சம் ஆசான் இல்லாமற் பயின்ற பயிற்சியை வெகுவாக உணர்த்தியிருந்தது. நான் ஒரு சாக்கடை நீர் என்று மனம் கூறுவது தெரிந்தது. இருந்தாலும் மெல்லிய ஒளி தென்பட்டது போல் அடிமனதில் ஏதோ சொல்லக் கேட்டேன்: ' முதல் செய்தது பக்தி அதில் 'நான்' என்ற அகங்காரமும் நல்லவன், இறைவனுக்கு என்னைத்தான் பிடிக்கும் என்னும் சுய நலமும் இருந்தது. இதற்குத்தான் 'குரு இல்லா வித்தை பாழ்' என்று சொன்னார்கள். அன்றைய அனுபவ ஞானிகள்" என இருள் மங்கலுக் கூடாக அந்த மெல்லிய ஒளி நிரம்பிய செய்தியை அசைபோட்டு இருக்கையில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் என்னிடம் இறுதியாகக் கூறினார்.

'நீங்கள் விரும்பிய படி எல்லாம் நடைபெறும். நான் மீண்டும் உங்களை வந்து சந்திப்பேன். அதுவரை நீங்கள் இங்கு வந்து இவர்களுடன் சத்சங்கங்களில் கலந்து நன்றாகக் கேளுங்கள். குருநாதரில் நம்பிக்கை வைத்துத் தேவையானவைகளைக் கேட்டுப்பெற்றுக் கொள்ளுங்கள். எப்போதும் உங்களை மற்றவர்களுடன் ஒப்பிட்டுப் பாராமல் இறைவனும் நீங்களும் என்ற பாவனையில் பயிற்சி பண்ணிப் பிரார்த்தனை செய்யுங்கள்" என்று கூறினார்.

சிரித்துக் கொண்டு சுவாமிஜீயை வணங்கிவிட்டு மெதுவாக எழுந்து வெளியே வந்து சிறிது நேரம் உட்கார்ந்திருந்து விட்டு, மற்றவர்கள் வரத்தொடங்கினார்கள். கலகலப்பும் கொஞ்சம் அதிகமாக இருந்ததினால் மெதுவாக அங்கிருந்து எழுந்து வீடு சென்றுவிட்டேன்.

இந்த அனுபவம் ஒரு முக்கிய திருப்புமுனையாக இருந்தது. என்னை எனது மனதுக்குள் எண்ணி எண்ணிப்பார்க்கும் அளவுக்கு அடையாளம் காட்டியிருந்தது.

ஒரு புத்தகம் தரும் செய்தியிலும் அதே நேரத்தில் ஒரு சத்குருவை நிஜ வாழ்வில் மானிடத்தெய்வமாக அல்ல வழிகாட்டியாக ஏற்றுக்கொள்ளும்போது எல்லாம் விலைமதிக்க முடியாத அனுபவமாக இருக்கும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

''குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று " என்பர். மனிதனும் அந்தக் குழந்தை உள்ளத்தை பெற்றுவிட்டால் நிச்சயமாகத் தெய்வீக நிலையை, சுயநலம் இல்லாத நிலையை அனுபவிக்கலாம். இங்கு ஒரு சிந்தனை விருந்தைப் பாரதியார் எழுதிய பகவத்கீதை உரையில் இருந்து தருகிறேன்.

பின் எனது அனுபவ விருத்தியைத் தொடர்ந்து படியுங்கள்.

## பாரதி

''நீங்கள் குழந்தைகளைப் போல் ஆனால் அன்றி மோட்ச ராட்சியத்தை எய்த மாட்டீர்கள்'' என்று இயேசு கிறிஷ்துநாதர் சொல்லியதை கூறிவிட்டு.

ஸ்ரீகிருஸ்ண பரமாத்மா, அருச்சுனனைப் பார்த்துக் கூறிய ''கடமையைச் செய் பலனை எதிர்பார்க்காதே'' என்பதையும் வலியுறுத்துகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஹிருதயம் தெளிந்தால் அன்றி புத்தி தெளியாது. ஹிருதயத்தில் பரிபூரணமான சுத்த நிலையேற்படும் வரை புத்தி இடையிடையே தெளிந்தாலும் மீண்டும் மீண்டும் குழம்பிப் போய்விடும்.

மேலே உள்ள படி எனது வாழ்வில் நிறையச் சம்பவங்கள் நிகழ்ந்து இருக்கின்றன. இனியும் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. இதற்குத்தான் சத்சங்கத்தின் ஆதாரம் தேவையாக இருக்கிறது. இந்தச் சத்சங்கத்தின் உதவி தியானத்திற்கு உதவும் இந்த இரண்டுமே மும்மலங்களை வென்று சேவையைச் செய்ய உதவும். இந்தச் செய்தி எனக்கும், உங்களுக்கும், எல்லோருக்கும் உதவியாக இருக்கட்டும்.

''கர்மத்தின் பயனிலே பற்றுதலின்றித் தான் செய்ய வேண்டிய தொழில் எவன் செய்கிறானோ அவனே துறவி, அவனே யோகி''

பகவான் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா

## 03) ஆத்ம ஞானத்தைப் பெற்றுக்கொண்டேன்

ஆத்ம ஞானம் பெறுவது என்றால் இன்னது தான் என்பதை முதலில் நான் அறிந்திருக்கவில்லை. எல்லாம் புத்தகங்களில் அங்கும் இங்கும் ஒரு சில வசனங்களாக வாசித்திருப்பேன். அதன் அனுபவம் படிப்பதினால் ஏற்பட்டு விடாது. பெற்ற அனுபவத்தைப் படிக்கும்போது இன்பமாக இருக்கும்.

நிஜவாழ்வில் நிஜமாக ஆத்ம ஞானம் பெறுவதற்கு முன் சத்சங்கங்களில் ஏறத்தாழ இரண்டு வருடங்கள் கலந்து கொண்டு எனது மனதில் உதித்த பல கேள்விகளுக்கு பதில்களைச் செவ்வனே தெரிந்து கொண்டிருந்தேன். அறிந்திராத பல உண்மைகளைக் கூட ஆழமாக அறியக் கூடியதாக இருந்தது.

ஒரு நிறை குடம் தளம்புவதில்லை. ஆனால் அதே குடம் அரை குறையாக இருந்தால் தூக்கிக் கொண்டு செல்லும் போது நிச்சயம் ''தளக் தளக்'' என சத்தத்தை செய்து தளம்பும்.

இப்படித்தான் எனது வெளியுலக வாழ்க்கையும், உள் மன வாழ்க்கையும் தளம்பும் நிலையில் இருந்து தளம்பாத நிலைக்கு மாறியது. ''கண்ணால் காண்பதும் காதால் கேட்பதும் பொய் தீர விசாரிப்பதே மெய்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று சொல்லுவார்கள். இது தெய்வீகம் அல்லது ஆத்மா அல்லது மனம் அல்லது அசட்டு வாழ்க்கை என்று வாழும் போது தெளிவாகப் புலப்படுவது இல்லை. ஒரு திருப்தியும் நிம்மதியும் பெற்று, போதும் என்கிற நிலை மனதில் தோன்றினால் பல நன்மைகள் தானாகவே தேடிவருவதோடு அல்லாமல் நாடி வரும் தீமைகளும் தானாகவே நழுவிச் சென்று விட வாய்ப்பும் நிறையவே இருக்கும்.

இப்படிப் பக்குவமாகப் பயிற்சியில் மனம் இருக்கும் கால கட்டத்தில் சீடர் சூரியநாராயணன் அவர்கள் சத்குரு பிரேம்பால்சிங் அவர்களிடமிருந்து செய்திகளோடு, இலங்கைக்கு வருகிறார் என்கிற செய்தி கிட்டியது.

என் வயதை ஒத்த பல வாலிபர்கள் ஏற்கனவே ஆத்ம ஞானத்தைப் பெற்றிருந்தனர். அவர்கள் சத்சங்கங்கள் செய்து கொண்டு இருந்தனர். சேவை(குருசேவை) என்று வரும்போது அவர்கள் பங்குகளிற் பாதி எனக்கும் கிடைக்கும்.

அவர்கள் பொதுவான விடயங்களைக் கலகலப்போடு பேசும் போது என்னிடம் சொன்னார்கள். நல்ல வாய்ப்பு வருகிறது சுவாமிஜீ வருகிறார். அமைதியாகவும் அக்கறையுடனும், ஆர்வத்துடனும் இருக்கும் உங்களுக்கும் ஆத்ம ஞானம் கிட்ட வாய்ப்பு இருக்கும் என்றனர்.

அவர்களால் தீர்க்கமாக எதையும் கூற முடியவில்லை. ஏனென்றால் ஒரு நபரின் பக்குவம் எப்படி இருக்கிறது என்பது குரு சீடன் என்ற தொடர்பில் தங்கியிருப்பது தான் காரணம் அவர்களின் காலமும் பல தடங்கல்களுடனும், தாமதங்களுடனும் போராட்டம் போல் இருந்ததுதான். அனுக்கிரகம் என்பது மிகவும் பொருத்தமான சொல் என்று கூறினார்கள்.

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு பொறுமையாக இருந்தேன். காரணம் ஒரு பக்தன் பக்தி கொண்டு இஸ்ட தெய்வத்தை வணங்கினால் ஞானம் தானாக மிளிரும் என்பதனால் தான்.

இதையிட்டு ஸ்ரீராமக்கிருஷ்ண பரமஹம்சர் கூறுவார். காளிதேவியை இஸ்ட தெய்வமாகக் கொண்டிருந்தவர் அவர். ஆனால் குரு இல்லாமல் இதுதான் இன்னது என்று பிரித்தறிந்து செயற்படுவது முடியாதது அல்லவா !

சப்த பிரம்மம், அமுத பிரம்மம், ஒளிப் பிரம்மம், நாதம் என்கிற ஓங்கார பிரம்மம் என்பன நமக்குள்ளும், வெளியிலும் இந்த அண்டசராசரத்தை நாலாப்பக்கமும் நிரப்பியும் அளவுகோல் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளக்க முடியாமல் இருக்கிறது என்பதை உணர்ந்து அதற்கு ஏற்றபடி நாம் செயற்படுவதற்கும் அதன் உதவியையும் சக்தியையும் கொண்டு இன்பம் அனுபவிப்பதற்கும் குருவின் திறவுகோல் தேவையல்லவா !.

குருவிடம் இருந்து வருகை தந்திருந்த சீடரைச் சுவாமிஜீ என்று அழைத்தார்கள். அவர் இலங்கையின் பல பாகங்களுக்கும் சென்றுவிட்டு எனது (நகரத்திற்கு) பட்டணமான மட்டக்களப்பிற்கும் வந்தார். அங்கு அவர் இருக்கையில் அவருடைய உடல் நலம் காரணமாக இரண்டு கட்டங்களில் ஆத்ம ஞானத்தை வழங்கினார். முதற் கட்டவேளையில் எனக்கு இடம் கிடைக்கவில்லை. மேலும் சோதனை என எண்ணினேன்.

வல்ல குருநாதரின் விளையாட்டை முழு மனதோடு ஏற்று நேரம் வரும்வரை காத்திருந்தேன். இரண்டு வாரங்கள் கடந்தன. சுவாமிஜீ ஆறு நபர்களின் பெயர்ப்பட்டியலில் என்னையும் சேர்த்திருந்தார்.

நாளை காலை அவர் எங்களைச் சந்திக்க இருக்கிறார். இன்று ஒரு சத்சங்க உரையை மாலையில் நிகழ்த்தி முடித்த பின்பு ஒவ்வொருவராக அழைத்துப் பேசினார். எனது தருணம் வரும்வரை காத்திருந்தேன்.

அழைத்துப் பேசினார் 'எப்படி இருக்கின்றீர்' என்றார் ''நலம்'' என்றேன். உம்மால் தொடர்ந்து இடைவிடாமல் தியானம் செய்யும் முறைகளைப் பயிற்சி பண்ண முடியுமா? என்றார்.

எனக்கு ஏக்கம் வந்து விட்டது. மௌனமாக இருந்தேன் என்னை அவர் கண்டித்தார். ஏன் கண்டித்தார் தெரியுமா? சொல்வதற்கே தயக்கமாக இருக்கிறது. என்றாலும் சொல்கிறேன் குருவின் அண்மை மிகவும் தூய்மையானது அதற்குத் தெளிவு என்பது சிறிது குறைந்தாலும் பாலில் ஒருதுளி விஷம் கலந்தது போல் அல்லது ஒரு வெள்ளைத்துணியில் ஒரு சிறு கறைப் புள்ளி ஏற்பட்டது போற் காட்டிக் கொடுத்துவிடும்.

மனது இன்பம் அனுபவிக்கிறது இன்பம் அனுபவிக்கிறது என்று நினைத்துக் கொண்டே சித்து விளையாட்டுக்களிலும், உலகப் பொருள்களான சூரிய, சந்திர, வாயு இவைகளின் இயற்கைக் குணங்களை எனது சித்தத்திற்கு ஏற்றாற்போல் வசமாக்கி விளையாடிக் கொண்டிருந்தது தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தத்தில் உதிப்பது ஒன்று இன்னொன்று இப்போது என்ன நிலையில் சித்தம் செயற்படுகிறது அல்லது செயற்பட்டுக் கொண்டிருக்கிறது என்பது இவை குருவின் அல்லது உண்மைச் சீடன் அல்லது எவர் எவர் அந்த ஆத்ம சாகரத்திற் தோய்ந்திருக்கிறார்களோ அவர்களுக்குப் பிரதி பலித்துவிடும்.

மனம் தானே செயல் அற்று இருப்பதில்லை. ஆம் சுவாமிஜீ கூறினார் நீங்கள் எல்லாத்தன்மையான விளையாட்டுக்களையும் விட்டு விடவேண்டும் என்று.

இஸ்ட தெய்வமான கிருஷ்ண பக்தனான நான் சத்சங்கங்களைக் கேட்டு அனுபவிப்பதற்கு முன்னமே பல உறவுமுறைகளிலும் வைத்துக் கொண்டாடி அந்தப்பரமாத்ம சாகரத்தின் சங்கற்பங்களை உணர்ந்திருந்தேன். ஏதோ திருப்தி குறைந்த நிலை மனதில் ஏற்பட்டுக் குருவாக வரவேண்டும் என வேண்டி அழைத்த போது தானே குருவின் மகிமையும் அவர் வழிகாட்டலும் கண்டிப்பும் கிட்டியது.

இப்போது சுவாமிஜீ எனது இயற்கை நிலையைக் கூறினார். நீர் கடுமையாக உலகப் பொருட்களுடன் விளையாடிக் கொண்டிருக்கிறீர்கள் அதை விட்டு விடவேண்டும். என்றார்.

**என்ன விந்தை :**

அப்போது அந்தக் காலகட்டங்களில் சூரிய தரிசனம், சந்திரதரிசனம் என்பன பற்றியும் பஞ்சபூத சக்திகளுடன் விளையாடுவதைச் சாகசங்களாக எண்ணிக் கொண்டிருந்தேன். வீட்டில் இரவில் வெளிச்சம் மின்சாரம் மூலம் கிடைக்கும். அதைப்போ என்றால் அது நின்றுவிடும். ஒருவரை நினைத்து அவர் வரவேண்டும் என்றால் முன் வந்து நிற்பார். இரவு நடுநிசியில் எனக்கு மதியம் பூசை பார்க்கக் கிட்டவில்லை. இப்போது பூசைபார்க்க வேண்டும் என்றால் பூசை நடைபெறும். இவைகளைச் செய்து கொண்டு மனதில் திருப்தியை எப்படியும் நிறைவாகப்போதும் என்று சொல்லிவிடப் பல காலங்கள் செல்லலாம்.

இப்போது அதைச் செய்து கொண்டு திரிவதனால் தானே இந்தச் சத்சங்க சாகரத்தில் மீண்டும் மீண்டும் மூழ்கி நேர்வழிக்குச் சார்ந்து நிற்க விரும்புகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகள் எல்லாம் விளையாடுவது எதற்கு? புதுமையாகவும் தித்திப்பு ஊட்டும் சுவைகள் கிடைப்பதினாலும் அல்லவா அப்படித்தான் இந்த மனித மனம், அதற்குக் கடிவாளம் போட்டு, உண்மைத்தவம், உண்மைத் தியானம் உண்மையைக்கூட ஆசையுடன் நாடாமல் உண்மையுடன் உண்மையாகக் கலந்திருக்க வைத்திருக்கவேண்டும்.

எல்லா உரையாடல்களும் முடிந்து அன்று மறுநாள் எல்லோரும் அழைக்கப்பட்டு தனித்தனியே உபதேசத்தைப் பெற்றுக்கொண்டோம். பொறுப்புக் கிடைத்துவிட்டது. ஆத்ம ஞானம் கிட்டியது கடும் பாரமாக இருந்தது.

ஏன் அப்படி? சாதாரணமாக எந்த மானிடரும் அதாவது நாமெல்லாம் நமது கண்களால் வெளியுலகைப் பார்க்கிறோம் இரசிக்கிறோம். மனக்கண்ணுக்குப்படும் எவ்வளவோ விடயங்களை நாம் செயற்படுத்திப் பார்ப்பது இயற்கை. இப்படித்தான் ஆத்ம லீலைகளும் மனம் விரும்பியபடியெல்லாம் அதன் தேவைக்கேற்ப இன்பத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கும்.

இந்த இடத்தில் ஒரு விடயத்தைக் கூற விரும்புகிறேன். பல காலமாக இறைவனை நேசித்துச் சித்திகள் பல பெற்றிருந்தாலும் அவை அனைத்தும் அன்று அன்றே எமக்கு உதித்து எழுவது அல்ல. அவைகளுக்கும் காலம் நேரம் என்கிற கட்டுக்கோப்புண்டு.

மனம் நினைக்கும் போது திடீர் என்று ஏதாவது ஏற்படும் என்றால் அது ஒரு அன்னத்தை (பறவை) நீங்கள் இலக்கியத்தில் கூறியபடி உருவகித்துக் கொண்டு அது எப்படி இருக்கும் என்று எனக்குக்காட்டு இறைவா என்றால் அது வானத்தில் பறந்து வந்து கொண்டிருக்கும், திடீரென்று, உங்கள் தோட்டத்தில் இறங்கி பின் எழுந்து பறக்கும். அப்போது மனதுக்கு நிம்மதி திருப்தி ஏற்படும். இப்படி என் விருப்பமும் நிறைவேறி இருக்கிறது. மயில் வந்தது அன்னப்பறவை வந்தது. ஏன் தினம் ஒரு கழுகு/கருடன் (தரிசனத்திற்காக) பறந்துவரும் அல்லது கண்ணுக்குப் புலப்படும்.

இது மட்டுமன்றி பிறருக்காகவும் உதவும் விதத்தில் பல காரியங்களைப் பண்ணி இருக்கிறேன். அவற்றில் இரண்டு ஒரு சிறுவன் மிகவும் புத்திசாலி அவன் என்னைப்பற்றி அறிந்திருந்தான் அதற்குக் காரணம் நான் தானே! அப்போது ஒரு நாள் அவனுக்கு என்ன தேவை என்றாலும் கேட்கும்படி கேட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் கிறிஸ்தவ சிறுவன் அவன் என்னிடம் கேட்டான் உங்களுக்கு முடியுமா? எனக்கு ஒரு Picture Bible கொடுக்க அதற்கு மிகவும் ஆர்வத்துடன் இருக்கிறேன் என்றான்.

எனது உள்ளத்தில் தோன்றியது என்னவோ அதை அவனிடம் கூறினேன் நீங்கள் விரும்பிய புத்தகம் நீங்கள் கேட்டுக் கொண்டதன்படி யேசுவின் கிருபையால் மூன்று நாளில் உங்களுக்குக் கிடைக்கும் என்றேன் அது அப்படியே கிடைத்ததாகக் கூறினான் அந்தச் சிறுவன்.

அவர் தனது பாட்டி வீட்டில் ஒரு பெரும் பெட்டகத்தைச் சுத்தம் செய்து கொடுக்க நேர்ந்ததாகவும் அத்தருணம் அதிலிருந்து அப்புத்தகம் கிடைத்ததாகவும் கூறினார்.

இதில் என் மனம் திருப்தி அடைந்திருந்தது ஆனால் இந்த ஏற்பாட்டை யாரோ எப்போ எங்கோ இருந்து செய்திருக்க வேண்டும். இதனால் தான் கூறினேன். இறைநாட்டம் பக்தியாக இருந்தாலும் ஞானம் பெற்றிருந்தாலும் வெளியில் இன்பம் தேடிச்சென்றுவிடுகிறது.

இப்படி இன்பத்தில் லயித்திருக்கும் எந்த ஜீவனும் ஆத்ம ஞானத்தை அனுபவிக்க 'உள்ளே போ' அங்கே தேடு என்று விளக்கிப் பயிற்சியில் அவற்றின் தன்மையை அனுபவிக்கக் கூறுவார். குரு இந்தப்பயிற்சியின் விபரத்தைத் திருவள்ளுவர் துறவு என்ற தலைப்பின் கீழ் 350ம் துறவியில் வாக்கியமாக இப்படித்தருகிறார்.

'பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு"
***விளக்கம்*** :- பற்றில்லாதவனாகிய கடவுளுடைய பற்றை மட்டும் பற்றிக் கொள்ள வேண்டும் உள்ள பற்றுக்களை விட்டொழிப்பதற்கே அப்பற்றைப் பற்றவேண்டும். (மு.வரதராஜன்)

இறை அனுபவம் என்பது ஒன்றுதான் ஆனால் அது பலபல பக்குவ நிலைகளில் இருக்கும் நமக்கும் பிறவிக் கடலில் மூழ்கிடாமற் சுலபமாக நீந்திக் கரையேறப் பற்பல அனுபவ முறைமூலம் சென்று அந்த ஒரே தரமான அனுபவத்தில் நிலைக்க வேண்டி இருக்கும்.

இப்படியாக மிகவும் அரிதான அனுபவத்தின் தன்மைகளை இன்றும் எனக்குப் பயிற்சியின் மூலம் தான் பெற முடிகிறது. இதன் அன்றைய அனுபவமும் இன்றைய நிலையும் மிகவும் வேறாக இருக்கிறது. ஒரு வளர்ச்சி உண்டு. அனுபவம் இருக்கிறது.

இதைத் தொடர்ந்து எனது இன்னுமோர் முதல் அனுபவத்தை எழுதுகிறேன் படியுங்கள் தொடர்ந்து. . .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4) முதற் சத்சங்கத்தை நிகழ்த்தினேன்

ஒரு வீட்டிலே சிலர் கூடியிருக்கிறார்கள் அங்கு இறைவன் கடவுள், தெய்வம், குரு வாழ்க்கை, நாம் யார், நமக்கு என்ன தேவைப்படுகிறது நாம் எப்படி இந்தப் பூவுலகத்தைப் பாவிக்கின்றோம். விலக்கி நடக்கக் கூடியது. சேர்த்துக்கொள்ளக் கூடியது மேலும் உடல் மனம், புத்தி, பேச்சு, வேதம், வேதத்தில் இருந்து பிறந்த இதர கோட்பாடு, நெறிமுறைகள் என்பதுடன் பல புண்ணிய நல்ல ஜீவாத்மாக்களைப் பற்றி எல்லாம் அவர் அனுபவங்களின் அளவுக்கேற்ப ஒருவர் பின் ஒருவராக, ஒருமணி அல்லது இரண்டுமணி நேரம் எல்லோரையும் நோக்கிப் பேசுவார்கள்.

எந்த விடயமுமே எவரையும் குறித்துப் பேசுவதாக இருக்காது. பொதுவாக எல்லோரையும் நோக்கிச் சத்சங்கத்தை நிகழ்த்தினால் அது யார் யாரைச் சென்றடைய வேண்டுமோ அவர் அவரைச் சென்றடையும் செய்திகள் சத்சங்கமாகப் பிறக்கும்.

மேலே விபரித்த மாதிரியான அனுபவங்களை அதாவது செய்திகளை எனது பங்களிப்பின் போது சத்சங்க உரைகளாகக் கேட்டிருக்கிறேன்.

அன்று, எனது பெயரை எனக்குத் தெரியாமலே பெயர்ப்பட்டியலிற் சத்சங்கம் நிகழ்த்துவதற்காகச் சேர்த்திருந்தார்கள்.

உட்கார்ந்து சத்சங்கங்களைக் காது குளிர கேட்டுக் கொண்டிருந்தேன். அந்த வீட்டின் அதாவது சத்சங்கம் நிகழ்ந்து கொண்டிருக்கும் மனையின் உரிமையாளர் ஒரு ஆத்ம ஞானம் பெற்ற சாதகர். அவர் அனைத்து ஏற்பாடுகளையும் செய்து வைத்திருந்தார்.

அங்கே சமூகம் செய்திருந்த மற்றுமோர் இளம் ஆத்ம ஞானம் பெற்ற இளைஞர் எனது அருகில் வந்து என்னை அழைத்து 'இப்போது நடந்து கொண்டிருக்கும் சத்சங்க உரை முடிந்ததும் நீங்கள் தான் சத்சங்கம் செய்ய வேண்டும் என்றார்.

"நீங்கள் உங்களைத் தயார் படுத்துவதற்கு அந்த அறைக்குச் சென்று ஒரு 5 அல்லது 10 நிமிடம் தியானத்தில் ஆழ்ந்து வாருங்கள்" என்றார். அதாவது ஒருவர் தியானம் செய்வதற்குத்தான் ஆத்ம ஞான மந்திரங்களின் கூட்டம் அவர் சென்று அடைந்த குருவின் உதவியினால் உபதேசமாகக் கிட்டுவது அதனைப் பெற்றபின் எமது வழியைச் சீராக்கி இங்கு வாழும் போதே உடலும் உயிரும் இருக்கும் வரை மனதையும் புத்தியையும் பேணுவதற்கு முயற்சியுடன் செயற்படவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இவ்வாறு நம்மை நாம் அறிந்து சத் புருஷராக மாறுவதற்குத் தேவையான முதற்படிதான் சத்சங்கம் என அழைக்கிறார்கள். இதனை முன்பும் கூறியிருக்கிறேன்." இதனால்தான் அவர்கள் செய்திருந்த ஏற்பாட்டைத் தட்டிக்கழிக்கவோ அல்லது வந்திருக்கும் கூட்டத்தைக் கண்டு கூச்சப்படவோ முடியாமல் அவர் வேண்டிக் கொண்டதன் படி மெதுவாக எழுந்து சென்று அறையில் இருந்து தியானித்துவிட்டு எனது நேரம் வந்ததும் அங்கு வைக்கப்பட்டிருந்த நாற்காலியில் (ஆசனத்தில்) உட்கார்ந்தேன்.

பலர் அங்கு விரிக்கப்பட்டிருந்த விரிப்பிலே அமைதியாக உட்கார்ந்திருந்தார்கள். அதில் ஆத்ம ஞானம் பெற்றவர்கள், புதிதாக வந்து சில சத்சங்க உரைகளைக் கேட்டுக்கொண்டிருப்பவர்கள் தொடர்ந்து பலகாலம் சத்சங்கங்களைக் கேட்டுக்கொண்டு வருபவர்கள் ஆனால் ஆத்ம ஞானம் இன்னும் (குரு உபதேசத்தினால்) கிட்டாதவர்கள் என ஒரு ஆத்ம கலவையே உடன் இருந்தது.

ஒரு நிமிடம் ஆசனத்தில் இருந்தபடி மகா மந்திரங்களில் ஒன்றை உள்ளூர உணர்வதற்காகக் கண்களை மூடி விளித்தேன்.

என்னவென்று சொல்வது, 'கேளுங்கள் சத்சங்கம் கேளுங்கள்' இல்லை இல்லை படியங்கள் மேலே !
எல்லோருக்கும் வணக்கம் !

நமது வாழ்வில் பலவிடயங்ளை நாம் செய்து கொண்டிருக்கின்றோம். ''நமக்குத் தெரியாமலே நமக்குள் உயிர் இருக்கிறது" அது உடலைச் செயற்படுத்திக் கொண்டுதான் இருக்கிறது ' ஆனால் அது நமதுகையில் இல்லை" என்று எண்ணிக் கொண்டே பல ஆண்டுகளாக நாம் காலத்தைக் கடத்துகின்றோம்.

நம்மிடம் ஒருவர் ''எப்படி இருக்கிறீர்கள் " என்று கேட்டால்

''நல்லாயிருக்கிறேன் என்றும் அல்லது பரவாயில்லை' என்றும் அல்லது ''சும்மா போகுது' என்றும் அல்லது என்னத்தச் சொல்ல என்றும் அல்லது ''சீவியம் எப்படியோ ஓடிக்கொண்டிருக்கிறது" என்றும் பல விதங்களிலும் பதில்களைக் கேட்போரைப் பொறுத்துக் கூறியிருப்போம். பதிலைக் கொடுத்த மாத்திரத்தில் நாமும் பதிலுக்கு ''நீங்கள்" என்று கேட்டிருப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி ஆளுக்கு ஆள் நலம் விசாரித்துக் கொள்ளும் போது பதில்கள் வேறுப்பட்டிருக்கிறது. அவற்றின் தொனி பாவ (னை) ம் எல்லாம் வேறுபட்டிருக்கும்.

ஆனால் ஒருவரைப் பார்த்து நீர் **உயிரோடு** இருக்கின்றீரா என்று கேட்டுப்பாருங்கள். '**என்ன உயிரோடா**"? என்று கேட்டுக் கொண்டே ஏங்கி விடுவார் கேள்வி கேட்ட நபரையும் சற்று உன்னிப்பாகவே பார்ப்பார்.

இந்த இடத்தில் நாம் கவனிக்க வேண்டியது நாம் நினைப்பதும், செய்வதும், சொல்வதும் வேறு வேறு பாதையில் நிற்பதை நன்றாக எடுத்துக் காட்டுகிறது.

உயிர் நமக்குள் இருக்கிறது ஆனால் நாம் அந்த உயிரோடு இருக்கின்றோமா? அப்படியென்றால் உயிர் இருக்கிறது. அதற்கும் தனித்தன்மை இருக்கிறது அது எப்படிப்பட்டது? அது உணர்வா அல்லது வேறொன்றா எப்படி அது மாயாஜாலச் சிந்தனைகளை நமக்குள் எழுப்புகிறது?

இது ஓர் நல்ல கேள்வியாக இருக்கிறது. உயிரைப்பற்றித் தெரிந்து கொள்ளத் தோன்றுகிறது. இப்படி நினைத்துக் கொள்ளும் அனைவருக்கும் இந்தக் குருவின் சன்னிதானம் ஒரு பதில் அரங்கம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

நான், நீங்கள் எல்லோரும் பாக்கியம் பெற்றவர்கள். நமக்குத் தெரியாத விடயங்களை நாமே விசாரம் செய்து தெரிந்து கொள்ளும் ஒரு பக்குவ நிலை இங்கு நமக்குக் கிடைக்கின்றது. சத்புருஷர்களாக மாறிக் கொண்டிருக்கும் எமக்குக் குரு துணை இருக்கிறது. தொடர்ந்து சத்சங்கம் கேட்க வாருங்கள்.
வணக்கம்

இப்படித்தான் எனது முதல் சத்சங்க அனுபவம் அமைந்திருந்தது. ஒரு வெள்ளோட்டத்தின் அனுபவம், மேலும் மேலும் பல சத்சங்கங்களைச் செய்து இன்புறுவதற்கு அழைப்புகள் பல கிராமங்களில் இருந்தும் நகரத்தைச் சார்ந்தும் குருவின் கருணையோடு கிடைத்து வந்தது.

**வணக்கம்**

**பகுதி இரண்டு முற்றும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி - iii

### அனுபவத்தின் விளக்கம் :

எனது அனுபவங்களாக, நான் எப்படி ஆத்மீகக்குருவைக் கிடைக்கப்பெற்றேன் என்பதைப் பற்றியும் அதன் பலனாக மன ஒடுக்கத்திற்காகப் பல சத்சங்கங்களிற் கலந்து பயிற்சி பெற்றேன். என்பதைப் பற்றியும் அதனைத் தொடர்ந்து தியானப் பயிற்சியில் ஈடுபடும் பலனை ஆத்ம ஞானத்தின் மூலம் எப்படிப் பெற்றேன் என்பதைப் பற்றியும் கூறினேன்.

அதைத்தொடர்ந்து எல்லா அனுபவங்களும் ஒரு பெரும் சாகரமான ஆழ்கடலான மெய்ப்பொருளின் ஒரு துளி ஆத்ம தரிசனம் பெற்றதன் பலனால் எனக்குக் கிடைக்கப்பெற்ற வெள்ளோட்டித் தருணமாகிய எனது முதற் சத்சங்க உரையைக் கூறினேன்.

எல்லா அனுபவங்களும் கற்றது கையளவு கல்லாதது கடல் அளவு என்பதை மனதில் நிறுத்திக் கொண்டு இப்பகுதியிற் தொடர்ந்து சில சத்சங்கங்களை எழுத்து மூலம் படைக்கிறேன்.

இதன்பலனை நானும் நீங்களும் பயனுள்ளதாக அனுபவிப்பது நிச்சயம் எனக்கூறி அவற்றை அனுபவத்தின் விருத்தியாக உயிர் கொடுக்கின்றேன்.

பொதுச்சத்சங்கம் என்னும் தலைப்பில் பன்னிரண்டு சத்சங்கம் உயிர்பெற்றுள்ளது. அவற்றில் செய்திகள் இருக்கின்றன. இப்பகுதியில் உள்ள அனைத்துச் சத்சங்க உரைகளும் என்னிடம் இருந்து நம் எல்லோருக்காகவும் உதயமாகி இருக்கின்றன.

### பொதுச்சத்சங்கம்

#### 01) சத்சங்கத்தில் நாம் எப்படி இருக்கலாம்

சத்சங்கத்தில் நாம் இணைந்திருக்கின்றோம் நமக்குப்பல அலுவல்கள் இருக்கின்றன. அவற்றை இப்போது சிந்தித்துப் பார்த்தால் பெரும் சுமைகள் இருப்பதாகத் தோன்றும்.

மனம் ஒரு முக்கியமான அகக்கதவு அந்தக்கதவு திறப்பதற்கு நம்மிடம் திறவுகோல் இருந்தால் கடவுளைக் கண்டு விடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக்கதவைத் திறப்பதற்குக் குருவின் உதவி தேவை என நினைத்ததினாற் தான் நாம் இங்கு சத்சங்கத்தில் இணைந்திருக்கின்றோம். பல கதவுகள் உள்ள கோவில்களைப் பார்த்திருக்கின்றோம். அவைகளை ஒவ்வொன்றாகத் திறந்து சென்று இறுதியில் மூலஸ்தானத்தில் குடியிருக்கும் இறைவனுக்குப் பூசை செய்வார்கள். இந்தக்காட்சியைக் கோவில் செலலும் அனைவரும் பக்தியுடன் அனுபவிப்பார்கள்.

இது இந்துக் கோவில்களில் நடைபெறும் ஒரு விடயம் ஆனால் இறைவனைக்காண விரும்பியவர்களுக்கு இயேசுநாதர் கூறிய ஒரு வார்த்தை இருக்கிறது (Empty they self) ''உன்னை வெறுமையாக்கிக் கொள்.''

புத்தர் பிரான் கூறியது ''நிர்வாண நிலையை எய்துங்கள்''

மனதில் இருக்கும் பத்தும் பலதும் சத்சங்கம் கேட்கும் போது முன்னால் வந்து நின்றாலும் சத்சங்கம் நடைபெறும்போது நமது கவனம் இருக்கவேண்டிய இடம் அங்கே சொல்லப்படும் விடயங்களில் மாத்திரமே! கூடையைக் கொண்டு சந்தைக்குச் செல்கிறோம். பல பொருட்களையும் வாங்கி அதில் நிரப்புகின்றோம். கூடை நிரம்பிவிடுகிறது. இனிமேலும் பொருட்களைக் கூடையில் வைக்க முடியாமற் போகிறது அந்த அளவில் வீடு திரும்பிவிடுவோம்.

இதேபோற்தான் நாம் சத்சங்கத்தில் இருப்பதும் நமது மனம் நிறைந்த கேள்விகள் முன்னமே படித்துத் தெரிந்த செய்திகள் எல்லாம் இருக்கும் என்றால் இன்று நிகழும் சத்சங்கத்தில் மனம் என்ன செய்தியை எடுத்துக் கொள்ளும்!

நிரம்பிய கூடை, நிரம்பிய மனம் இது இரண்டிலும் எதுவும் புதிதாகப் போட்டுக்கொள்ள முடியாது அல்லவா.

இதனால்தான் மனதை வெறுமையாக்குங்கள், நிர்வாணமாக இருங்கள் என்கிற வார்த்தைகளைக் குருவானவர்கள் பாவித்தார்கள்.

நாமும் சத்சங்கங்களில் இருக்கும்போது, ஏற்கனவே நம்மிடம் உள்ள அறிவு மூட்டைகளை அல்லது சுமைகளை இறக்கிவைத்து விட்டுக் கலந்து கொண்டால் இன்றையப் பலன் தரும் குரு செய்திகளைக் கேட்டு இன்பம் பெறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருபக்தி, குருநம்பிக்கை இரண்டுக்கும் நமது மனம் எந்த அளவுக்குச் சத்சங்கத்தில் ஊறியிருக்கிறது என்பதிற் தங்கியிருக்கிறது. இதற்காக ஒரு சிறிய கதை கேளுங்கள். !

அனுமார் ஒரு சிறந்த பக்தர் அவர் ஸ்ரீராமபிரானைக் குருவாகக் கொண்டவர். அவரிடம் ஒருவர் ''சுக்கிலப் பட்ஷத்தில் இன்றைக்கு என்ன திதி?'' என்று கேட்டபொழுது அவர், ''இன்றைக்கு என்ன நாள் சந்திரனுக்கு என்ன கலை, நட்சத்திரங்களின் நிலை என்ன என்றெல்லாம் எனக்குத் தெரியாது. எனக்குத் தெரிந்ததெல்லாம் ஸ்ரீராமச்சந்திரனுடைய பாதபத்மங்களே என்றாராம்.

இப்படித்தான் எமக்கும் மனதில் பக்தி ஓங்கி இருக்க வேண்டும் எனக்கூறி இச்சத்சங்கத்தைக் கூறி நிறைவு செய்கிறேன்.

## 02) இவ்வுலகில் எப்படி இருக்கலாம்

நாம் இவ்வுலகில் இருந்து பலவிடயங்களிலும் ஈடுபடுகிறோம் நமக்கு அவசியமான விடயங்கள் இருக்கின்றன. அதேபோல் நமக்கு அனாவசியமான விடயங்களும் நம்மைச் சுற்றி இருக்கின்றன.

எந்த விடயத்தில் நாம் ஈடுபட்டாலும் நம்மையறியாமலோ அல்லது தவிர்த்துக் கொள்ள முடியாமலோ பலனும், பயனும் உள்ளதாக கால் பங்குக்காரியம் பண்ணிவிட்டு பலனற்றதும், பயனற்றதுமான முக்காற் பங்குக்காரியத்தையும் பண்ணி விடுகிறோம்.

ஒரு தோட்டம் இருந்தது; அதில் நிறையத் திராட்சை மரங்கள் இருந்தன. அந்த மரங்களில் பழங்கள் பழுத்துக் கொத்துக் கொத்தாய்த் தொங்கின. அந்தத் தோட்டத்தினைச்சுற்றி முள்வேலி போடப்பட்டிருந்தது. ஒருநாள் பசியால் வாடிய ஒரு நரி அந்தத் தோட்டத்தின் எல்லைக்குள் வந்தது. அந்தப்பழங்களைக் கண்டது. பசி அதிகரித்ததினால் உள்ளே செல்வதற்காக வழியைத் தேடியது தோட்டத்தைச் சுற்றிச் சுற்றி வந்தது. ஒரு சிறு ஈவு கூடத் தனது முழு உடலையும் தோட்டத்தினுள் அனுமதிப்பது போல் இருக்கவில்லை. இறுதியாக ஒரு சின்ன இடைவெளியிற் தலையை மெதுவாக உள்ளிட்டு ஒரு சிறு குழி தோண்டிக் களைத்து விட்ட நிலையில் படுத்திருந்தது. சிறிது வேளை சென்றதும் மீண்டும் குழியைச் சற்றுப் பெரிதாகத் தோண்டி ஒருவாறு தோட்டத்தினுள் நுளைந்து விட்டது. மூன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்களின் பின் நரி தோட்டத்தில் நன்றாக உலவி வருகிறது. வேண்டியளவு உணவு கிடைத்ததினால் உணவு, உலவு, உறக்கம் என்று நல்ல கொண்டாட்டத்தில் நரி கொளுத்து விட்டிருந்தது.

நரியின் நடமாட்டம் தோட்டத்தில் ஏற்பட்டு நான்கு நாட்கள் ஆகியிருந்த நிலையில் தோட்டத்தில் சொந்தக்காரர்களின் நடமாட்டமும் அதிகரித்தது.

நிலைமையை உணர்ந்த நரி மீண்டும் வெளியில் செல்லவேண்டும் என்று தீர்மானித்தது. தான் உள்ளே புகுந்த வழியிற் செல்ல முயன்றது அதனால் வெளியில் செல்ல முடியவில்லை. நரி உள்ளே வரும்போது உடல்மெலிந்து பசியோடு இருந்தது. இப்போதுபசி தீர்ந்து கொழுத்திருந்தது அங்கே அதனால் தோண்டப்பட்ட குழி அதன் உடலை நெருக்கியது மீண்டும் இரண்டு நாட்கள் அந்தக்குழியின் அருகே ஏதும் உண்ணாமற் படுத்திருந்தது. அதனால் உடல் பழையபடி மெலிந்துவிட்டதால் நரி மெதுவாகத் தோட்டத்தை விட்டு வெளியே வந்து விட்டது.

இந்தக் கதையை நன்றாகச் சிந்தித்துப் பாருங்கள் நாம் இந்த உலகில் வந்து இருந்து கொண்டு மிகவும் அதிகமாகச் சேகரிப்பது அனாவசியமான விடயங்கள்.

இதனால் என்ன நிகழும் நமது மனதிற்கு? அவசியமான சிந்தனைகளும், செயல்களும், பேச்சுக்களும் குறைந்துவிடும். இதன் பிரதிபலனால்தான் நாம் பல கஷ்டங்களை அனுபவிக்கிறோம். துக்கமும், கவலையும் கோபமும் படுகிறோம்.

சந்தோசமும் சிரிப்பும் குறைந்து விடுகிறது. இறை சிந்தனைக்கான சரியான பாதையும் தெளிவில்லாமற் போய்விட்டது. இப்படி இந்த உலகில் நாம் மீண்டும் மீண்டும் வருவதும் போவதுமாக இருப்பதற்குக் காரணம் அனாவசியக் கருமபலன்கள் என்று பல முக்தர்கள் கூறி விளக்கியிருக்கிறார்கள்.

இந்தநிலை மாறுவதற்கு நாம் செய்யும் காரியத்திற்கும் , சொல்லும் சொல்லிற்கும், நினைக்கும் நினைப்பிற்கும் தொடர்பு இருக்கிறதா, என்று சரிபார்த்துக் கொள்வது மிகவும் அவசியம். அப்போது பல விடயங்கள் அவசியமாகவும் மிகவும் இலகுவாகவும் சீக்கிரமாகவும் பூர்த்தியடைந்து விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படி நடந்தால் நமக்கு மிகுதி நேரம் எல்லாம் சந்தோசமும் இருக்கும் கூடவே புன்னகையும் இருக்கும். இப்படி இந்த உலகில் இருக்க பழகிக்கொள்வது நமக்கும் நம்மைச் சார்ந்தவர்களுக்கும் நன்மை பயற்பதாக இருக்கும். என்று கூறி இந்தச் சத்சங்கத்தை முடித்துக் கொள்கிறேன்.

## 03) மனதை எப்படி வைத்திருக்கலாம்

நாம் இங்கு சத்சங்க உரைகளைக் கேட்கின்றோம். நமக்கு மனதிலும் வார்த்தையிலும் செயலிலும் தெளிவு ஏற்படுகிறது. இவ்வாறு ஏற்பட்டிருக்கும் தெளிவில் ஒரு சிறு சிக்கல் வருகிறது. அச்சிக்கலைத் தீர்ப்பதற்கு நாம் மிகவும் சிரமப்படுகிறோம்.

சிறிது நேரம் சில நாட்களாகின்றன; சில நாட்கள் சில வாரங்களாகின்றன. சில வாரங்கள் சில மாதங்களாகின்றன என்று வைத்துக்கொள்வோம்.

இப்படி எமது சிரமம் இருக்கும் நிலையில், நாம் புரிந்து கொள்வதற்காக ஒரு கதை கூறுகிறேன்.

ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவின் பால் சிறந்த பக்தி கொண்டவர் ஒருவர் இருந்தார். அவர் நேரம் நாளிகை தவறாமல் நாராயணா நாராயணா என்று பரமாத்மாவின் நாமத்தைத் தியானமாகவே கொண்டிருந்தார். அவர் தான் நாரதர் என்ற மஹறிஷி. அவருக்கு ஒரு நாள் தன்னை விடச் சிறந்த பக்திமான் இல்லை என்ற எண்ணம் ஏற்பட்டது. இதைக் கவனித்த நாராயண மூர்த்தியாகிய பரமாத்மா, அவரை அழைத்து ஒருமானிட பக்தனைச் சந்தித்து வருமாறு கூறினார்.

தேவர்களானாலும், மனிதர்களானாலும் சரி பகவானின் பணியில் இன்பம் காண்பது நிச்சயம் என்பதில் நம்பிக்கை கொண்ட நாரதரிஷி, அந்தப்பக்தரின் வீட்டுக்குச் சென்று பார்த்தார்.

அங்கே அந்த மனிதர் நாராயணனைக் காலையிற் தான் தொழிலுக்குச் செல்லுமுன் ஒரு தடவையும், பின்பு தொழில் முடித்து வீடு திரும்பி உணவுக்கும், படுக்கைக்கும் முன் ஒருதடவையும் மனமார வணங்கி வருவதைக் கண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் தன்னுடன் ஒரு கூரான கத்தியை எப்போதும் கொண்டு திரிவதையும் நாரதர் கண்டார். இந்த மானிடரின் காரியங்களிற் சந்தேகம் கொண்ட நாரதர் ஒரு நாள் அந்த மனிதரிடம் பேசினார்.

''பக்தி வணக்கம் பிரார்த்தனை இவைகளுக்கு மத்தியில் உங்களுடன் ஒரு கூரான கத்தியும் இருக்கிறது இதை எதற்காக கொண்டு திரிகிறீர்கள்" என்று கேட்டார்.

அதற்கு அந்தப் பக்தி கொண்ட மனிதர் ''எனது பகவான் பக்தர்களுக்கு இடைவிடாது அருள் புரிகிறார். அவரைத்தேடும் நாங்கள் ஓய்வுபெறுகிறோம். ஆனால் பகவானுக்கு ஓய்வு இல்லை. அதற்கு ஒரு பக்தர் காரணமாக இருக்கிறார். அவருக்குத் தன்னைப்பற்றிக் கவலை. ஆனால் பகவானின் நலத்தில் அவருக்கு கவலையில்லாமல் நாராயணா , நாராயணா என்று நாம ஜெபம் செய்து கொண்டே திரிகிறார். அதனால் பகவானுக்கு மூவுலகமும் நிம்மதி அற்ற இடமாக மாறிவிட்டது. அந்தக் கொடுமைக்காரப் பக்தரைக் கண்ட மாத்திரத்திற் குத்திக் கொன்றுவிடவே கத்தியைக் கையுடன் வைத்திருக்கிறேன்' என்றார்.

இதைக் கேட்ட நாரதர் தன்னை அடையாளம் காட்டிக் கொள்ளாமலே நேரடியாகப் பரமாத்மாவிடம் வந்து சேர்ந்தார்.

''இது என்ன விந்தை ஒரு நாளைக்கு இரண்டு தடவை உங்களை வணங்கிவிட்டு என்னையும் கண்ட மாத்திரத்தில் கொன்றுவிடும் எண்ணத்தில் சஞ்சரிக்கும் அந்த மானிடனின் பக்தியைத் தாங்கள் மெச்சி என்னை அவனிடம் சென்று வரக்கூறினீர்களே இது எனது பக்தியை அவமதிக்கும் செயல் என்று புலம்பிக் கொண்டிருந்தார்.

இதைக் கேட்டு புன்முறுவல் பூத்த பரமாத்மா நாராயணன் ''நாரதரே தங்களை அவமதிக்கவில்லை ஆனால் உங்களுக்கு ஒரு வேலை தருகிறேன். அதை முடித்துவிட்டு வாருங்கள் அதன் பின்பு உங்கள் கேள்விக்கு விளக்கமளிக்கிறேன்" என்றார்.

வேலையைத் தொடங்குவதற்கு ஒரு பாத்திரத்தில் விளிம்புவரை நெய் நிரப்பி நாரதர் கைகளில் கொடுக்கப்பட்டது. ''இந்தப் பாத்திரத்தில் உள்ள நெய் ஒரு முக்கிய தேவைக்குத் தேவைப்படுகிறது. இதை மூவுலகம் கொண்டு சென்று பின்பு கொண்டு வருவதுதான் உங்கள் வேலை. ஆனால் இதில் இருந்து ஒரு துளி கூட கீழே சிந்தக் கூடாது" என்று கூறப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாரதரும் இன்பத்துடன் வேலையை ஆரம்பித்தார். ஆரம்பத்தில் அவர் வழமைபோல் நாராயணா நாராயணா என்று வேலையைத் தொடங்கினார். ஆனால் பாத்திரத்தில் உள்ள நெய் சிந்திவிடக் கூடாது என்ற எண்ணம் தோன்றவே அவருடைய கவனம் எல்லாம் நெய் நிரம்பிய பாத்திரத்தில் இருந்தது. வேலையைச் சீராக முடித்து நெய் நிலத்தில் சிறிதும் சிந்தாது பாத்திரத்தைக் கொண்டு வந்து சேர்த்தார்.

இந்த வேலையை மனப்பூர்வமாக மெச்சிய நாராயணன் ''நாரதரே! இந்த வேலையைத் தொடங்கி முடியும் வரை உங்கள் சிந்தையில் எத்தனை தடவை என்னை நினைத்தீர்கள் " என்று கேட்டார்.

நாரதரால் பதில் கூறமுடியவில்லை ஏனென்றால் வேலையிற் கவனம் செலுத்திய அவருக்குப் பரம்பொருளான நாராயணனின் நாம ஜெபத்தை மேற்கொள்ள முடியவில்லை.

பக்தியின் மகிமையை உணர்ந்த நாரதர், நாராயணா பரமாத்மாவிடம் சரணடைந்தார். ஆணவம், அகங்காரம் என்பன மனதை இலகுவில் பற்றிக் கொள்ளும். இந்தக் கதையில் நான்தான் பெரும் பக்தன் என்கிற அகங்காரத்தினால் கடும் சோதனைக்குள்ளாக்கப்பட்டார் மகரிஷிநாரதர்.

நாம் சத்சங்கம் கேட்பதும் அதன் அனுபவத்தில் மனம் பெருமை கொள்வதும் அதனால் ஏனைய ஜீவராசிகளைத் துல்லியமாக எடைபோட்டு விடுவதும் மனத்தினால் ஏற்படுத்திவிடக் கூடிய சிக்கல்கள் ஆகும். இவைகளைக் காலம் தீர்த்து வைக்கும் என்பது மிகவும் பொருத்தமான விடையாகும்.

இப்படியாகப் பட்ட - காலகட்டங்களை நாம் கடந்து சென்றால், நமக்குக் குருவினால் கற்பிக்கப்படும், பாடங்களைப் புரிந்து கொண்டால் மிகவும் பெரிய சிக்கல்கள் கூட காலம் தாமதமானாலும் தீர்ந்து போய்விடும்.

மனமானது சரியான பாதையில் இருந்து பாதை மாறிப்போவதும் அதைச் சரி செய்வதும் குருவின் சன்னிதியில் நடைபெறும் ஒரு அற்புதமான செயல். குரு நம்பிக்கை, நமக்குக் கசப்பான அனுபவங்களால் ஏற்படும். கலகத்தில் இருந்து நம்மைக் காக்கும் எனக்கூறி இச்சத் சங்கத்தை முடிக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**04) எங்கே இறைவனைத் தேடலாம்**

நாம் எல்லோரும் இப்போது சத்சங்கங்கள் கேட்கிறோம். நமக்கு நிறையப் பல விடயங்களையிட்டுத் தெளிவு பிறந்திருக்கிறது. இப்படித் தெளிவு ஏற்பட்டிருக்கும் நமக்கு ஒரு பெரும் கேள்வி எழுகிறது. அதுதான் இறைவனை எங்கே காண்பது எங்கே தேடுவது என்பது நமக்கு இயற்கையாகவே எழும் குணங்களில் ஒன்றாகும்.

இறைவனைக் கடவுள் என்று நாம் பல இடங்களிலும் சொல்லக் கேட்டிருக்கின்றோம். அவ்வாறே பகவான், பரமாத்மா, படைத்தவன் என்றெல்லாம் கூடக் கேள்விப்பட்டிருக்கும் நமக்கு, சத்சங்கம் மூலம் இந்த மகா சக்தியைப் பற்றி அறிந்துகொள்ள விருப்பம் வருகிறது.

மகா சக்தியான இந்தச்சத் பொருளைப்பற்றி ஒரு நீண்ட சத் சங்கத்தையே செய்யலாம். ஏனெனில் பல வழிகாட்டிகளின் பாதைகளைக் கடந்து இந்தக் காலகட்டத்தில் வாழும் நமக்குப் பல ஆதாரங்கள் இந்த ஏகோபித்த கேள்வியின் விடையாக இருக்கின்றன.

உண்மைப் பொருள் என்றால் கடவுள்

கடவுள் என்றால் கடந்து உள்ளே செல் என்று பொருள் (அரிதிலும் அரிய விடயம்) எதைக் கடந்து எதற்குள்ளே செல்வது என்பது கேள்வி? எல்லாமாக **ஐந்து செயற்கருவிகள், ஐந்து அறிவுக்கருவிகள், ஐந்து உயிர்மூச்சுக்கள்** மனம், புத்தி என்ற மொத்தம் பதினேழு கருவிகளையும் கடந்து செல்வது என்பது தான் (தத்துவத்திலும் அரிய தத்துவம்) ஞான மார்க்கத்தின் தத்துவமே. ஒரு பொழுதும் நாம் ஒரு மரத்தில் உள்ள காயைப் பறித்து அதனை தடியினால் அடித்து மெதுமையாக்கி, இது பழுத்த பழம் என்று கூற முடியாது.

இயற்கையாகவே ஒரு கனி, மரத்திற் பூத்து, காய்த்து, முதிர்ந்து பின் பருவத்தால் பழுக்க வேண்டும். அதுதான் சரியான சுவையையும் தரும். இப்படித்தான் இறைவன் விடயமும் இந்த மெய்யுணர்வு ஒரு குருவினுடைய துணை கொண்டுதான் பெறக் கூடியதாக இருக்கிறது. நமக்கு இறைவனைத் தேட வேண்டிய இடம் உள்நோக்கிச் செல்கிறது என்று தெரிந்துவிட்டது. எனவே நமக்கு ஒரு நம்பிக்கை வரவேண்டும் வெளியிற் தேடிக்கிடைக்காதவர் எப்படி மனம், புத்தி இவைகளின் செயற்பாடுகளையும் மீறிக்கிடைப்பார் என்று எண்ணுவது எமது இயல்பாக இருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அது ஒரு உணர்வு மயமானது என்பது உன்னதத்திலும் உன்னதமான அனுபவத்தின் விளக்கமாகும். குருவானவர் இதை ஆத்ம ஞானத்தின் மூலம் அறியத்தருவார்கள். மனதிற்கும் இதன் மூலம் திறவுகோல் கிடைத்துவிடும். அடுத்தபடியாக உள்ளே சென்று இறை தரிசனம் கிட்டி இன்புறலாம்.

கிருஷ்ணர் கூறியது :- "எவர் ஒருவருக்கு அவரின் ஒவ்வோர் உடல் அணுக்களினூடாகவும் ஞானம் மிளர்கிறதோ அவரே என்னை முழுமையாக அறிந்தவர்."

இயேசு கூறியது :- "உடல்தான் ஆலயம், மோட்ஷராட்சியம் உனக்குள்ளே இருக்கிறது" தன்னைக் குறித்துக் கூறியதாவது : இந்த ஆலயத்தை இடியுங்கள் மூன்று நாட்களில் மீண்டும் கட்டி எழுப்புவேன். (சிலுவையில் மரித்தார் 03 நாட்களில் உயிர்த்தார்)

நபிகள் கூறியது : "அல்லாவின் தூதுவன் நான் அவனுக்குத் தாய் தந்தை என்கிற எந்தத் தனிப்பட்ட உறவும் இல்லை. ஈடு இணை அற்றவன், இங்கு அவனைத் தவிர வேறொன்றுமில்லை"

புத்தர் கூறியது :- "ஞானம் பெற்ற பின்பு எல்லாம் இறைமயமாக ஒளிர்கிறது"

நமக்குள் இருக்கும் மோட்சராட்சியம் தெரிந்து விடும். நமது உடல் உறுப்புக்கள் அனைத்தின் மூலமாகவும் ஞானம் மிளிரும்.

ஈடு இணையில்லாத இறைமயத்தை நமக்குள்ளும் புறமும் ஞானக் கண்கொண்டு உணரலாம்.

ஒளிமயமான காலத்தினுள் இருள் நீங்கிச் சென்று அனுபவிக்கலாம். அதுவரை இப்போதுகிடைக்கும் சத்சங்கங்களில் ஊறி இருப்போம் எனக் கூறி இச்சத்சங்கத்தை முடிக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 05) இந்த வாழ்க்கை ஏன் இப்படி இருக்கிறது

இன்னுமோர் சத்சங்கத்தில் நாம் இணைந்திருக்கின்றோம். நமக்கு எழும் வினாக்களில் ஒன்று இந்தப் பிரபஞ்ச அமைப்பில் நமது பூவுலக வாழ்க்கை ஏன் இப்படித் துன்பங்களும் இன்பங்களும் கலந்திருக்கின்றது என்பது கடவுள் அன்பானவர், அவர் எல்லாம் அறிபவர், அவர் என்றும் இருப்பவர் என்று பல முறை சொல்லக் கேட்டிருக்கின்றோம்.

ஆனால் இந்த வாழ்க்கைக் காலத்தில் நிம்மதி ஏது, இறைவன் தான் ஏது என்று பலமுறை பலரும் புலம்புகிறார்கள். இதையும் கண்டிருக்கின்றோம்.

ஒருமுறை ஒரு பக்தனின் கனவில், காளி மாதா தோன்றினாள். அந்தப்பக்தனின் மனதில் ஏற்பட்ட கவலையைப் போக்க ஒரு உபாயம் கூறினாள்.

இந்தப் பக்தன் ஒரு கூலி வேலை செய்யும் நாட் சம்பளத் தொழிலாளி. இவன் வழமையாகச் சென்று வணங்கும் ஒரு காளி கோயில் அந்த ஊரின் ஒரு சிறிய இயற்கை வனத்திற்கு அண்மையில் இருந்தது.

கனவில் தோன்றிய காளி மாதா கூறிய உபாயத்தின் படி மறு நாட் காலைப்பொழுது புலருமுன் எழுந்து ஊர் எல்லையில் உள்ள காளி மாதா கோவிலுக்கு வடபகுதி எல்லையில் பத்தடி ஆழத்திற்கு நிலத்தைத் தோண்டி அங்கு இருந்த புதையலைக் கண்டான் அந்தக் கூலிப்பக்தன். அந்தப் புதையலில் ஒரு வெண்கலப்பானை நிறைய முத்துக்கள் இருந்தன. காளிமாதா கூறிய உபாயத்தின் படி அந்த முத்துக்களை அவன் வெளியில் எடுத்து தனக்கு விரும்பிய அளவு முத்தை அப்பானையில் விட்டு வைத்துச் செல்ல வேண்டியது அவன் வேலை.

இந்தக் கூலிப்பக்தன் தான் கொண்டு சென்ற துணியில் முத்துக்களை நிரப்பிக் கொண்டிருந்த போது அவனுக்கு மீண்டும் கனவில் கூறிய உபாயம் கண்முன் வந்தது. அதன்படியே அவன் தனக்கு விரும்பிய அளவாக முத்துக்களைத் தனது துணியில் கொட்டி எடுத்துக் கொண்டு தனது கையில் ஐந்து விரல்களுக்குள்ளும் அடங்கும் அளவு முத்துக்களை அள்ளி அந்தப் புதையற் பானைக்குள் போட்டு, அந்தப் பானையை இருந்தபடியே மூடிவிட்டு தனது துணியைக் கட்டி எடுத்துக் கொண்டு முத்துக்களுடன் புறப்பட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கூலிவேலை செய்யும் பக்தன் அந்த ஊரில் தினம் ஒரு வீடு என்ற முறையிற் சென்று, அங்கு அவனுக்குக் கொடுக்கப்படும் வேலைகளைச் செய்து முடித்துவிட்டுக் கூலியாகப் பணமோ அல்லது உணவுக்கான பொருள்களோ பெற்றுக்கொள்வது வழக்கம்.

அவன் மனம் தான் இன்று கூலிவேலை செய்வதில்லை என்றும் தனது கையில் உள்ள முத்துகள் நிறைந்த பொட்டலத்தைத் தனது வீட்டுக்கு விரைவில் கொண்டு சேர்த்துவிடுவது நல்லது என்றும் முடிவு எடுத்துக் கொண்டது.

அவனது வீட்டுக்குச் செல்லும் வழியில் வயதான பாட்டி ஒருவரின் வீடு இருந்தது. அப்பாட்டி இந்தக் கூலிப்பக்தனைத் தனது வீட்டின் கூரையில் ஏற்பட்டிருந்த ஒழுக்கைச் சரிபண்ணுவதற்காக இன்றைய தினம் தனது வீட்டிற்கு வரும்படி கேட்டிருந்தாள் இவனும் சம்மதித்திருந்தான்.

பாட்டியின் வீட்டைக்கடந்து கொண்டிருந்த இவனைப் பாட்டி அழைத்தாள். இவனுக்குத் திண்டாட்டம். மனம் தயங்கினான் இப்போது முடியாது மதியம் வருகிறேன் என்று நழுவ முயன்றான். பாட்டிவிட்ட பாடில்லை.

வீட்டின் கூரையில் ஏறுவதற்கு ஒரு ஏணியைத் தயாராக்கினாள் பாட்டி. இவனுக்குத் தனது கையில் உள்ள முத்துக்கள் நிரம்பிய மூட்டையை என்னசெய்வது என்று தடுமாறித் தனது மடியிலே கட்ட முயன்றான்.

இதைக் கண்டுகொண்ட பாட்டி அடப்பாவிப் பயலே இந்த மூட்டையில் என்ன முத்தா வைத்திருக்கிறாய் வேலை செய்யும் போது கூடவா இதைச் சுமக்க வேண்டும் என்று கூறி அதனைத்தரும் படி கேட்டார்.

பதிலாக அவனும் 'பாட்டி இதற்குள் கொஞ்சம் பயறு இருக்கிறது இது எனக்குக் கிடைத்த கூலி நேற்றுப் பெய்த மழையினால் தரை எங்கும் ஈரமாக இருக்கிறது. அதுதான் மடியிற் கட்டியிருக்கிறேன்' என்று கூறினாள்.

சரி அதைக்கொடு நான் களஞ்சியப்பானையில் வைக்கிறேன். நீ வேலை முடித்தபின் எனது கூலியையும் பெற்று இதையும் எடுத்துக் கொண்டு வீட்டுக்குச் செல் என்று கூறி அவனது மூட்டையைப்பெற்றுக் கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூலிப்பக்தன் கூரையில் ஏறினான் பாட்டி முத்து முடிச்சைக் களஞ்சிய அறைக்கு எடுத்துச் சென்றாள். பாட்டியின் கையில் இருந்த அந்த முத்துக்கள் நிரம்பிய முடிச்சு பாரமாக இருந்ததால் இதில் பயறு இருக்காது என ஊகித்த பாட்டி துணி முடிச்சை அவிழ்த்துப் பார்த்தாள்.

என்ன அதிசயம், பாட்டியின் கண்களை அவளாலேயே நம்ப முடியவில்லை. மெதுவாக இருந்த முத்துக்களைத் தனது களஞ்சியப் பானைகளில் அடிப்பானையில் கொட்டிவிட்டு அந்த முடிச்சில் இருந்த கனத்திற்கு ஏற்ப பயறுகளை நிரப்பி வைத்துவிட்டுக் கூலிப்பக்தன் வேலையை முடிக்கும் வரை காத்திருந்தாள்.

கூலிப்பக்தன் வேலையை அவசர அவசரமாக முடித்துக்கீழே இறங்கிவந்து பாட்டியிடம் முத்து முடிச்சைக்கேட்டான் பாட்டியும் அவன் கூலியையும், துணி முடிச்சையும் அவனிடம் கொடுத்து நிறையப் பயறு இருக்கிற மாதிரித் தெரிகிறது. சீக்கிரம் வீட்டுக்குக் கொண்டு சென்று சமைத்து (அவித்து) உண் என்றாள். அவனும் தனது முடிச்சைச் சந்தேகத்துடன் வாங்கி அவிழ்த்துப் பார்த்தான் அதில் முத்துக்கள் இல்லை பயறு தான் இருந்தது.

பாட்டியை வினவியபோது பாட்டியும் ''நீ பயறு இருக்கிறது என்று கூறித்தானே என்னிடம் துணி மூடிச்சைக்கொடுத்தாய் அது அப்படியே தான் இருக்கிறது கொண்டு செல்" என்றாள்.

பக்தன் கோபப்பட்டான், கவலைப்பட்டான் தான் கூறிய பொய்யை நினைத்து மிகவும் வருந்திக் கொண்டு எதுவும் பேசமுடியாமல் வீடு சென்றான்.

ஒரு நாளும் இல்லாதபடி படுக்கையிலும் புலம்பினான்; இரண்டு நாட்கள் வீட்டிலேயே இருந்தான். இரண்டு நாட்கள் காலையில் நிரப்பியிருந்தாலும் பக்தன் தனது கோவிற் தெய்வமான காளிமாதாவை மிகவும் கடுமையாக வாயினாலும், மனதாலும் திட்டியது மட்டுமல்லாமல் தனது பொய்யை நினைத்துத் தன்னையும் அடிஅடித்து வருத்திக் கொண்டான்.

இரண்டு நாட்பொழுதும் இரவும் கழிந்துவிட்டது. மூன்றாம் நாள் இரவு அந்தக் கூலிப்பக்தனின் கனவில் காளிமாதா தோன்றினாள். பக்தனுக்கு நல்லபடியாக விளங்கும் வகையில் தனது முதல் உபாயத்தை மீண்டும் ஞாபகப்படுத்தினாள் பக்தனுக்குக் கொடுக்கப்பட்ட முதல் உபாயத்தில் அவன் முத்துக்களை எடுத்துக் கொண்டு செல்லும் வேலை இருந்தது. அத்துடன் அவன் புதையல் பானையில் முத்துக்களை விட்டுச்செல்லும் வேலையும் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காளிமாதாவின் இன்றைய உபாயம் அவன் கனவில் சொல்லப்பட்டது. 'பக்தா நீ வருந்துவதும், வருத்துவதும் என்னைத்தான் நீ கொண்டு சென்ற முத்தில் ஒன்றைக் கூட நான் உனது பாவிப்பிற்கு என்று கூறவில்லை. அது எங்கு சேரவேண்டுமோ அங்கு சேர்ந்துவிட்டது. உனக்குத் தேவைப்படப் போகும் முத்தை நீயே நிர்ணயித்தாய். உனக்கு என்று நான் தீர்மானித்த முத்துக்களை உனது மூலமாகவே அந்தப் புதையலில் விட்டு வைக்கக் கூறினேன். அதைக்கூட இன்று தான் நான் உன்னிடம் கூறுகின்றேன். நீ போய் உனது பங்கை எடுத்து உனது வாழ்க்கைக்குப் பயன்படுத்து" எனக் கூறிக் காளிமாதா மறைந்து விட்டாள்.

நீண்டதோர் சத்சங்கத்தில் நீண்டதோர் கதையைப் படித்து முடித்திருப்பீர்கள். நாம் இன்று செய்வது எல்லாம் ஆசை கலந்ததும், விளக்கம் குறைந்ததும், முன் அனுபவம் இல்லாததும் புத்தித்தடுமாற்றம் நிறைந்திருப்பதும் முற்றிலும் தவிர்க்க முடியாததாக இருக்கிறது.

இப்படித்தான் இந்தக் கூலிப்பக்தனின் வாழ்க்கையும் இருந்தது. இதை விளங்கிக்கொண்டால் நமது இந்த வாழ்க்கை பற்றிய கேள்விக்கும் பதில் ஓரளவாவது கிடைக்கும் எனக்கூறி எனது இந்தச் சத்சங்கத்தை முடித்துக்கொள்கிறேன்.

## 06) இந்த நிமிடம் தான் நமது நிமிடம்

நாம் நன்மை செய்யும் சத்சங்கத்தில் கூடி இருக்கிறோம். நமக்குத் தெரியாமல் நமது மனம் இயங்குகின்ற போது நமக்கு ஞாபகமறதி வருகிறது. இதன் காரணத்தால் நமக்குப் பயம் வருகிறது. இறைவனுக்கு உண்மையாக இருக்கிறேனா அல்லது அப்படி நடிக்கிறேனா என்று நம்மையே நாம் கேட்டுக்கொள்வதுண்டு.

ஒரு நிகழ்ச்சி எனக்கு ஞாபகம் இருக்கிறது. அதை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். ஒருமுறை ஒரு தனியார் பஸ் வண்டியில் பயணம் செய்து கொண்டிருந்தேன். அதில் பிரயாணிகள் நிறைந்து இருந்தனர். அதில் வேலைக்குச் சென்று திரும்பும் பலர் இருக்க இடமில்லாமல் நின்றும் வந்தனர்.

ஆசனத்தில் நெருக்குண்டு உட்கார்ந்திருந்த எனக்கு முன்னால் உள்ள ஆசனத்திலும் ஒருவர் அதே கெதியில் உட்கார்ந்திருந்தார். அவர் அணிந்திருந்த குல்லாத் தொப்பியும் அத்தர் வாசனையும் அவரின் வெள்ளை வெளீரென்ற சாரனும் (கீள் அங்கி) அவரை ஒரு முகமதியர் என்பதை எடுத்துக்காட்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று வெள்ளிக்கிழமை உரிய வேளைக்கு வரவேண்டிய புகையிரதமும் ரத்துச் செய்யப்பட்டிருந்ததால் பலர் தனியார் வண்டிகளுக்காகப் பிரதான வீதி ஓரங்களிற் காத்து நின்று கொண்டிருந்தனர்.

வண்டியில் நெருக்கடி, காற்றோட்டம் மிகவும் குறைவாக இருந்தது. ஓரக் கதவு திறந்து அதில் பணம் வசூலிக்கும் நபர் நின்று கொண்டு பயணம் செய்கிறார். வெளிக்காட்சிகளை ரசித்தபடி உட்கார்ந்திருந்த எனக்கு முன்னால் இருந்த பயணியான முகமதியரைக் கவனித்தேன். அவர் கையில் ஒரு ஜெபமாலை அவர் அதை வருட்டிக்கொண்டே வாய்க்குள் ஜெபித்துக் கொண்டு வெளிக்காட்சிகளையும் இரசித்தபடி இருந்தார். அடிக்கடி கைக்குட்டையால் முகத்தில் வடிந்தோடிய வியர்வையையும் துடைத்து விட்டுக் கொண்டார்.

பக்தர்கள் பலவிதம் என எனக்குள் நான் நினைத்துக் கொண்டேன். பயணம் முடிந்து வீடு வந்து சேர்ந்தேன். மறுநாள் சனிக்கிழமை சத்சங்கம் நிகழும் ஒரு ஆத்மஞான சாதகர் வீட்டுக்குச் சத்சங்கம் கேட்கச் சென்றிருந்தேன்.

ஒரு சத்சங்கம் தொடங்கியது அந்தச் சத்சங்கத்தில் இருந்து ''கையிலே ஜெபமாலை உருளுகிறது வாயிலே நா உருளுகிறது. மனமோ உலகமெல்லாம் உருளுகிறது" என்று வார்த்தைகள் உதிர்ந்தன. எனக்குப் படம் ஓடியது போல் இருந்தது நான் முதல் நாள் கண்ட காட்சி நினைவிற்கு வந்தது. ஒரு பாடம் படிப்பினையாகச் சத்சங்கத்தின் மூலமாகக் கிடைத்தது. நமது மனம், செயல், பேச்சு இவை ஒரு தொடர்பற்ற நிலையில் செயற்பட்டால் தவறு என்பது தான் அது.

நாம் நமது மனதை ஒரு நிலையில் நாம் செய்யும் காரியத்தின் நிமிடத்திலும் செயற்படும் நிமிடத்திலும் வார்த்தைகள் வெளியிடும் நிமிடத்திலும் வைத்திருக்க வேண்டும்.

இந்தப் பயிற்சியைக் கொண்டு தான் நமது மனதை நாம் நமது புத்தியின் படி இயக்க முடியும். இதையே 'மனோலயம்' என்று கூறப்படும். இந்த மனோலயம் இருக்கின்ற வரைக்கும் எமக்கு நினைவு ஒளிவிட்டு மறதி என்கிற இருள் கலைந்துவிடும்.

இதன் பலனால் சத்சங்கத்தில் இருக்கும் நமக்கு நிறைவான செய்திகளும் அதேபோல் அங்கில்லாத சமயங்களில் நாம் என்ன பண்ணிக் கொண்டிருந்தாலும் மனதை நாம் தொட்டுச் செல்லும் போது பண்பாட்டுடன் இயங்குவோம். இப்படிப் பயின்று வந்தால் நாம் உண்மையாக இருப்பதும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலியாக இருப்பதும் புலப்படும். இதைக்கொண்டு நாமே நம்மைச் சரிபார்த்துக் கொள்ளலாம் எனக் கூறி இச்சத்சங்கத்தை இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

## 07) நாம பேதங்கள் நமக்கும் இறைவனுக்கும் இல்லை

நாம் மீண்டும் ஒரு சத்சங்கத்தில் இணைந்திருக்கிறோம்.

நமக்குப் பயிற்சியான வரையில் நமது பெற்றோர்கள் நம்மையும் அழைத்துக்கொண்டு கோவில்களுக்குச் செல்வார்கள், தேவாலயங்களுக்குச் செல்வார்கள், பள்ளிக்குச் செல்வார்கள். இவ்வாறு வேறுபட்ட இறை வணக்கங்கள் எல்லா நாடுகளிலும் நடக்கின்றன. அவற்றிற்கும் வெவ்வேறு பெயர்கள் இருக்கும் அதேபோல் வழிபடும் முறைகளும் இருக்கும்.

நாம் எந்தக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தோம் என்பதில் பல விடயங்கள் தங்கியிருக்கின்றன. அதேபோல் நமது இறைவணக்கத்தின் ஆரம்பக்கட்டம் அவர்களின் வழிகாட்டலில் தொடங்குகிறது. இங்கு நான் அறிந்த வழிமுறைகளில் பொதுவாக எல்லோருக்கும் தெரிந்த மூன்று வழிபாட்டு இடங்களை உதாரணத்திற்காக எடுத்துக் கொள்கிறேன்.

பள்ளி (மொஸ்க்) : இங்கு புறச்சுத்தம் செய்வார்கள். தொழுகையை முடிப்பார்கள். பின் குர்ஆன் படிப்பார்கள். அவர்களுக்கு இறைதூதுவர்கள் அனைவரிலும் நம்பிக்கை இருந்தாலும் இறுதியாகப் போதனைகளையும் சத்சங்கங்களையும் நிகழ்த்திய முகம்மதுநபி சல்லலலாகு அலேகு வசல்லம் அவர்களின் பலதரப்பட்ட சத்சங்க விளக்கங்களில் நிலைத்து நிற்பவர்கள் இறைவனை அல்லா என்றழைத்துக் கொள்வார்கள். அவரின் குணாதிசயங்களைக் குறிப்பிடுகையில் வார்த்தையை மையமாக வைத்து 'வகி' என்றிருக்கும் தேவ ஓதலை ஏற்று அதன்படி இறைவன் ஒரு பொதுவான சக்தி அதற்குத்தனிப்பட்ட உறவுகள் இல்லை என்றும் உள்ளது, எங்கும் உள்ளது என்பதை குர்ஆனில் இருந்து தெரிந்து கொண்டுள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவாலயம் (சர்ச்) : இங்கு விவிலியம் என்கிற நூல் இருக்கிறது. இதன் பொருளடக்கம் பல இறை அடியார்களின் தொகுப்பும் இறைதூதுவர் இயேசுவின் வழி நடத்தல் அடங்கிய சத்சங்கம் நிரம்பியதாகவும் இருக்கும். இங்கும் வழிபாட்டின் முறைகளிலே பண்டை முறையான அப்பம் (உடல்) திராட்சை ரசம் (இரத்தம்) என்கிற படி ஆத்ம ஞானம் பெற்றவர்களுக்கு இன்றுவரை கொடுப்பார்கள் இது அவர்களுக்கு ஒரு அடையாளமாக இருந்து வருவதும் இன்றுவரை அறிந்த விடையமாகவும் இருக்கிறது.

கோவில் : (ஆலயம்) இங்கு இந்துக்கள் செல்வார்கள் வேதம் என்பது முதல் நூல் இவர்களின் அடிப்படை இங்கு இருக்கும் மந்திரங்களும், பாடல்களும் அதேவேளையில் அடையாளமாக விபூதி, பொட்டு, தீர்த்தம், பிரசாதம் என்றும் இன்றுவரை கைக்கொள்ளப்படுகிறது.

இந்தப்பரந்த சாகர உலகில் பூமியும் ஒன்று இங்கு நடப்பவை எல்லாம் நமது மனதுக்கும், உடலுக்கும் எம்மால் பேசப்படும் (ஓதப்படும்) வார்த்தைகளுக்கும் கட்டுப்பாடான ஒரு கோட்பாட்டுக்குக் கொண்டு வருவதற்காக முயற்சி செய்து, பயிற்சி பண்ணப்பட்டு பல குருவானவர்களின் தோன்றல்களினால் வழி நடத்தப்பட்டு இன்றையக் காலகட்டத்தில் நாம் வாழ்கிறோம். பழையகாலமானாலும் சரி இன்றையக் காலமானாலும் சரி எப்படியும் வாழலாம். என்பர் சிலர். இப்படித்தான் வாழவேண்டும் என்பர் சிலர். எனினும் நமக்கு என்றோர் வாழ்க்கை இருக்கிறது. அதை வாழ்ந்துதான் தீரவேண்டும். இன்று நாம் பல ஜனங்களுக்கு மத்தியில் சுயமாக வாழ்ந்து கொண்டிருந்தாலும் நமக்குத் தெரிந்தவர்கள் இருக்கின்றார்கள். புதிதாக அறிமுகமானவர்கள் இன்று நமக்கு மிகவும் அண்மையில் இருப்பார்கள். நீண்டகாலம் சந்திக்காமல் இருந்தாலும் மனதை விட்டு அகலாதவர்கள் இருப்பார்கள். அவர்கள் நமது வாழ்க்கையில் திருப்பு முனைகளை ஏற்படுத்தி இருந்தால் நமக்கும் அவர்களுக்கும் உள்ள நெருக்கம் மனதை மிகவும் தொட்டதாக இருக்கும்.

இந்தியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட மகா ஆத்மா ஒருவர் பற்றிக் கூற விரும்புகிறேன். அவர் பலரது மனதையும் தொட்டவர். பாபு என்று பெயர் பெற்றவர் அவர்தான் காந்தி அவர் சிறந்த ஆத்ம சீலர்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர். இவர் நிறையச்சத்சங்கள் செய்திருக்கிறார் சட்டப்புத்தகங்கள் எழுதியிருக்கிறார். அதேவேளை அவர் ''சத்தியாக்கிரகம்'' என்கிற ஒரு கருமத்தைத் தனது வாழ்க்கையில் வெற்றிகரமாக முடித்தும் காட்டியவர். அவர் தனது ஆத்ம ஞானத்தைப் பெற்றிருந்தார். அதேபோல் ஆத்மீக விரதங்களையும் மேற்கொண்டவர்.

அவர் இறைவணக்கத்தின் போது, நமக்கும் பிறருக்கும் இறைவனுக்கும் உடல் ரீதியாக நாமங்கள் இருக்கலாம். ஆனால் ஆத்மாவிற்கு அதாவது இந்திரியங்களாகக் கூறப்படும். ஞான இந்திரியங்கள் கரும இந்திரியங்கள் மனம், புத்தி ஆகியவற்றைக் கடந்து நிற்கும் சக்திக்கு நாமபேதம் இல்லை என்பதை அவர் ஒரு பஜனைப் பாடல்வரிகளில் சத்சங்கமாகக் கொண்டிருந்தார். அதன் வடமொழி ஒலியையும் கருத்தையும் அப்படியே தமிழில் சொல்லிப்பார்ப்போம்.

''ரகுபதி ராகவ ராஜாராம், பதீத பாவனு சீதாராம், ஈஸ்வரு அல்லா தேரோ நாம் தபகோ சன்மதி தே பகவான் '' இந்த வரிகளில் வருவது எல்லாம், குரு அவதாரம் எடுத்த ராமபிரான் அவர்களைத் தனது இஸ்ட தெய்வமாகவும், குருவாகவும் கொண்டு (மானசீக) வழி நடந்த காந்தி அடிகளார் , ஈஸ்வரன் என்றாலும் ராமன் என்றாலும் அல்லா என்றாலும் சீதாராமன் என்றாலும் (தேரீரா நாம்) ஒரே நாமம் தான் என்று கூறுகிறார்.

இதற்காக நாம் கலங்கிக் கொள்ள வேண்டியதில்லை தொடர்ந்து செல்வோம். புத்தபிரான் இப்படிக் கூறுவார். ''தான் கூறுவதற்காகவும் மற்றவர்கள் கூறுகிறார்கள் என்பதற்காகவும் நீங்கள் எதையும் அப்படியே ஏற்றுக்கொண்டு விடாதீர்கள். உங்களுக்கு ஏற்றுக்கொள்ளும் உணர்வு ஏற்பட்டு, மனதார எதை ஏற்க முடிகிறதோ அதை ஏற்றுக் கொள்ளுங்கள் மேலே போவோம் !

*திருமூலநாயனார் கூறுகிறார் :-*

''நானென்றும் தானென்றும்
நாடினேன்! நாடலும்
நானென்று ! தானென்று
இரண்டில்லை என்று
நானென்ற ஞான
முதல்வனே நல்கினான்
நானென்று நானும்
நினைப்பொழிந்தேனே ''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இறைவனுடைய அனுக்கிரத்தை அனுபவிப்பதற்கு ஒரே வழி நான் என்றும் இறைவன் என்றும் தன்னந்தனியாக இரண்டு பொருள் இல்லை என்பதை உணர்ந்தேன் என்றும் நான், என்று என்னை தனியாகப்பிரித்துக் கொண்டு நினைக்கின்ற ஆணவ நினைப்பை விட்டொழித்து எல்லாம் அவனே என்பதை கோயில் வணக்கங்கள் எல்லாம் நமக்குள் இருக்கும் ஆத்மாவை விளக்குவதற்காகவும் அங்கு நடைபெறும். வழிபாட்டு முறைகள் எல்லாம் நமது உள்ளத்தைத் தாங்கும் இந்த உயிருள்ள உடல் வாழ்வதற்குத்தக்க பராமரிப்பு வேண்டும் என்பதை விளக்குவதற்காகவும் நடைபெறுகின்றன.

அங்கிருந்து நாம் இப்போது இங்கே வந்து சத்சங்கத்தின் மூலம் கோவில் வாசல்வரை வந்து நிற்கிறோம். இனி நாம் தெய்வ தரிசனம் பெறுவது என்பது உறுதி என்றுபடுகிறதா எனப்பார்க்கிறோம். மேற்கொண்டு இங்கு ஒரு சிறு கதையைக்கூறுவதற்கு முன் ஒரு முக்கியமான விடயத்தைக் கூறிவிட்டு மேல் செல்கிறேன்.!

ஒரு உணவை இரசித்துச் சுவைத்துப் புசிப்பது போல் இங்கு கூறப்படும் விடயங்கள் இருக்க வேண்டும் என விரும்புகிறேன். உணவு கசப்பாக இருந்தால் உண்ண முடியாது என்று தள்ளி வைப்பது எனக்கும் ஒரு பழக்கமாக இருந்திருக்கிறது. படிக்கும் விடயத்திற் கசப்பான செய்திகளைத் தந்து விடக்கூடாது என்பதற்காக ஒரு சின்ன இடைவெளியை ஏற்படுத்தினேன்.

நாம் இப்போது இருந்து கேட்கும் சத்சங்கத்தில் இந்த நிமிடமும் வழிபாட்டு இடங்களில் நம்மில் எவர் இருந்தாலும் அங்கு அந்த நிமிடத்திலும் இருக்க வேண்டும் எல்லாம் ஆத்ம மயம்.

ஒரு நாள் வழிபாட்டுத்தலத்திற்குச் செல்ல முடியாமல் போனால் எங்கே நாம் செல்வோம்? நமது மனதுக்குள் உள்ள ஆலயத்திற்குத்தானே! அதற்கும் பயிற்சி தேவைதானே! இப்படியும் அப்படியும் மனதை அசையவிடாமல் சிறிய கதையையும் படியுங்கள்.

பாண்டிய நாட்டில் வெள்ளம் வந்தது. மக்களுக்கு மன்னன் கட்டளையிடுகிறான் உடனே அணைகட்டி வெள்ளம் நாட்டுக்குள் வெகுவாகப் பரவுவதைத் தடைசெய்ய வேண்டும். வெள்ளப் பெருக்கு வருமுன் அவர் அவர் ஏற்றுக்கொண்ட பங்கு அணையைக்கட்டி முடிக்க வேண்டும் என்பதுதான் மக்களுக்கு அவன் இட்டகட்டளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டியன் ஒரு சிறந்த சிவபக்தன் அதேபோன்று அந்நாட்டில் செம்மனச்செல்வி என்ற வயதான பாட்டியும் சிவபக்தி கொண்டிருந்தாள் மன்னனோ செல்வந்தன் பாட்டியோ ஏழையாக இருந்தாள். பக்தி செய்து நாடுவது எவருக்கும் பொது என்பதை உணர்த்த இருவருக்குமே இறைவன் தரிசனம் கொடுக்க நினைத்தான். பல விடயங்களை நேரில் வராமலே எமக்காகச் செய்து தரும் இறைவனை எப்போது காண்பது என்ற ஏக்கம் அவர்களுக்கு இருந்தது.

மன்னன் அணைகட்ட ஆணையிட்டது முதல் வேலைகள் நடக்கின்றன. அவர் அவர் பங்கை எல்லோரும் மும்முரமாகக்கட்ட ஆரம்பித்து விட்டார்கள். ஆனால் செம்மனச்செல்விக்கு எவரும் உறவாக இல்லாததினால் அவரிடம் அனுதாபப்பட எவரும் இல்லாத பட்சத்தில் ஒருவர் உதவிசெய்ய முன்வந்தார். அவருக்குக் கூலி கொடுத்தால் வேலையைத் தொடங்கிவிடுவார். ஆனால் செம்மனச் செல்வியிடம் பணம் இல்லை அந்த வயதான பாட்டியோ உதவிக்காக வந்தவரிடம் அணைகட்டி முடியும்வரை அவருக்குப் பிட்டு அவித்து உணவு கொடுப்பதாக வேண்டிக்கொண்டாள். அவரும் ஒப்புக்கொண்டு வேலையைத் தொடங்குவதாகக் கூறினார்.

செம்மனச்செல்வியும் பிட்டை அவித்து அவித்து அவருக்குக் கொடுத்தாள். அவரும் அதை வாங்கி உண்டுவிட்டு இளைப்பாறுவதாகக் கூறித்தூங்கி எழுந்தார். அணை கட்டும் வேலையில் ஈடுபடவில்லை. வெள்ளத்தைத் தடை செய்யக்கட்டப்படும் அணை பங்கு பங்காகக் கட்டப்பட்டு முடியும் தறுவாயில் இருந்தது. அணையினைக்கட்டிக் கொண்டிருக்கும் மக்களை மன்னன் பார்க்க வருதாக அறிக்கை வந்தது. அனைவரும் மன்னனின் கட்டளையை மதித்து உரிய காலத்தில் அவர் அவர் பங்கு அணைக்கட்டைக் கட்டி முடித்திருந்தனர்.

ஆனால் செம்மனச்செல்வியின் பகுதி மாத்திரம் முடிவடைய வில்லை. மன்னனின் சேவகர்களுக்குச் செவிசாய்க்காமல் செம்மனச் செல்வியின் பங்கைக்கட்ட வந்த மனிதரும் உறங்கி விழிப்பதிலேயே இருந்தார். மன்னருக்குச் செய்தி எட்டி அவரை அழைத்து வரும்படி கூறினார். மன்னன் அழைப்பை அறியாத அவர் தூக்கத்தில் இருந்தார்; மன்னனும் வந்தார் ஆனால் அந்த மனிதர் நன்றாக உறங்கிக் கொண்டிருந்தார். மன்னன் முயற்சியும் அந்த மனிதரைத் தூக்கத்தில் இருந்து எழுப்பமுடியவில்லை. மன்னனுக்குக் கோபம் வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னன் பரிவட்டங்களுடன் வந்திருந்தாலும், அவனிடம் ஒரு பிரம்பும் இருந்தது. அதனை எடுத்தான். செம்மனச் செல்வியின் அணைப் பங்கைக்கட்டி முடித்துத் தருவதாக ஒப்புக் கொண்டு கூலியாகப் பிட்டு அவித்துத் தரும்படி கூறி அதையும் உண்டுவிட்டுக் களைப்புத்தீரத் தினமும் உறக்கத்தில் நேரத்தை விரயமாக்கிய மனிதரை அணைக்கட்டின் பூர்த்தி நிலையைப் பார்வையிட வந்த பாண்டிய மன்னன் கூலியாளைத் தூக்கத்தில் இருந்து எழுப்பும் முயற்சியிற் தோல்வி கண்ட மன்னன் தனது கையில் வாளை எடுக்காமல் பிரம்பை எடுத்தான் என்றால் அடுத்தபடியாக அந்த மனிதரின் முதுகில் ஒரு அடிபோட்டான். அடுத்த கணம் அனைத்து ஜீவராசிகளும் 'ஆ' வென்று அலறும் ஒலி கேட்டது. என்ன ஆச்சரியம் அந்த அடியின் வலியை மக்களும் மன்னனும் அனைவரும் உணர்ந்தனர்.

அடுத்த சில நிமிடங்களுக்குள் அணைக் கட்டும் பூர்த்தியானது அடி வாங்கிய அந்த மனிதனும் உடலோடு மறைந்து விட்டான். மன்னன் திகைத்தான். செம்மனச் செல்விக்குக் காட்சி கிடைத்தது. மன்னனுக்கும் காட்சி கிட்டியது. மன்னன் கையால் அடிவாங்கியதும் செம்மனச் செல்வியின் கையால் உணவு உண்டு தூக்கத்தில் நேரத்தை வீண் விரையம் செய்த மனிதன் வேறுயாருமில்லை. நேரடியாகத் தன்னைக் காணத்துடித்த அனைவருக்கும் காட்சி கொடுக்க நினைத்தான். இறைவன் சிவன்தான் அந்த மனிதன் சிவதரிசனம் பெற்ற செல்வம் நிறைந்த மன்னனும் சரி பரம ஏழை மூதாட்டி (பாட்டி) செம்மனச் செல்வியும் சரி இறைவனின் பார்வையில் சமம்.

அதுமட்டுமல்ல இறைவன் காட்சி கிட்டிய எல்லோருமே சமம். மேலும் ஒரு உண்மை இருக்கிறது. மன்னன் அடித்த அடி மன்னன் உட்பட அனைவரின் முதுகிலும் பட்டது. வலித்தது இது உணரப்பட்டது இங்கே நாம் தெளிவாகப்பரிசீலித்து நோக்கினால் சீவன் சிவன் என இரண்டு இல்லை. இறைவன் வேறு, நாம் வேறு இல்லை. இதனால்தான் நமக்கும் நம்மைச்சூழ இருக்கும் அனைத்துக்கும் பல நாமங்கள் பகுத்தறிவதற்காக இருந்தாலும் அந்தப்பேதம் ஒரு கானல் நீர் தான் என்றும், ஒரு தீப்பிளம்பில் தோன்றிய பொறிகள் என்ற முடிவை முன்வைக்கவே இந்தக்கதை கூறப்பட்டது.

நமக்குப் பல வடிவங்கள் இருக்கின்றன. நமக்குப் பல வணக்க முறைகள் இருக்கின்றன. நமக்குப் பல கோணங்களில் சிந்தனைகள் இருக்கின்றன இதனால் பல பாதைகள் உருவாகி இருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவை எவை எப்படி என்றாலும் இறுதியில் அவை எங்கு சென்று முடிகின்றன? இந்தப்பாதைகள் முதல் முறையாக எங்கே தொடங்கின என்பதையும், நாம் நமது இந்த இடைக்காலப்பகுதியிற்தான் பார்க்கிறோம். முதலும் முடிவும் தெரியவில்லை தேடியும் கிடைக்கவில்லை.

இதற்குப் பல விதங்களில் பல விளக்கங்கள் கொடுத்துக் கொண்டே வந்தவர்கள் எமது வழிகாட்டிகளான குரு அவதாரங்கள். குரு அவதாரங்கள் எல்லாம் காலத்துக்குக் காலம் ஒரு பாம்பு தனது உடலில் இருந்து பழைய தோலைக் கழற்றி விட்டுப் புது உடலோடு வருவதுபோல் நிகழும் ஒரு நிகழ்ச்சி இறைவனும் ஆத்மாவும் அனாதியாகவே கூடவே இருந்தும், உயிரானது இறைவனைக் காண முடியாமல் இருப்பதற்குக் காரணம் பாசம் என்கிற பந்தம்.

பதி, பசு, பாசம்

பிதா, சுதன், பரிசுத்த ஆவி

பரிசுத்த ஆவி என்பது தூய ஞானம் நிரம்பிய ஆத்மா

பாசம் என்பது - ஆணவம், கன்மம், மாயை என்கிற பிணைப்பு

பதி என்பதும் பிதா என்பதும் முழுமுதற் கடவுள்

பசு என்பதும் சுதன் என்பதும் ஆன்மா முழுமுதற் கடவுளின் பகுதி பாசம் என்கிற பிணைப்பினால் விடுதலை தேடும் எம்மைப் பிணைத்திருப்பது நான் என்கிற எண்ணம்.

பதியாகிய இறைவனைப் போலவே, இந்த உயிரும் அனாதியானது என்கிறது ஆகம சாஸ்திரம், பாசம் என்பது ஆணவம், கன்மம், மாயை என்ற மூவகை மலங்களைக் கொண்டது. இந்த மும்மலப் பாசத்திலே கட்டுண்டு நிற்கிறது உயிர்ப்பசு.

ஆணவம் என்பது 'நான்' என்கிற உணர்ச்சி. எல்லாம் ஒன்று என்ற உண்மையை உணரவிடாமல் தடுத்துத் தன்னைப் பிரித்து தான் வேறு என்று எண்ணும்படி செய்வது ஆன்மாவைப் பிடித்திருக்கும் ஆணவம் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்மம் என்பது நல்வினை தீவினை என்கிற வேறுபாட்டை உண்டாக்கி உயிரை ஆட்டுகிற தத்துவம்.

மாயை என்பது தோன்றி அழியும் பொருட்களில் மயங்கச்செய்து தெய்வ நாட்டத்தில் இணக்கம் காணமுடியாமற் செய்யும் தத்துவம்.

பாசம் என்பது இந்த மூவகை மலங்களே. நான் நிறையவே இந்தச்சத்பொருளைப் பற்றிக்கூறிவிட்டேன். இதன் சாரத்தைக் கூறிக்கொண்டு சத்சங்கத்தை முடித்துக் கொள்கிறேன்.

நமக்கும் பெயர்கள் இருக்கின்றன. தெய்வங்களுக்கும் பெயர்கள் இருக்கின்றன. குரு என்ற உன்னத சேவையைச் செய்தவர்களைத் தெய்வ வடிவில் கொண்ட காலகட்டங்களில் இன்றைய இந்துத் தெய்வங்களும் குரு அவதாரங்களே.

கிறித்துவ முறையில் குருவின் தனித்துவம் தெரிகிறது.

ஸ்லாம் முறையிலும், பௌத்த முறையிலும், வைஷ்ணவ முறையிலும் குருவின் பங்கு தனியாகத் தெரிகின்றன. இப்படிப் பல தரப்பட்ட ஆதாரங்களை இந்தக்காலகட்டத்தில் நாம் பார்க்கிறோம். இப்படிப் பார்க்கும் நமக்கு, எமது முதல் மூலம் இன்னது என்று புரியவைக்கப் பலவிதங்களிலும் முயலும் வேத, சாஸ்திர, மந்திர வழிமுறைகளில் ஒருதுளியையும் அவற்றைப்பயின்ற கோடிக்கணக்கான வர்களில் ஒரிருவரைப்பற்றியும் உருவகக் கதையாக அல்லது மன்னாதி மன்னர்களாக இருந்த பலரில் ஒருவர் காலத்து நிகழ்ச்சி ஒன்றையும் சிரமமான காரியமாக இருந்தாலும் குரு துணை செய்து கொண்டதினாலும் இங்கு பலருக்கு இந்தச் சிக்கல் நிரம்பிய கேள்விக்குப் பதில் தேவையாக இருந்ததினாலும் இச்சத்சங்க உரை இவ்வாறு உருப்பெற்று இருக்கிறது எனக்கூறி முடித்துக்கொள்கிறேன்.

## 08) நமக்குள் நாம் ஒளிந்திருக்கின்றோம்

நாம் சத்சங்கம் கேட்பதற்கு ஆவலாய் இருக்கிறோம் நமது உள்ளம் வெண்மையானது என்று கூறுவார்கள். நாம் பல வித்தைகள் தெரிந்து வைத்திருந்தாலும் நமக்கு நமது உள்ளத்துக்குள் நாம் ஒளிந்திருக்கிறோம். என்று கூறினால் ஒரு பெரும் பழத்தை முழுதாகவே உண்ணுங்கள் என்று கூறுவதைப்போல் ஆகிவிடும். நமக்குள் நாம் ஒளிந்திருப்பதை அறியும் வித்தையைக் குருநாதர்கள் ஞானவித்தை என்று கூறுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழே ஒரு கதை கூறுகிறேன் படியுங்கள்.

ஒரு துறவி ஒரு மடத்தில் தங்கியிருந்தார். அவர் தங்கியிருந்த மடத்தை ஒரு திருடன் தனது மறைவிடமாகப் பல நாட்களாகப் பாவித்து வருகிறான். துறவியும் மடத்தில் இருக்கிறார். திருடனும் சிலநாட்களாக அவரைக் கவனித்து வருகிறான் துறவியும் இடத்துக்கிடம் செல்பவர் திருடனும் அப்படித்தான் தனது சூழ்நிலைக்கேற்ப இம்மடத்தைப் பாவித்து வந்தான்.

துறவி தினமும் காலையில் நீராடுவதற்காகவும், அதன்பின் தியானம் பண்ணுவதற்காகவும் மடத்திற்கு அண்மையில் உள்ள நீரோடைக்குச் செல்வது வழக்கம். துறவியிடம் ஒரு பை (மூட்டை) இருந்தது அதில் அவர் செலவுக்கான பணத்தையும் சில காவித் துணிகளையும் வைத்திருந்தார். துறவியின் நடவடிக்கைகளை அவதானித்து வந்த அந்தத் திருடன் தான் ஒரு வழிப்போக்கன் என்று கூறித்தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு அவன் அவருடன் மடத்தில் தங்கியிருந்தான். துறவியும் ஜாக்கிரதையுடன் திருடனுடன் பழகிக்கொண்டிருந்தார்.

அன்று ஒரு நாள் துறவி நீராடப் போகத் தயாராகினார் வழமைபோல் தனது பையையும் கையுடன் எடுத்துக் கொண்டார். துறவியின் பையிலே கவனம் வைத்திருந்த திருடன், அதை அவர் நீராடியபின் தியானம் பண்ணும் போது திருடிவிடத்திட்டம் போட்டுச் சமயம் வரும்வரை காத்திருந்தான். இப்படித் தந்திரம் கொண்டிருந்த திருடன், அன்று துறவியுடன் தானும் வருவதாகக் கூறிப் புறப்பட்டான். துறவியும் அவனைச் சற்று முன்னே செல்லு இதோ வருகிறேன் ' என்று கூறித் தனது பையிலே உள்ள பணத்தைத் திருடன் மடத்தில் வைத்திருந்த படுக்கையின் கீழ் வைத்துவிட்டுக் காவித்துணிகளை மாத்திரம் எடுத்துக் கொண்டு திருடனைத் தொடர்ந்து நீரோடையை அடைந்தார்.

இருவரும் சேர்ந்து நீராடிக் கொண்டிருக்கையில் திருடன் தனது நீராட்டத்தைச் சீக்கிரம் முடித்துத் தரைக்கு வந்து துறவியின் பையைப் பார்த்தான். அதில் அவன் தேடிய பணம் இருக்கவில்லை. துறவி தரைக்கு வந்து தியானம் பண்ணும் முன் திருடன் அவரிடம் விடைபெற்று மடத்தை வந்தடைந்தான்.

திருடன் அவசர அவசரமாகத் துறவியின் படுக்கையைத் தேடினான் அங்கிருந்த மூலை முடுக்கு எல்லாம் தேடினான். அவன் தேடிய துறவியின் பணம் கிடைக்கவில்லை. அலுப்படைந்தவனாய் மடத்தின் திண்ணையில் நல்ல பிள்ளையைப் போல் உட்கார்ந்திருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறவியும் தியானத்தை முடித்து மடத்திற்கு வந்தார். திருடனின் முகத்தைக் கவனித்தார். திருடனிடம் மாற்றம் தெரிந்தது. அவர் அங்கு நடந்திருக்கக் கூடிய காரியத்தை ஊகித்தவராய் மடத்துக்குள் சென்றபோது அங்கு அவர் படுக்கை கலைக்கப்பட்டிருப்பதைக் கண்டார். தான் மறைத்து வைத்திருந்த பணத்தைத் திருடனின் படுக்கைக்குக் கீழ் பார்த்தார். அங்கே அது இருந்தது அதைத் திருடன் கண்டு கொள்ளவில்லை.

தனது பொருட்களைப் பொதி செய்து கொண்டு, பணத்தையும் எடுத்துக் கொண்டு திண்ணையில் இருந்த திருடனிடம் ''அப்பா ! இருக்கும் இடத்தை விட்டுவிட்டு இல்லாத இடங்களைத்தேடுகிறாய்'' என்று கூறிவிட்டுத் தனது பயணத்தைத் தொடர்ந்தார்.

இக்கதையின் சாரத்தை ஆராய்ந்து பார்த்தோமானால் நமக்குப் புலனாகும் விடயம் ''நம்மை நாம் தேடினால் நமக்குள் இருக்கும் இறைவன் தென்படுவான்'' என்பதுதான்.

திருடன் நினைத்துப் பார்க்கவில்லை துறவியின் பணம் தனது படுக்கைக்கு கீழ் இருக்கும் என்று அதனால் அவன் அங்கு தேடவில்லை. துறவியின் சிந்தனைக்கு எட்டியது திருடனின் தந்திரம். அதனால் அவர் தனது புத்தியைக் கொண்டு தன் பணத்தைப் பாதுகாத்துக் கொண்டார். நாம் நமது வாழ்க்கையின் முழுக்காலமும் வீண் தேடுதல்களில் விரையம் செய்யக்கூடாது.

நமக்கு இந்த வாழ்க்கைக் காலத்திலேயே இறைவனைத் தேடவேண்டிய இடம் நமக்குள்ளே இருக்கிறது. அதன் அந்தமாதி வடிவம் என்னவோ அது நமக்கு உள்ளும், புறமும் இந்த அண்ட சராசரங்களைத் தனக்குள் அடக்கிக் கொண்டும் இருக்கிறது.

இப்படியாகப்பட்ட இந்த மகா சக்தியான ஆத்மா நமக்குள்ளேயே ஒளிந்திருக்கிறது. அது வடிவத்தில் ஜோதி என்றாலும் அது அனுபவிக்கும் போது நிர்குண பிரம்மம் எனப்படும் உணர்வாக இருக்கிறது.

இதனை நாம் சத்சங்கத்தின் மூலமாக அறியப் பெற்றுக்கொண்டு வருகிறோம். இதன் பயனாக நாமும் அந்த ஆதிமூலத்தைத் தரிசித்தும் அனுபவித்தும் முக்தியை நாடக்குருவினிடம் நம்பிக்கையை வைப்போம். அவரின் கிருபையினால் தேடவேண்டிய இடத்தை ஞான உபதேசத்தின மூலம் சீக்கிரமே அடைந்துவிடலாம். இந்த ஞான வித்தையினால் நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தி பெற்றால் பெரிதாக இருக்கும் ஒரு முழுக்கனியைச் சிறுசிறு துண்டுகளாகக் கூறுபோட்டு இரசித்து உண்பதைப்போல் சுவைக்கும் அனுபவங்களைப் பெறலாம். எனக்கூறிக் கொண்டு எனது இந்தச் சத்சங்கத்தை முடித்துக்கொள்கிறேன்.

**09) பொறுமையாக இருக்க ஒரு பாடம்.**

நாம் இன்னுமோர் சத்சங்கத்தில் இணைந்து கொண்டுள்ளோம் நமது சத்சங்க அனுபவங்கள் நம்மைப் பலவிடயங்களையிட்டு விளக்கம் தருவதாக அமைத்துக் கொண்டிருக்கிறது.

நமக்கு வெளியுலகம் ஒரு அனுபவசாலை அது பெரிதாக இருக்கிறது என்றாலும் இன்று நாம் அதைச் சிறிதாக மாற்றிக் கொண்டு நமது மனதுக்குள் அடக்கிவிட்டதுபோல் ஒரு உணர்வும் இருக்கிறது.

பல விடயங்களை நாம் இருந்த இடத்தில் இருந்து கொண்டே பார்த்தும், கேட்டும் நமது உணர்வுகளையும், கருத்துக்களையும் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

நமக்கு உணர்வுகள் மேலோங்கித் தோன்றும்போது, நமது கட்டுப்பாட்டுக்கும் மீறி இயங்கி ஒரு சில கசப்பான விளைவுகளையும் ஏற்படுத்தி விடுகின்றன. அதற்காக நாம் வருந்துவதும் உண்டு அதற்காக நாம் பலமுயற்சிகள் செய்து வழமைபோல் சகஜமாக வாழவேண்டிய நிலையிற் கூட இருக்கிறோம்.

இப்படித்தான் ஒரு நாள் ஒரு துறவி ஒரு ஆற்றங்கரையிலே ஒரு அகன்று வளர்ந்த நிழல் தரும் மரத்தின் கீழ் உட்கார்ந்திருந்தார். அவர் சுகமான காற்றையும் அனுபவித்துக் கொண்டும், வெப்பத்தை தாங்கும் அம்மரத்தின் நிழலையும் பெற்றுக்கொண்டு ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார்.

அந்த மரம் குளிர்மை நிறைந்து இருந்ததால் அதில் கட்டெறும்புகளும் கூட்டமாக வாழ்ந்தன. அந்த எறும்புக் கூட்டத்தில் இருந்து ஒரு எறும்பு நீண்டு ஆற்றின் மேலாக வளர்ந்திருந்த மரக்கிளையில் ஓடிக்கொண்டிருக்கையில் தவறி ஆற்றில் விழுந்து விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த எறும்பு ஆற்று நீரிலே தத்தளிப்பதை மரத்தின் கீழ் இருந்த துறவி கண்டுவிட்டார். அதன் சிறுகால்கள் படபடவென்று ஆற்றிலே மனிதர்கள் நீந்துவது போல் அடித்துக் கொண்டிருப்பதையும் மன உருக்கத்துடன் அவதானித்தார் துறவி.

அந்தத் தத்தளிக்கும் எறும்பைத் துரிதமாகக் கரையேற்றி மரத்தில் மீண்டும் விட்டுவிட எண்ணித் தனது கையைக் கொடுத்து எறும்பை ஆற்று நீரைவிட்டு வெளியேற்றினார்.

அந்த எறும்பும் துறவியின் கை விரலைப்பற்றி அவர்மேல் வேகமாக ஏறி அவர் கையைக் கடித்து விட்டது துறவிக்கு வலித்தது. அதை அப்படியே மரத்தைப்பற்றி ஏற விட்டுவிட்டார். சற்று நேரத்தில் அந்த எறும்பு மீண்டும் ஆற்றில் விழுந்தது. துறவி அதை மீண்டும் கரையேற்றி மரத்தில் விட்டார். ஆனால் அந்த எறும்பு அவரை அந்தத் தருணமும் கடித்தது.

எறும்பின் குணம் கடிப்பது என்பதைத்துறவி தெரிந்திருந்தார். அது மிகவும் சிறியதாக இருந்தாலும் அதன் விஷம் அவரின் உடம்பில் சுர் என்று சின்னஞ்சிறு எறும்பின் ஊசிபோன்ற கொடுக்கில் இருந்து பாய்ந்து வலியையும் ஏற்படுத்தி அவரின் கையில் ஆங்காங்கே தடித்தும் விட்டிருந்துது.

துறவி அதற்காக எறும்பைக் கொல்லவில்லை. அந்த எறும்பைத் தன்மையுடன் மரத்தில் ஓடவிட்டார். இதிலிருந்து நமக்குத் தெரிவது என்னவென்றால் துறவியின் குணத்தில் தயவும், பரிவும் சகல ஜீவன்களையும் நேசிக்கும் தன்மையும் அதைவிட முக்கியமாக எறும்பின் குணத்தைச் சகித்துப் பொறுத்துக் கொண்டார் என்பதுமாகும்.

நம்மை அறியாமல் நம்மை மீறி ஏற்படும் கசப்பான உணர்வுகளையும் அவதானித்து நாம் பொறுமையுடன் நடந்து கொண்டால் நமது மனமும் பாரம் குறைந்ததாக மாறிவிடும். இப்படி நாம் மாறிவிட்டால் நமக்கு ஒரு கட்டுப்பாடு கொண்ட மனதில் கசப்பு இருக்காது. நமது மனம் துயரத்தின் போதும் இன்பத்தை அனுபவிக்கப்பழகிவிடும்.

நமது சகஜமான நிலையில் அன்பிருக்கும் பொறுமையும் இருக்கும் தன்மையான மனப்பாங்கும் இருக்கும் ''பொறுத்தார் பூமி ஆழ்வார் '' என்ற பதத்தின் பொருளும் இதுவே எனக் கூறிக்கொண்டு இந்த சத்சங்கத்தை வணக்கத்துடன் முடித்துக் கொள்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10) ஆசைகளிலும் தேவைகளிலும் சுயநலம் வேண்டாம்

நாம் இன்னுமோர் சத்சங்கத்தில் ஒன்றி இருக்கின்றோம் நமக்குப் பலதரப்பட்ட குணாதிசயங்கள் இருப்பது இயற்கை அவற்றை நாம் கொண்டிருக்கிறோம் என்று எமக்குப் பல சந்தர்ப்பங்களிற் பலர் கூறி மெச்சியிருப்பார்கள். அவை அடுத்தவர்ளோடு நாம் உறவாடும் முறைகளை ஒட்டி இருந்திருக்கும்.

நமக்கு வேண்டிய குணம் வேண்டாத குணம் என்று, நமது உள்ளத்தில் தென்படும் குணங்களைச் சரி செய்து கொள்வதற்குச் சத்சங்களில் நிறைய உதவி கிடைத்திருக்கும், கிடைத்துக் கொண்டே இருக்கும். நம்மை நாமே சரிபார்ப்பதற்கு நமக்குக்கிடைத்த சந்தர்ப்பங்களே இந்தச் சத்சங்களாக அமைந்துள்ளன.

ஒருநாள் பொழுது விடிந்தது. அதிகாலையில் மெல்லியதாகத் தென்றல் வீசிக் கொண்டிருந்தது. அன்று சனிக்கிழமை வழமைபோல் சத்சங்கம் கேட்கச் செல்லும் நாள் மாலை 5.30 மணிக்குச் சத்சங்கத்தில் இருந்து கேட்டுக்கொண்டிருக்கிறேன். ஒரு சத்சங்க உரை நிகழ்கிறது. அதில் இருந்து ஒரு கதை சொல்லக் கேட்டேன்.

வயதான பெண்மணி ஒருவர் இறந்துவிட்டாராம். அவர் உயிரை எம் தர்மராஜனின் தூதுவன் கொண்டு செல்கையில் அப்பெண்மணி கேட்டாராம் ''எங்கேயப்பா என்னைக் கொண்டு செல்கிறாய்'' என்று அதற்குத் தூதுவன் சொன்னாராம் ''நீர் செய்த பாவங்கள் காரணமாக உம்மை நரகலோகம் கொண்டு செல்கிறேன்'' என்று. அதற்கு அந்தப் பெண்மணி ''எனக்குச் சொர்க்கலோகம் பார்க்க ஆசையாக இருக்கிறது ஒரு தரம் அதைக் கொண்டு காட்ட முடியுமா '' என்று இந்தச் சம்பாஷனை நேரத்துக்குள் வயதான பெண்மணியை நரகலோகத்தின் எல்லைக்குள் தூதுவன் கொண்டு வந்து விட்டார்.

அப்போது தூதுவன் ''அப்படி உமக்குச் சொர்க்கலோகம் சென்று பார்க்க வேண்டிய ஆசையிருந்தால் எனக்கு நல்ல காரணம் காட்ட வேண்டும்''' என்று கூறி ''பெண்ணே உனது வாழ்க்கைக்காலத்தில் நீர் செய்த புண்ணிய காரியங்களைக் கால தாமதமின்றிக் கூறவேண்டும்'' என்றார். இதைக்கேட்ட பெண்மணி தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருந்தாள். இதை அந்த நரகலோகத்தில் இருந்த மற்றச் சீவன்களும் கேட்டுக் கொண்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூதுவனும் காலதாமதம் ஆகுவதாக அந்த வயதான பெண்மணியை எச்சரித்தார். ''ஆ எனக்கு ஞாபகம் வந்துவிட்டது. நான் செய்த ஒரு புண்ணிய காரியம் இருக்கிறது'' என்று கூறினார். அந்த வயதான பெண்மணி. எமலோகத்துத் தூதுவனும் ''சீக்கிரம் , சீக்கிரம் சொல்லிவிடு'' என்றார்.

அதற்கு அந்தப் பெண்மணி 'ஒரு நாள் பகல்வேளை ஒரு வறியவன் எனது வீட்டிற்கு வந்தான். அவன் பசியினால் வாடியிருந்தான். தனக்குப் பசியாற உணவு வேண்டினான். நான் அவனுக்கு ஏதும் இல்லை போ... என்றேன் அவன் போகவில்லை. அதனால் எனது வியாபாரத்திற்காகத் தோட்டத்தில் இருந்து அறுவடை செய்திருந்த வாழைக் குலைகளுக் கிடையே தென்பட்ட ஒரு ''**அழுகிய வாழைப்பழம்**' இருந்தது அதை அவனுக்கு கொடுத்தேன்' என்றார்.

''அப்பாடா'' என்று பெருமூச்சு விட்ட எமதர்மராஜனின் தூதுவர் ''சரி, நீர் செய்திருக்கும் இந்தப் புண்ணியத்தின் அளவுபோதும் சொர்க்கத்தை அனுபவிக்கச் செல்வோம்' என்று கூறி நரகலோக எல்லையைக் கடந்து சிறிது சொர்க்கலோக எல்லைக்குள் பயணித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது அந்த பெண்மணி தனது கால்களில் ஏதோ பாரம் கனப்பதை உணர்ந்து, கீழே குனிந்து பார்த்தாள். என்ன ஆச்சரியம் அவரின் கால்களிற் பலர் நரகலோகத்தில் இருந்து தொங்கிக் கொண்டு சொர்க்கலோகம் வந்து கொண்டிருந்தனர்.

இவர்களின் சம்பாஷனையைக் கேட்டிருந்த அவர்களும் தமக்கும் சொர்க்கம் காணச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொண்டனர். இச்செயலைப் பொறுத்துக்கொள்ள முடியாத அந்த வயதான பெண்மணி ''நமது வாழைப்பழத்தில் இத்தனைபேர் அனுபவிப்பதா?'' என நினைத்தார்.

அதேகணம் அந்தப் பெண்மணியுடன் சேர்ந்து மற்றவர்களும் மீண்டும் நரகலோக எல்லைக்குள் வந்து விட்டனராம் இது தான் சொல்லக் கேட்ட கதை.

இந்தப் பெண்மணியின் மோட்சப்பயணம் எப்படி இருந்ததோ, அப்படித்தான் நாமும் எமது சிந்தனைகளையும் தேவைகளையும் சுயநலமாகப் பிரயோகிக்கின்ற போது அதில் இருந்து கிடைக்கும் அனுபவமும் நிர்ணயிக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது குணம், வேண்டப்படாது எது என எமது மனம் கூறிவிட்டால் அதில் நிச்சயம் மாற்றம் ஏற்படும், தேவை என்று கூறிவிட்டால் கிட்டிவிடும். இதனால் தான் ''எண்ணமே வாழ்வு'' என்று கூறியிருக்கிறார்கள். எண்ணத்தில் இருந்துதான் மற்றக்கரும காரியங்கள் தோன்றுகின்றன. இதையும் நாம் மனதில் நிலை நிறுத்திக் காரியங்களிற் சித்தி பெறுவோம் எனக் கூறி எனது சத்சங்கத்தை முடித்துக்கொள்கிறேன்.

## 11) குற்றங்களைச் சுமப்பது குற்றம்

நாம் இனிதான இந்த வேளையில் மீண்டுமோர் சத்சங்கத்தைக் கேட்கும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம். நமது வாழ்க்கை இன்பமான தாகவும், சச்சரவு இல்லாததாகவும் இருக்கவேண்டும் என்பது எமது இறைவணக்கங்களில் ஒன்று.

நாம் இறைவனிடம் நமது தேவைகளை வேண்டுவதும் பின் அவ்விடத்திலேயே அதை மறந்துவிடுவதும் சில வேளைகளில் நடந்துவிடுவதால் நமக்கு இறைவனால் பூர்த்தி செய்துதரப்பட்ட வேண்டுதல்களை அனுபவிக்கத் தெரியாமல் போய்விடுகிறது. இதனால் நமது மனம் திசைமாறிச் சென்று கொண்டிருக்கும் அப்படி ஒரு சந்தர்ப்பத்தை ஒரு துறவி சந்திக்க நேர்ந்தது.

ஒரு ஊரின் நடுவே ஒரு வாவி ஓடிக்கொண்டிருந்தது அதன் இரு மருங்கிலும் மக்கள் வசித்தனர். வியாபாரிகளும் மக்களும் வாவியை ஒரு படகின் உதவியால் கடந்து தமது தேவைகளுக்காகப் பிரயாணங்களை மேற்கொண்டுவந்தனர்.

படகிற்குப் பணம் கொடுக்கத் தயங்கியவர்கள் வாவியின் நீர்மட்டம் குறையும் போது நீரில் நடந்து அதைக் கடந்து செல்வதும் வழக்கம். அந்த ஊரின் ஒரு மருங்கிலே பௌத்த பிக்குகளான சாதுக்களின் குருகுலம் ஒன்று இருந்தது. அங்கு ஒரு தலைமைக்குருவும் மூத்த சீடர்களும் இளையசீடர்களுமாகப் பல சீடர்கள் மதநெறிகளைக் கடைப்பிடித்து வந்தனர்.

ஒரு நாள் ஒரு மூத்தசீடரும் ஒரு இளையசீடரும் வாவியைக்கடந்து மறுபக்கம் தானம் பெறுவதற்காகச் சென்றனர். அவர்கள் தானம் பெற்று ஆச்சிரமத்தை நோக்கி வரும் வழியில் அந்த வாவியின் அருகிலே ஒரு பெண்மணியை கண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பெண்மணி வியாபாரம் (சில்லறை) செய்ய இக்கரைக்கு வந்தவர். படகு சேவை செய்யும் நேரம் தாண்டிவிட்டது. அவர் வாவியில் இறங்கிக் கடக்க முடியவில்லை. ஓட்ட நீர் அதிகமாக இருந்தது. இப்போது மாலையாகி இருட்டியும் இருந்தது.

சாதுக்களில் மூத்தவர் பெண்மணியின் நிலைமையை விசாரித்து அறிந்து, இளைய சாதுவிடம் தான் இந்தப் பெண்மணிக்கு உதவ விரும்புவதாக கூறினார்.

இளைய சாதுவும் மூத்தசாதும் பெண்ணை அக்கரைக்குக் கொண்டு செல்ல அவரை அவர் வைத்திருந்த பெரிய கூடையில் இருத்தித் தூக்கிச் செல்ல முடியும் என்று தீர்மானம் எடுத்தார் மூத்தசாது.

இளையசாது அந்தத் தீர்மானத்தை மறுத்துப் பேசினார். தனது தூய்மைக்குப் பங்கம் வரும் செயலை மூத்தசாது உருவாக்குவதாகக் கூறிக்குற்றம் சுமத்தினார். தனக்கு இந்த விடயத்தில் இணக்கம் இல்லை எனவும் பௌத்த கோட்பாட்டிற் பெண்களை ஒரு துறவி தொடுவது குற்றம் எனக் கூறி வாவியில் இறங்கி அக்கரை நோக்கிச் சென்று கொண்டிருந்தார். பெண்ணின் நிலைமையைத் தர்மத்தின் கண்ணோட்டத்தில் சிந்தித்த மூத்தசாது அவரைக் கூடையுடன் தூக்கித் தனது தலையில் வைத்து வாவியைக் கடந்து அக்கரையிற் கொண்டு சேர்த்தார்.

இந்த நிகழ்ச்சியைத் தனது கண்களால் பார்த்த இளையசாது மூத்தசாதுவின் செயலைத் தூற்றி, அவரை மரியாதை ஈனமாக அன்றுமுதல் நடத்தி வந்தார். ஒருநாள் தலைமைப் பீடத்தில் இருந்த குரு நோய்வாய்ப்பட்டார். மூத்த சீடர்களிற் சிறந்தவர்களில் ஒருவருக்குக் ''குரு பீடம்'' வழங்க வேண்டும் பெண்மணியைச் சுமந்த சீடர் ''குரு பீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டு நோயினால் பீடிக்கப்பட்டிருக்கும் குருவின் மூலம் அனைத்துச் சீடர்களின் முன்னிலையில் பதவி ஏற்கும் நாள் வந்தது.

ஓய்வுபெற்ற குரு புதுக்குரு மூத்தசீடர்கள் இளைய சீடர்கள் என எல்லோரும் சபை கூடிப்பிரமாணம் செய்யும் தருணத்தைக் காத்திருந்தனர். அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி குறித்த அந்த இளையசீடர் எழுந்து ''குருப்பதவி'' பெறும் தகுதி இந்த மூத்த சீடருக்கு இல்லை எனக்கூறினார்.

''இவர் ஒரு பெண்ணைத் தொட்டுச் சுமந்த குற்றத்தைச் செய்திருக்கிறார். இவர் புத்ததர்ம நீதிகளை மீறியவர். இவர் எப்படி எங்களை வழிநடத்த முடியும்? எனப்பல குற்றங்களை அடுக்கிச் சபை முன் வைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு பீடத்தில் இருந்து ஓய்வுபெறும் குருவுக்கு இறுதி நேரத்திலும் ஒரு வழக்கு விடயங்களை விபரமாக ஆராய்ந்த குரு நீதிமொழி கூறிய போது இளையகுருவிடம் சொன்னதாவது :

''சீடரே! நீர் பெரிய சீடர் சுமந்த பெண்ணை அவர் அன்று சுமந்த நேரம் முதல் இந்த நேரம் வரைச் சுமந்து கொண்டிருக்கிறீரே இது குற்றமா? அல்லது பெரிய சீடர் அந்தப் பெண்ணை அவர் தனிமையில் இரவில் மிருகங்களுக்கு இரையாகி விடக்கூடும் என்று சொல்லுதலுக்கு உடந்தையாக இருக்க விரும்பாது தனது தலையிலே வைத்து அக்கரையில் இருந்து இக்கரை வரை கடக்க என்ன நேரம் எடுத்ததோ அந்தக் குறுகிய நேரம் வரை மட்டும் சுமந்தது குற்றமா?

சபையில் இருந்த சீடர்களுக்கு இந்த விடயம் அன்றுதான் தெரிந்திருந்தாலும் குரு பீடத்திற்குத் தகுதி பெற்ற மூத்த சீடரை ஆத்ம சீலராக ஏற்றுக்கொண்டதுடன் தனது அனுபவத்திற் தேர்ச்சி பெறாத இளைய சீடரையும் மன்னித்துக் கொண்டனர்.

நம் மனம் எங்கு சென்று கொண்டிருக்கிறதோ அங்கேயே நாமும் சென்று விடுவோம். குற்றங்களை நாம் மன்னித்து விட்டால் அது சுமையாக எம்மைப் பாதிக்காது. பிறரானாலும் சரி நாமானாலும் சரி குற்றங்களை மறப்பது குணங்களின் உயர்வான குணம் எனக்கூறி எனது சத்சங்கத்தை முடித்துக் கொள்கிறேன்.

## 12) மனோலயம் என்பது ஆலயம் ஆகும்.

நாம் மற்றுமோர் சத்சங்கத்தைக் கேட்பதற்காக அமைதியாக அமர்ந்திருக்கின்றோம். நமது குருவிடம் நம்பிக்கையும் அவரவர் இஷ்ட தெய்வங்களிடத்திற் பக்தியும் கொண்டிருக்கும் பலர் இந்தச் சத்சங்கத்தில் இருக்கிறோம்.

நமது மனம் எங்கோ இருக்க நாம் மட்டும் இங்கே இருந்து சத்சங்கத்தைக் கேட்போமானால் நமது மனம் எங்கே இருக்கிறதோ அங்கே தான் நாமும் இருக்கிறோம் என்று பல குருநாதர்கள் கூறியிருக்கிறார்கள்.

இந்த மனத்திற்கு லயப்படும் சக்தி இருக்கிறது. இது எதிலும் லயித்துவிடும் தன்மையுடையது ஆத்மா லயம் அடைவதற்குத் திறவுகோல் ''மனோலயம்'' ஆகத்தான் இருக்கிறது ஆத்ம லயத்தைத்தான் சுருக்கி ''ஆலயம்' என்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயம் என்பதை மனோலயம் என்று கூறினால் பொருந்தும் இப்படியான இந்த ''லயம்' எமது வாழ்க்கைப் பாடத்தில் நாம் பல விதமான சூழல்களைச் சந்தித்தாலும் ஆத்மாவினிடத்தில் உள்ளது என்பதை நாம் உணர்தல் வேண்டும்.

ஒரு குருவும், சீடர்களும் ஒரு பாதையில் சென்று கொண்டிருந்தனர். அவர்கள் சென்று கொண்டிருக்கும் திசையில் இருந்து ஏதோ ஒரு துர்நாற்றம் வீசியது. அவர்கள. மேற்கொண்டு செல்லச் செல்ல நாற்றமும் அதிகரித்தது.

இத்துர்நாற்றத்தைத் தாங்காத சீடர்கள், குருவை விட்டுவிட்டு வேகமாகச் சென்று கொண்டிருந்தனர். அப்போது அவர்கள் ஒரு இறந்த பூனையைக் கண்டனர். அந்தப்பூனையின் பழுதுபட்ட உடலிலிருந்து வீசிய துர்நாற்றத்தாற் பாதிக்கப்பட்ட சீடர்கள் வெகுவேகமாகவே நடந்து சென்றதில் குருவை மறந்துவிட்டனர்.

மிகவும் தொலைவிற்குச் சென்று விட்ட சீடர்களுக்குக் குருவின் ஞாபகம் வந்ததால், குருவைக் காணவில்லை என்று திரும்பிப் பார்த்தனர். குருவோ ஏதோ ஒன்றை நிலத்தில் குனிந்து உற்றுநோக்கிக் கொண்டிருப்பதைக் கண்டனர். சீடர்கள் குருவை நோக்கி ஒரு துணியை மூக்கில் வைத்துக்கொண்டு மீண்டும் அதே நாற்றத்துக்குள் வந்து சேர்ந்தனர்.

அவர்கள் மூக்கிலேவைத்த துணியை எடுக்காமலே குருவிடம் ''இங்கு எங்களால் நிற்கமுடியவில்லையே, நீங்கள் இந்த இறந்த பூனையில் எதை இரசித்து நோக்கிக் கொண்டிருக்கிறீர்கள்'' என்று கேட்டனர்.

அதற்குக்குரு இங்கே கவனியுங்கள் இந்தப் பூனைக்குச் சின்னஞ்சிறிய பற்கள் இருக்கின்றன, அவை வெள்ளை வெளேரென்று இருக்கின்றன, அவைகள் அழகாக இருக்கின்றன, மிகவும் கூர்மையாகக் கூட இருக்கின்றன பார்த்தீர்களா'' என்றார்.

அத்தனை சீடர்களும் தம்மை மறந்து தமது கைகளை மூக்கில் மேல் இருந்து எடுத்துவிட்டுக் குனிந்து மிகவும் உன்னிப்பாகக் குரு இரசித்த படி அதே துர்நாற்றம் வீசிய இறந்து கிடக்கும் பூனையின் சிறிய முகத்தை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தனர்.

சில நிமிடங்கள் சென்றன. குருவும் அவர்களின் கவனத்தைக் கலைத்தார். அவர்களுக்கு ஒரு உண்மையை விளக்கினார் ''எந்த ஒரு சகிக்க முடியாத இடத்தில் கூட ஏதோ ஒன்று நம்மைக் கவர்ந்ததாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும். அதில் மனதை நிறுத்தி இரசித்துக் கொண்டிருந்தால் நமது மனம் இந்த உலகில் எந்தக் காரியத்தில் ஈடுபட்டாலும் முழு மனத்துடன் ஈடுபடும் அளவிற்குப் பழகிவிடும்' என்பது தான் அந்த உண்மையாகும்.

''பார்த்தீர்களா ! நாம் மனோலயம் என்றும் ஆத்மலயம் என்றும் சொல்லிக் கொண்டு பேச்சளவில் மாத்திரம் மேலோட்டமாகக் கவனிக்கின்றோம். உண்மையில் அந்த லயமாகும். நிகழ்ச்சியில் நாம் இருந்து பார்த்தால் இறையனுபவம் இன்னதுதான் என்று நமக்குப் புரிந்துவிடும். ஆத்ம தரிசனம் கிட்டுவதற்குச் சத்சங்களில் மனோலயம் வேண்டும். அப்படி லயமான மனங்களுக்குக் குருவின் மூலம் ஆத்ம ஞானம் கிட்டும் அப்படிக்கிட்டிய ஞானத்தில் லயமாகும். ஆத்மாக்களுக்கு ஆத்மதரிசனமும், பரமானந்தமும் கிட்டிவிடும்'' எனக்கூறி எனது இச்சத்சங்கத்தை முடித்துக்கொள்கிறேன்.

## பகுதி - iv

### ஞானிகள் வார்த்தைகளில் உள்ள உண்மைகள்.



### 01) ஸ்ரீ இராமகிருஷ்ணபரமஹம்சர்

(ஒரு குருவாக, பக்தனாக, ஞானியாக வாழ்ந்து யோக சமாதியானவர்)

**ஆத்ம ஞானம் :-**

ஈசுவரனை வெளியே தேடுதல் அஞ்ஞானம், தமக்குள்ளேயே இறைவன் இருப்பதையுணர்தலே ஞானம். இங்கு அதாவது தன்னுள் ஈசுவரனை உணர்ந்தவனே அங்கு அவருடைய பாதக் கமலங்களில் சேர்ந்து வாழ்வான்.

**கடவுள் :-**

ஒரு நாள் ஸ்ரீ இராமகிருஷ்ணர் பக்தர்களுடன் கடவுளைப்பற்றிச் சம்பாஷித்துக் கொண்டிருந்த போது, 'மதுரபாபு ' (தக்ஷினேசுவரத்துக்காளி கோவிலைக் கட்டுவித்த ராணி ராசமணியின் மருமகன்) ''ஈசுவரனும் இயற்கை நியதிகளின் படிதானே நடக்க வேண்டும் தம்மிஸ்டப்படியே நடக்க இயலாதல்லவா?'' என்று கூற, ஸ்ரீ இராமகிருஷ்ணர் ''அஃதெப்படி? அவர் தம் இஸ்டப்படியே நடக்கிறார் விரும்பிய வண்ணம் அவரால் நடக்கக் கூடும்'' என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு மதுரபாபு ''அவர் விரும்பியபடி இந்தச் செம்மலர் செடியில் வெண் மலர்களைப் பூக்கச் செய்ய முடியுமோ?'' என்றார். அதற்கு ஸ்ரீ இராமகிருஷ்ணர் ''நிச்சயமாய் அவர் அப்படிச் செய்யக்கூடும்'' அவர் திருவுளம் கொண்டால் இச்செடி வெண்மலர்களைப் பூக்கக் கூடும்'' என்றார். ஆனால் மதுரபாபு திருப்தியடைந்ததாகத் தோன்றவில்லை. சில நாட்கள் கழிந்தன. உண்மையில் ஒரு நாள் தஷினேசுவரத்தில் உள்ள மேற்கூறிய புஸ்பச்செடி ஒரு கிளையில் வெண்மலர்களையும் மற்றோர் கிளையில் சிவப்பு மலர்களையும் புஷ்பித்திருந்தது.

ஸ்ரீ இராமகிருஷ்ணர் இவ்விரண்டு சிறு கிளைகளையும் கொண்ட பெரிய கிளையை மதுரபாபுவிடம் கொண்டு போனார். அவர் ஆச்சரியம் கொண்டு ''சுவாமி இனி மேல் நான் உங்களிடம் எதைப்பற்றியும் வாதம் செய்வதில்லை'' என்று கூறினார்.

**மாயை :-**

மாயையின் இயற்கை என்னவென்று நினைக்கிறாய்? அது ஒரு குளத்தில் மிதந்து கொண்டிருக்கும் பாசியைப் போன்றது. வேண்டும் போது அப்பாசியை ஒதுக்கிவிடலாம் ஆனால் (நாம் கையை எடுத்தவுடனே) அது மறுபடியும் அந்த இடத்தை மறைத்துக் கொள்ளும். அதுபோலவே **நீ சிந்தனை செய்து சத்சங்கம் செய்யும் வரையிலும்** (இவ்வுலகத்தைப் பற்றி) **உண்மை விளங்கும்.** ஆனால் அவைகளை விட்டு நீங்கினவுடனே இம்மண்ணுலக ஆசைகள், மாயை என்னும் திரையினால் உன்னை மறைத்துவிடும்.

* (என் இறைதுணைகொண்ட இந்தப் படைப்பின் கருவுக்கு ஆதாரம் இவ்வார்த்தைகளே )



## 02) சுவாமி விவேகானந்தர் :-

(ஒரு குரு தேவரைக் கண்டு, பட்டப்படிப்பை பெற்றிருந்தும் துறவு பூண்டவர் )

**பாதை காட்டும் மதம் :-**

என்றாவது உலகம் தழுவிய மதம் (Universal Religion) என்ற ஒன்று உருவாக வேண்டுமானால் அது இடத்தாலும் காலத்தாலும் எல்லைப் படுத்தப்படாததாக இருக்கவேண்டும். அந்த மதம் யாரைப்பற்றிப் பிரச்சாரம் செய்கிறதோ அந்தக் கடவுளைப்போன்று அது எல்லையற்றதாக இருக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியன் தன் ஒளிக்கதிர்களை எல்லார் மீதும் சமமாக வீசுவது போன்று கிருஷ்ண பக்தர்கள் கிறிஸ்து பக்தர்கள், ஞானிகள், பாவிகள், எல்லோரையும் நாம் சமமாக எண்ணவேண்டும்.

அது பிராமண மதமாகவோ, பௌத்த மதமாகவோ, கிறிஸ்தவ மதமாகவோ, முகமதிய மதமாகவோ இருக்காமல் இவற்றின் ஒட்டு மொத்தமாக இருப்பதுடன், இன்னும் வளர்ச்சியடைய எல்லையற்ற இடம் உள்ளதாக இருக்கவேண்டும்.

**03) ஸ்ரீ சாரதாதேவியார்** (குருநாதர் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் வாழ்க்கைத்துணைவியார் - இவரும் ஆத்ம ஞானி, துறவி, குரு)

**இறைவனும் அருளும் :-**

சீடர் : "இறைவனின் அருள் எனக்கு எப்போது கிடைக்கும்?"

அன்னை : "ஒருவன் தவம் புரிந்தால் மட்டுமே கடவுளின் அருள் அவனுக்குக் கிடைத்துவிடும். என்பது போன்ற விதி எதுவும் கிடையாது பண்டைக் காலத்தில் வாழ்ந்த ரிஷிகள், தலைகீழும் கால்கள் மேலும் ஆக இருந்து கொண்டும், புனித நெருப்பின் முன்பு அமர்ந்து கொண்டும், ஆயிரமாயிரம் ஆண்டு காலங்களாகத் தவம் புரிந்தார்கள் அப்படி இருந்தும் கூட அவர்களும் மிகச் சிலரே கடவுள் அருளைப் பெற்றார்கள்."

**04) திருமூலநாயனார்** : (63 நாயன்மார்களில் ஒருவர் அகத்தியமுனிவர் காலம் இவர் காலம் )

**குருபற்றிய தெளிவு :**

இறைவனே குருவாக வந்து ஞானத்தை ஊட்டுகிறான் என்பது நமது சுயக் கொள்கைகளின் அடிப்படையாகும். ஆசாரியனைத் தெய்வமாகக் கண்டு வழிபடுவது ஒன்றே பூட்டைத் திறப்பதற்குரிய திறவுகோல் இந்த மூல உண்மையை அறிவுறுத்துகிறார் திருமூலர். குருவின் உருவத்தில் வந்து நமக்குத் திருவருள் புரிகின்ற இறைவனின் அந்தத் திருமேனியைத் தரிசிப்பதே ஞானத்திற்கு வேண்டிய பயிற்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவின் திருநாமத்தை உச்சரிப்பது குருபெருமானின் திருமொழிகளைச் (சத்சங்கங்களை) செவியால் கேட்பது அவனது திருவுருவத்தை எப்போதும் தியானிப்பது ஆகிய எல்லாமே மெய்ஞ்ஞானம் பெறுவதற்கான வழியாகும். இதனைப்பாடுகிறார் திருமூலர்.

இப்பாட்டில் ''தெளிவு'' என்று சொல்லப்படுவது 'ஞானம்'' அந்த ஞானத்தைப் பெறுவதற்கான முறைகளையும் 'தெளிவு' என்ற பொருட்படக் கூறுவர்.

**தெளிவு குருவின் திருமேனி காணல்**
**தெளிவு குருவின் திருநாமம் செப்பல்**
**தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்**
**தெளிவு குரு உரு சிந்தித்தல் தானே**



## 05) புத்தபிரான்

(குருவாகவும், தர்மத்தின் வழிகாட்டியாகவும் அவதாரங்களில் ஒன்றாகவும் கருதப்படுபவர் ஞானியே)

**கால சக்கரநியதி :-**

ஒரு அன்னை தனது மகன் மரித்து விட்டதாகப் புலம்பிக் கொண்டு புத்தர் இருந்த ஆச்சிரமத்திற்கு வருகிறார். புத்தரிடம் தனது மகனை உயிர்ப்பித்துத் தரும்படி வேண்டுகிறார். புத்தபிரான் கூறியதாவது ''தாயே நீர் சென்று, எந்த ஒரு வீட்டில் இதுவரையில் ஒரு மரணம் சம்பவிக்க வில்லையோ, அங்கிருந்து சிறிதளவு ''எள்ளு'' கொண்டு வாரும் என்பதே! தனது மகவை இழந்த தாய் வீடு வீடாய்ச் சென்றும் அவரால் மரணம் சம்பவிக்காத வீட்டையே காணவில்லை. தனது மனதை மாற்றிக் கொண்ட அவர் தனது மகனின் இறுதிக் காரியங்களை முடித்துச் சாந்தி பெற்றார்.



## 06) இயேசு கிறிஸ்துநாதர் (குருவானவர், பாவங்களைச் சுமப்பதனைக் கூறி அன்பை மொழியாகக் கொண்ட அவதாரர்)

**i) உடலே ஆலயம் உள்ளமே மோட்சம் :-**

இயேசு நாதர் தன்னைச் சிலுவையில் அறைந்து கொல்ல இருக்கும் அரசின் செயலை அறிந்தவராய்க் கூறுகிறார். ''இந்தக் கோயிலை இடியுங்கள் இதை மூன்று நாட்களில் கட்டி எழுப்புவேன்'' என்கின்றார் அவரைச் சிலுவையில் அறைந்து களிப்படைந்த காவலர்கள், அவரைக் கல்லறையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்து மூடிவிடுகிறார்கள் மூன்று நாட்களின் பின் அவர் சீடர்களுக்கு ஒளி நிறைந்த உடலோடும் ஆணி அறைந்த காயங்களோடும் காட்சி கொடுத்தார்.

**ii) குற்றமே புரியாதவர் யார்!**

ஒரு ஊரில், ஒரு விபச்சாரி "அவரை அவ்வூர் மக்களில் சிலர் கல்லால் அடித்துக்கொல்ல முயல்கிறார்கள். அவளின் வழக்கு இயேசுவிடம் வருகிறது. அவளோ இயேசுவிடம் அடைக்கலமாகிறாள். இந்த நிலையைச் சுமுகமாகத் தீர்த்து வைக்க எண்ணிய இயேசு கூறியது. உங்களில் எவர் ஒரு குற்றமும் தனது வாழ்க்கைக் காலத்தில் செய்திருக்க வில்லையோ அவர் முதற் கல்லை இப்பெண் மீது வீசி அடியுங்கள்" சிறிது நேரத்தில் அங்கிருந்த எல்லோருமே எதுவும் செய்யாமல் கலைந்து சென்றனர்.

**iii) இறைவன் வேண்டுவது :-**

சீடர் :- "இயேசுவே! வரி செலுத்துகிறோம் அரசுக்கு அதேபோல் இறைவனுக்கும் செலுத்தும் தொகை என்னவோ?"

இயேசு :- ''நாணயத்தின் ஒரு பக்கம் பெறுமதியும் மறுபக்கம் அரசின் சின்னமும் இருக்கிறது. எனவே அரசுக்குச் செலுத்த வேண்டியதை அரசுக்கும், இறைவனுக்குச் செலுத்த வேண்டி உள்ளதை அவருக்கும் செலுத்தி விடுக''.

**iv) கடவுளைக் காணும் ஆர்வம் :-**

ஒரு கடற்கரை ஓரத்தில் இயேசு நடந்து கொண்டிருக்கையில் ஒருவர் இறைவனைத்தான் காண உபாயம் கூறும்படி கேட்டார். இயேசு அந்த நபருடன் கடலில் இறங்கி, அவரைக்கடல் நீரினுள் சிறிது நேரம் அமிழ்த்தி வைத்திருந்தார். அப்போது அவரால் இனிமேல் மூச்சை அடக்க முடியாத கட்டம் வந்ததும் திணறியடித்து நீரின் மேல் எழுந்தார்.

இந்த அனுபவத்தை அவருக்கு எடுத்துரைத்து,'' இப்போது இந்த நீரில் இருந்து எப்படி மூச்சுக்காகத் திணறியடித்துக் கொண்டாயோ, அதுபோன்ற ஆர்வம் உனது உள்ளத்தில் இருந்து எழும்மாத்திரத்தில் அவனைக் காணமுடியும்" என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**07) நபிகள் நாயகம் - முகம்மது நபி**
(இறை தூதுவராகவும், குருவாகவும்,
இறுதித் தூதுவராகவும், ஞானப்பாதையை இயம்பியவர் )



**i) மன்னிப்போம் :-**

"ஒரு சகோதரன் தப்புச் செய்தால், அவனை எத்தனை முறை மன்னிக்க வேண்டும்? ஒரு சகோதரன் நூறு முறை தப்புச் செய்தாலும் அத்தனை முறையும் நீ அவனை மன்னிக்க வேண்டும்"- முஹம்மது நபி

**ii) கடமை எப்போது முடிகிறது :-**

ஒரு குடும்பத்தில் தாய், தந்தையருக்கான கடமை முடிந்ததாகக் ஒரு பிள்ளை கருதிக் கொள்ளலாகாது. அந்தப்பிள்ளை தாயின் வயிற்றில் இருக்கும்போது தனது கால்களால் இடப்பக்கமும், வலப்பக்கமும் மாறி மாறி உதைத்த போது அந்தத்தாய்க்கு ஏற்படுத்திய வலியை ஈடு செய்யும் அளவுக்கு எந்தப்பிள்ளையாலும் கடமை செய்து தீர்த்து விட முடியாது.

**08) ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா** (அவதாரங்களும், குருவுரித்தும், படைப்பின் மூலமாக கருதப்பட்ட நித்தியர்)



*நம்மை நாம் தெரிந்து கொள்வோம்*

**எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.**
**எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.**
**எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்**
**உன்னுடையது எதை இழந்தாய்? எதற்காக நீ அழுகிறாய்,**
**எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?**
**எதை நீ படைத்திருந்தாய் , அது வீணாவதற்கு**
**எதை நீ எடுத்துக் கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.**
**எதை கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.**
**எது இன்று உன்னுடையதோ அது நாளை மற்றொருவருடையதாகிறது**
**மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்**
**இதுவே உலக நியதியும், எனது படைப்பின் சாராம்சமுமாகும்.**

**கடவுள் அனுபவம் :-**

எவன் ஒருவன் தனது உடலின் ஒவ்வொரு அணுவினுடாகவும் ஞானத்தை மிளிரச் செய்கிறானோ அவனே என்னை முழுமையாக அறிந்தவன்.

**முற்றும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org